விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 26 ஞாயிற்றுக்கிழமை (12.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
[C-3477]
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392; 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வர்த்தமானி நேற்று வெளியானது

## யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர் எண்ணிக்கை உயர்வு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 23 பேரிலிருந்து 27 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் வேலணை பிரதேசசபை, சுழிபுரம், மானிப்பாய், புத்தூர் பிரதேசசபை, பருத்தித்துறை, சாவகச்சேரி, காரைநகர், வட, தென்மேற்கு பிரதேசசபை, கரைச்சி, பூநகரி பிரதேச சபைகளுக்கான உறுப்பினர்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.சிறைச்சாலையில் மாரடைப்பால் கைதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாக யாழ் சிறைச்சாலையில் கைதி ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

கச்சாய் வீதி கொடிகாமத்தை சேர்ந்த அர்சுணன் தர்மலிங்கம் (வயது 65) என்பவரே 04

### சதொசவில் 65 ரூபாயுக்கு தேங்காய்

(கொழும்பு)

குறைந்த விலையில் நுகர்வோருக்கு தேங்காயை வழங்குவதற்கு சதொச நிறுவனம் துரித நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நுகர்வோர் 65 ரூபாயுக்கு சதொசவில் 15

### மழையினை சாதகமாக பயன்படுத்தி அச்சுவேலியில் பாரிய கொள்ளை

#### திருமண நிகழ்வில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மேற்கு கைத்தொழில் பேட்டை வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு துணிகர திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த திருட்டுசம்பவத்தை அடுத்து அச்சுவேலி பகுதியில் அமைந்துள்ள இரு வீடுகளில் திருட்டு முயற்சியும் நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் முன் கதவினை உடைத்து உள்ளே சென்ற திரு 15

### கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே சமகால அரசியல் நிலை தொடர்பாக மன்னார் ஆயர் இல்லத்தில் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் ஏற்பாட்டில் வட, கிழக்கு சமகால அரசியல் தொடர்பான விசேட கூட்டம்மன்னார்மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட இலங்கை 15



### 2025 இல் அனைவருக்கும் வீடு வழங்குவதாக சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 2025ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் வீடு என்ற கருத்திட்டக் கனவு உண்மையில் பிரதிபலிக்கும் என்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத் 15

### அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் நடைமுறைக்கு இன்னும் வரவில்லை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படுகின்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விஷேட பண்ட வரி குறைக்கப்பட்ட போதிலும் அவற்றின் பிரதிபலன் நுகர்வோருக்கு கிடைப்பதற்கு இன்னும் சில நாட்களாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 8ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் நிதியமைச்சர் மங்கள சமர 15

### நீரில் மூழ்கியது மணற்காடு

(கரணவாய்)

கடும் மழைகாரணமாக வடமராட்சி கிழக்கு மணற்காடு கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் தொடர் மழை பெய்யுமாயின் அப்பகுதி மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறவேண்டிய 15

### தமிழர் மீது இராணுவம் அத்துமீறல்

#### முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஏ.பி.செய்தி நிறுவனத்துக்கு கடிதம்




(யாழ்ப்பாணம்)

வடக்கில் தமிழர்கள் சிலர் மீது இராணுவத்தினரால் மீறல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமான அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் 04

### மட்டக்களப்பு பொது அமைப்புகள் வடக்கு முதல்வருடன் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பிலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். இன்று காலை இச்சந்திப்பு இடம்பெறும்.

இச் சந்திப்புக்கான குழுவில் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் புத்திஜீவிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இவ்வாறு வடக்கு முதலமைச்சரை சந்திக்கவரும் இக் 15

மகாராஜா பொதிகள் சேவை GTV Express
நத்தார் புதுவருடத்திற்கான விசேட விலைக்கழிவுடனான சேவை 13.11.2017 இல் இருந்து ஆரம்பம்...
சிக்கன பொதிகள் சேவை
UK Rs.350/- SWISS Rs.400/- CANADA Rs.500/-
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக்கழிவுடனான சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
No.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4338 / 021 495 5024
No.25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 493 0200 / 076 690 8961
[C-354]

### மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசுக்கு தொடரும் அழுத்தங்கள்

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பதிலளிக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் நேற்று முன்தினம் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க செய்தி நிறுவனமான அசோசியேட்டட் பிரெஸ் அண்மையில் வெளியிட்ட விசாரணை அறிக்கையை தொடர்ந்தே, இலங்கை அரசு மீதான அழுத்தங்கள் மீண்டும் வலுப்பெற்றுள்ளன.

அசோசியேட்ட் பிரெஸ் நிறுவனமானது, கடந்த புதன்கிழமை விசாரணை அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அதில், இலங்கையில் 2009 ஆம்ஆண்டுடன்போர்நிறைவடைந்த போதிலும், தம் மீதான சித் 16

### பியர் விலைகுறைப்பு நாட்டுக்கு ஆபத்து

#### அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)

பியர் ரக மதுபானத்தின் விலை குறைப்பினால், சட்டவிரோத சாராயத்தின் பயன்பாட்டை தடுக்க முடியாது எனவும் இவ்வாறு பியருக்கான வரி நீக்கத்தினால் அரசாங்கத்துக்கு கிடைக்கவிருந்த வருமானம் கிடைக்காமல் போவது 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பணியாளர் தேவை

- வடை, வாய்ப்பன் தயாரிப்பாளர்
- பற்றிஸ், சம்சா, றோல்ஸ் தயாரிப்பாளர்
- சிற்றுண்டிசாலை ஊழியர்கள்

உடனடியாகத் தேவை.

**மாருதம்**
**யாழ்ப்பாணம்**
0777837599, 0777837600

(1310)


# நாடு முழுவதும் 1800பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள பொலிஸ் நிலையங்களில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணி முதல் நேற்று அதிகாலை 3.00 மணி வரையில் மேற்கொள்ளப்பட்ட விசேட பொலிஸ் நடவடிக்கையின் போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 800 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.


இவர்களில் சந்தேகத்தின் பேரில் 962 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 758 பேரும் ஏனைய குற்றச் செயல்களுடன் தேடப்பட்டு வந்த 86 பேரும் அடங்குவதாகவும் தலைமையகம்நேற்று வெளியிட்டுள்ள அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது. (ம)


## வேலையாட்கள் தேவை

பேக்கறி ஒன்றில், கல்பணிஸ், மடத்தல், கச்சான் பிஸ்கட் போன்ற தயாரிப்புக்களை செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை. (இருபாலாரும்)

**தொடர்புகளுக்கு:**
(1306) **077 239 5785**


## கண்ணீர் அஞ்சலி



அமரர் **சாலமோன் அந்தோனிப்பிள்ளை**

பிறப்பு: 23.11.1933 – இறப்பு: 11.11.2017

கிளி/யூனியன்குளம் அ.த.க பாடசாலை அதிபர் திருமதி கிறிஸ்ரினம்மா அருள்தாஸ் அவர்களின் தந்தை சாலமோன் அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (11.11.2017) அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர் சங்கம்,**
**கிளிநொச்சி கல்வி வலயம்**

(சி-356)




## கண்ணீர் அஞ்சலி



**ஐயாக்குட்டி கந்தர்**

பிறப்பு: 17.11.1929 – இறப்பு: 09.11.2017

கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலய அதிபர் திரு.க.ஞானசீலன் அவர்களின் தந்தையார் 09.11.2017இல் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**அதிபர் சங்கம்,**
**கிளிநொச்சி கல்வி வலயம்**

(சி-362)


# NORTH LANKA IIT

அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும்
பதவி உயர்வுக்குமான UGC அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள்

**B.SC.in Computer Science**
Entry Qualification: O/L or A/L
Duration: 2-3 Years

**Top Up in B.SC.in ComputerScience**
Entry Qualification: 2 Years Diploma or HND
Duration: 1 Year

**P.G.D in Computer Science**
Entry Qualification: Any Degree
Duration: 1 Year

**Degree in Physical Education & Sports**
Entry Qualification: 2 Years Diploma in University
Duration: 1 Year

**Master of Business Administation [M.B.A]**
Entry Qualification: Any Degree
Duration: 1 Year

**Doctor of Business Administation [D.B.A]**
Entry Qualification: MBA/ MSC.
Duration: 2-3 Years

**M.SC.in Computer Science**
Entry Qualification: B.Sc in Computer Science or P.G.D in Computer Science
Duration: 1 Year

**Master of Education [M.E.D]**
Entry Qualification: B.Ed /P.G.D.Ed.
Duration: 1 Year

**Doctor of Education [D.Ed.]**
Entry Qualification: M.Ed
Duration: 2-3Years



Contact
0767504535
0764092666
0214927088

(சி-361)

People's Bank Building, Top Floor, Stanly Road, Jaffna.

# சிங்கப்பூரில் தமிழுக்கு கொடுக்கப்பட்டுள்ள அங்கீகாரம் தமிழர்களுக்குப் பெருமையே

## யோகேஸ்வரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சிங்கப்பூரில் அரச கரும மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழியும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை தமிழர்களுக்கு பெருமையைத் தருகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவு திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கப்பூரின் வளர்ச்சியில் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் பிரதானமானது. இதனாலேயே சிங்கப்பூரின் அரச கரும மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழியும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது தமிழர்களுக்குப் பெருமையைத் தருகிறது. இதே வேளை தமிழர்கள் அந்த நாட்டின் அரசியலுக்கு உச்ச நிலையில் பங்களிப்பு செய்துள்ளனர். இவ்வாறானவர்கள் அந்த நாட்டினால் மதிக்கப்படுகின்றனர். இந்தச் செயற்பாட்டை எமது நாட்டின் ஆட்சியாளர்களும், அதிக மக்கள் தொகையை கொண்ட இனத்தவரும் இதனைக் கற்றுக் கொண்ட பாடமாக எடுத்துக் கொண்டு தமிழர்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கு உரிய வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (இ)

# மழை வெள்ளத்தால் முகாம் மக்கள் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக முகாமகளிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலரின் வீடுகளின் சுவர்களும் வெள்ளத்தினால் இடிந்து விழும் நிலையிலுள்ளது.

வலி.வடக்கிலிருந்து கடந்த 26 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் தற்காலிகக் கொட்டகைகளையும் மண்ணால் கட்டப்பட்ட சிறு சுவர்களைகொண்ட வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அவர்களின் சொந்த நிலமானது இன்னமும் இராணுவத்தால் விடுவிக்கப்படாமையால் இம் மக்கள் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக யாழில் பெய்து வரும் தொடர் மழையினால் இம் முகாம்களில் மழைநீர் தேங்கியுள்ளது.

மழைநீர் அதிகமாக தேங்கியுள்ள நிலையில் சில வீடுகளுக்குள்ளும் புகுந்துள்ளதுடன் சில வீடுகளின் சுவர்களும் வெள்ளத்தில் கரையுண்டு வீழ்ந்து போயும் உள்ளன. இதனை தடுக்கும் வகையில் மழை வெள்ளத்தை அருகில் உள்ள வெற்றுக்காணிக்குள் விட்ட போதும் அக் காணி உரிமையாளர் தகராறு செய்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் தொடர்ச்சியான மழை காரணமாக கூலி வேலைகளுக்கும்செல்ல முடியாத நிலையில் துன்பப்படும் தமக்கு எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் கடந்த வாரம் தமக்கு பிரதேச செயலகத்தினூடாக அரிசி,பருப்பு போன்றன வழங்குவதாகக் கூறப்பட்ட போதும் அவை கூட இன்னமும் வழங்கப்படவில்லை என அம்மக்கள் கவலை வெளியிட்டனர்.

அரசாங்கம் தமது காணிகளை முற்றாக விடுவித்தால் தாம் தமது ஊரிற்கு சென்று வீடுகளை அமைத்து தொழில்களை செய்து வாழ முடியும் எனவும் முகாமில் வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-4)

# பாடசாலையில் சட்டக்கல்வி

## ஜனாதிபதி தகவல்



(கொழும்பு)

நாட்டின் பொதுச் சட்ட விதிகள் குறித்த அறிவை மாணவர்களிடம் மேம்படுத்தும் நோக்கில், பாடசாலைகளில் சட்ட கல்வியை அறிமுகப்படுத்த அரசு எண்ணியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

'குழந்தைகளைக் காப்போம்' என்ற தேசிய திட்டத்தின் கீழ், பொலநறுவை ரோயல் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் குழந்தைகளின் உடல்வள, உளவள அபிவிருத்திக்கு ஏற்ற ஒரு சூழலைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கை வந்த ஜேர்மன் பிரஜை நீரில் மூழ்கிப்பலி

(கொழும்பு)

இலங்கைக்கு வந்த ஜேர்மன் நாட்டுக்குப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்காலை கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த ஜேர்மன் பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தங்காலை, மெடில்ல பகுதியிலுள்ள ஹோட்டலில் ஜேர்மன் தம்பதியினர் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அருகிலுள்ள கடலில் குளித்துக் கொண்டிருந்த நிலையில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட அலையில் சிக்கிய ஜேர்மன் பிரஜை மீட்கப்பட்டு, தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (இ)

# 2,100 ஆசிரியர்களை உள்வாங்க நடவடிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர கல்வியின் புதிய தொழில்முறை பாடநெறிக்காக 2 ஆயிரத்து 100 ஆசிரியர்களை உள்வாங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் குறித்த பாடநெறிக்கு நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலமான ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும் எனவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், இதற்காக போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டு புள்ளிகளின் அடிப்படையிலேயே நேர்முகத் தேர்வினூடாக ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது. (இ)

# எள்ளு ஏற்றுமதி

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு எள்ளு ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக மத்திய மாகாண விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது. தம்புள்ளை கலேவெல லக்கல பிரதேசங்கள் எள்ளு பயிரிடுவதற்காகதெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கென எதிர்வரும் பெரும் போகத்தில் ஆயிரம் ஹெக்டேயர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் எள்ளு பயிரிடப்படவுள்ளது. (இ)

# வாழைத்தார் திருடிச் சென்றவர் பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு

## ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பலாந்தோட்டை, கொக்கல்லயில் நேற்று அதிகாலை பொலிஸாருடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் சந்தேக நபர் ஒருவர் பலியானார்.

கொக்கல்ல, மைம சந்தியில் நேற்று அதிகாலை பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக சிறு லொறியொன்று வந்தது. அதை நிறுத்துமாறு பொலிஸார் சைகை காட்டினர்.

ஆனால், லொறியை நிறுத்துவதற்குப் பதிலாக, லொறியின் உள்ளேயிருந்த நபர் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இதையடுத்து பொலிஸாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

பின்னர், குறித்த லொறியைத் தேடிச் சென்ற பொலிஸார், சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து சுமார் இரண்டரை கிலோ மீற்றர் தொலைவில் ஒருவர் இறந்து கிடந்ததைக் கண்டனர். அவர் லொறியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் என்று, அடையாளம் காணப்பட்டார்.

அவருக்கு அருகே பெருந்தொகை வாழைத் தார்கள் கிடந்ததையும் பொலிஸார் கண்டனர்.

இதனிடையே, அம்பலாந்தோட்டை நீதிமன்றில் லொறியின் சாரதியும் மற்றொருவரும் சட்டத்தரணியின் உதவியுடன் சரணடைந்தனர்.

அவர்களை விசாரித்த போது, வாழைத் தார்களைத் திருடிச் சென்றபோதே பொலிஸார் வழிமறித்ததாகவும், பிடிபட்டுவிடுவோம் என்ற பயத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், பொலிஸாரின் சூட்டுக்கு இலக்காகிய சகாவையும் வாழைத் தார்களையும்சற்றுத்தொலைவில்இறக்கி விட்டுத் தப்பிச் சென்றதாகவும் தெரிவித்துள்ளனர். (இ)

# இலங்கை வரும் சுற்றுலாப்பயணிகளின் சுகாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் சுகாதாரத்தை மேம்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாட்டவர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குவதற்கென தேசிய சுகாதார பாதுகாப்பு நிதியம் அமைக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கென ஒவ்வொரு வெளிநாட்டவர்களிடம் இருந்து 50 அமெரிக்க டொலர்களை அறவிட சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தொழில், வியாபார நடவடிக்கைகள், கல்வி போன்ற நடவடிக்கைகளுக்காக 60 ஆயிரத்திற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் தற்சமயம் இலங்கையில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி வழங்க தென்கொரியா முன்வருகை

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை தென்கொரிய அரசாங்கம் வழங்கவுள்ளது.

நியாயமான கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இந்தக்கடனை வழங்குவதற்கு தென்கொரிய அரசாங்கம் உடன்பட்டுள்ளது.

2017–2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் இத் தொகை வழங்கப்படவுள்ளது. நிவாரண வட்டியின் அடிப்படையின் கீழ் இந்த கடன் பத்து வருட காலத்திற்கும், 40 வருடகாலத்திலும் திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் வழங்கப்படவுள்ளது.

கொரிய நாட்டுக்கான ஏற்றுமதி, இறக்குமதி வங்கியின் பொருளாதார புரிந்துணர்வு நிதியம் இந்த கடனை வழங்குகின்றது. இது தொடர்பில் கொரிய அரசாங்கத்துடன் இதற்கான உடன்படிக்கை செய்துகொள்ளப்படவுள்ளது. கொரியா மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவி வரும் நட்புறவு மற்றும் பொருளாதார புரிந்துணர்வை மேம்படுத்தும் நோக்கில் இந்த கடன்உதவி இலங்கைக்கு வழங்கப்படுவதாக தென்கொரியா தெரிவித்துள்ளது. (இ)

## 3 கோடி 23 இலட்சம் பெறுமதியிலான அமெரிக்க டொலர்களுடன்

# மலேசிய பிரஜைகள் நால்வர் கைதாகினர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மூன்று கோடி 23 இலட்சம் ரூபா பெறுமதியான 208000 அமெரிக்க டொலர்களை இலங்கையிலிருந்து மலேசியாவுக்கு கொண்டு செல்ல முயற்சித்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கவிமானநிலையத்தில் வைத்தே மலேசிய பிரஜைகளான இவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

### இந்திய பிரசிடென்ட் லெவின் அணியுடனான பயிற்சி போட்டி

# இலங்கை முதல் நாளில் 6/411 ஓட்டங்கள் குவிப்பு



இந்திய பிரசிடென்ட் லெவின் அணிக்கெதிரான 2 நாட்கள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் இலங்கை அணி முதல் நாளில் 6 விக்கெட்டுக்களை இழந்து 411 ஓட்டங்கள் குவித்துள்ளது.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் வருகிற 16ஆம் திகதி கொல்கத்தாவில் தொடங்குகிறது. இதற்கு முன்னோட்டமாக இலங்கை அணி இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் விளையாட தீர்மானித்தது.

இந்திய பிரசிடென்ட் லெவின் அணிக்கெதிரான அந்த பயிற்சி ஆட்டம் கொல்கத்தாவில் உள்ள ஜாதவ்பூர் யுனிவர்சிட்டி கேம்பஸில் உள்ள மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய பிரசிடென்ட் லெவின் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணிக்கு சமரவிக்ரம, கருணாரத்ன இணை ஆரம்பம் வழங்கியது.

சமரவிக்ரம 77 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். கருணாரத்ன 50 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரிட்டையர்ட் ஹேர்ட் மூலம் வெளியேறினார்.

அடுத்து வந்த திரிமன்னே 17 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தாலும், மத்யூஸ் 54, டிக்வெல ஆட்டமிழக்காமல் 73, பெரேரா 44 பந்துகளில் 48, சில்வா 36 ஓட்டங்களும் சேர்க்க,

இலங்கை அணி முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் 88 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 411 ஓட்டங்கள் குவித்துள்ளது.

## மாரடைப்பால்...

மேற்படி உயரிழந்தவராவார் குற்றச்செயல் ஒன்றுடன் தொடர்புபட்டதான வழக்கு ஒன்றில் சந்தேகத்தின் பேரில் கடந்த ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதியில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று முன்தினம் உடல் கடுமையாக சோர்ந்து காணப்பட்டதுடன் சுகவீனமுற்றிருந்துள்ளார். உறவினர்கள் சந்திக்க சென்ற போது அவர்களிடம், தன்னை வைத்திய சாலையில் அனுமதிக்கும்படி கோரியுள்ளார்.

இருப்பினும் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையிலோ யாழ் போதனா வைத்தியசாலையிலோ அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று காலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயங்கிய நிலையில் இருந்துள்ளார். அப்போது உறவினர்கள் பார்க்க சென்ற வேளையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அவரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## தமிழர் மீது இராணு...

ஒன்றிலேயே அவர் இதனை உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் தாம் முன்னர் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக, அது கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சரவதேசப் பொறிமுறை அமைக்கப்பட்டிருந்தால், இத்தகைய இராணுவ கொடுஞ் செயல்கள் இடம்பெறுவதற்கு தடையாக இருந்திருக்கும்" என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி:வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஆட்சியிலும் தமிழர்களுக்கு எதிரான சித்திரவதைகள், பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெறுவதாக, கடந்த புதன்கிழமை அசோசியஸ் பிரஸ் செய்தி நிறுவனம் ஒரு ஆய்வை வெளியிட்டிருந்தது.

அது தொடர்பாகவே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம்
1953 - 09 - 03



மறைவு
2017 - 11 - 09

### சுப்பையா சிறீதரன்

**(மெக்கானிக் சிறீ)**

சுன்னாகம் தெற்கு, சிவபூதராஜர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சிறீதரன் (மெக்கானிக் சிறீ) 09.11.2017 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும் சதாசிவம் - குணபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்பு கணவனும் நிறோஜா, கரன் (டுபாய்), கோவி ஆகியோரின் அன்புத் தந்தையும் றமேஸ், லேதினி ஆகியோரின் மாமனாரும் சங்கவியின் அன்புப் பேரனும் விஜியமலர், பவானிமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ராசா, சுந்தரலிங்கம், பாலன், ராஜேஸ்வரி, அப்பன் (கனடா), விக்கி (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சிவபூதராஜர் வீதி,
சுன்னாகம் தெற்கு. (1309)

தகவல்: குடும்பத்தினர்
077 465 9950, 077 134 5927

## கண்ணீர் அஞ்சலி

எமது பளைக்கோட்டத்தின் கிளி/பளை இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. க.ஞானசீலன் அவர்களது தந்தையார்

### ஐயாக்குட்டி கந்தர்



அவர்கள் 09.11.2017 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிறப்பு 17.11.1929 இறப்பு 09.11.2017

**கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள்**
பளைக்கோட்டம்


**FLORENCE NIGHHTINGAALE**
**School of Nursing**
**புளோரன்ஸ் நைற்றிங்கேல்**
**தாதியர் பயிற்சிப் பாடசாலை**



- ஒரு வருட கால பயிற்சிப் பாடநெறி
- மூன்று மாத கால தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்

தகைமைகள்
O/L 6 பாடம் சித்தி
வயது 18-35 வரை

அலுவலக நேரம்
8.30 - 4.00 வரை

அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்

தொடர்புகளுக்கு : 077 718 6438, 021 492 8916
முகவரி : கே.கே.எஸ் றோட், மருதனார்மடம் (ஆஞ்சநேயர் கோயில் முன்பாக)

குறிப்பு: முந்திக் கொள்ளும் முதல் 5 பேருக்கு எமது பாடசாலை சீருடை இலவசம்.
மேலும் 15 பேருக்கு பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

(1307) பதிவு இல: P25/0087

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சு.க. மூன்றாமிடத்திற்கு தள்ளப்படும்



## முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூன்றாம் இடத்திற்கு தள்ளப்படும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் உத்தியோகபூர்வமாக போட்டியிடும் சுதந்திரக்கட்சி படுதோல்வியடையும்.

சுதந்திரக் கட்சி மூன்றாம் நிலைக்கு தள்ளப்படும் என்பதனை ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் நன்கு அறிவார்கள்.

சுதந்திரக் கட்சி இம்முறை ஜே.வி.பியுடனே மோதும். சுதந்திரக் கட்சி தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் வலை போன்று செயற்படுகின்றது. கூட்டு எதிர்க்கட்சியை மீளவும் ஏமாற்றிவிட முடியாது எனத் தெரிவித்துள்ளார். (இ)






# இராசி பலன்

12.11.2017

ஐப்பசி 26, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

நவமி மாலை 5.08 மணிவரை

மகம் பிற்பகல் 4.07 மணிவரை

சுபநேரம் 9.06-10.36 மணிவரை

இராகுகாலம் 4.36-6.06 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| - | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம், அத்தம் | | ராகு |
| கேது | | | சந் |
| | சனி, புத | சூரி, சுக், குரு | செவ் |

**மேஷம்:** பூர்வீகச் சொத்துகளால் ஆதாயமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, ரோக பயமுண்டு, இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியத்தில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், ஊர் மாற்றம் இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**துலாம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** சான்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் விலகுவர், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மகரம்:** பிறர் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**கும்பம்:** குடும்பத்தினிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**மீனம்:** வீட்டுப்பணிகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.





ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த கல்விக்கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வினை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை அதிபர் க.கெங்காதரகீர்த்தி நாடாவெட்டி ஆரம்பித்து வைத்து கண்காட்சியினை பார்வையிடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- P.K.சக்தி)

# ஐந்து கண் மதகு வான் கதவுகள் திறக்கப்படவில்லை




(யாழ்ப்பாணம்)

இளவாலை வட மேற்கு ஜே/222 கிராம உத்தி யோகத்தர் பிரிவிலுள்ள ஐந்து கண் மதகின் வான் கதவுகள் திறக்கப்படாததால் மழைநீர் வழிந்தோட முடியாது தேங்கியுள்ளது. இதனால் பிரதேச மக்கள் அசௌகரியங் களுக்காளாகியுள்ளனர்.

குறித்த மதகு கடந்த 3 மாத காலத்திற்கு முன்னர் முழுமையாக புனரமைக்கப்பட்டு மழை வழிந்தோடும் வகையில் வான் கதவுகள் அமைக்கப்பட்ட போதிலும் வான் கதவுகள் இது வரை திறக்கப்படாதால் தற்போது குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் இளவாலை வட மேற்கு சேர்ந்தாங்குளம் வாழ்வக தாழ்நிலப் பிரதேச மக்களின் வீடுகளுக்குள் மழைநீர் உட்புகுந்துள்ளது.

மழைநீர் வழிந்தோட முடியாதவாறு பல நாட்களாக வெள்ளம் தேங்கி நிற்பதால் குறித்த பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருவதாக பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு உரிய நடவடிக்கையெடுக்குமமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-104)




# செயற்கைக்கால் பொருத்தும் அமைப்பு அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

"காலமக்கவெட்டிற்கான சகோதரத்துவம்" எனும் அமைப்பினால் நவீன முறையிலான செயற்கைக்கால் பொருத்தும் அமைப்பு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வங்குரார்ப்பண நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்களான பொ.ஐங்கரநேசன், அ.பரஞ்சோதி, பா.கஜதீபன், கே.சயந்தன், தவநாதன், சி.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மற்றும் தேவை நாடிய பொது மக்கள், நிறுவன உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

உடல்இயக்கங்களுக்கேற்ப நவீன முறையில் வளைந்து கொள்ளக்கூடிய முறையில்வடிவமைக்கப்பட்டுள்ள இச் செயற்கை கால்கள் தமக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தெரிவித்துள்ளனர். தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கான செயற்கை அவயவங்கள் இந் நிறுவனத்தினால் இலவசமாக வழங்கப்பட்டன. (இ)

# கல்விக்கு முன்னுரிமை கொடுத்தது சு.க.தலைமையிலான இந்த அரசே

## அமைப்பாளர் அகிலதாஸ் தெரிவிப்பு



(கரணவாய்)

கல்விக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசாங்கமாக சுதந்திரக்கட்சி தலைமையிலான நல்லாட்சி அரசு இருந்து வருவதாக வடக்கு மாகாணசபை உறுப்பினரும் அக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான சி.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

வீராணன் தோட்டம் கரணவாய் கரவெட்டியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஐந்தாம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வாழ்வாதாரத் தேவையுடைய பெண்களுக்கான தையல் இயந்திரங்கள், அண்மையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரல்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக அகில இலங்கை அளவில்நடத்தப்படும்கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரமணவர்கள் ஒரு பிரிவாகவும், பாடசாலை மாணவர்கள் அல்லாத ஏனையோர் திறந்த பிரிவாகவும் இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.

கவிதை- "ஆஹா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி" என்ற தலைப்பில் மாணவர்கள் ஏ4 தாளின் ஒரு பக்கத்திலும், திறந்த பிரிவினர் ஏ4 தாளின் இரண்டு பக்கங்களிலும் உள்ளடங்குமாறு தயாரித்தல் வேண்டும்.

கட்டுரை-மாணவர்கள் "மனிதம் உயர உழைப்போம்", "இலாபப் பசிக்கு இரையாகும் இயற்கைச்சூழல்" ஆகிய தலைப்புகளில் யாதாயினும் ஒன்றினைத் தெரிவு செய்து 300 சொற்களுக்கு குறைவுபடாத வகையில் தயாரித்தல் வேண்டும். திறந்த பிரிவினர் "ஒக்டோபர் புரட்சியும் இன்றைய உலகும்", "சோசலிசப் புரட்சியும் மனித உரிமைகளும்" ஆகிய தலைப்புகளில் யாதாயினும் ஒன்றினைத் தெரிவு செய்து 500 சொற்களுக்கு குறைவுபடாத வகையில் தயாரித்தல் வேண்டும்.


ஆக்கங்கள் யாவும் சுயமாகப் போட்டியாளர்களால் எழுதப்பட்டவையாகவும், ஏலவே பிரசுரிக்கப்படாதவையாகவும் அமைதல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவற்றையும் எதிர்வரும் 05.12.2017 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுத் தபாலில் தேசிய கலை இலக்கியப் பேரவை, இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள பேராசிரியர் க.கைலாசபதியுடைய நினைவு நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 077 002 7621, 071 347 3926, 076 528 3003 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)

# பெரும்பான்மை பெருவெற்றி

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

தமிழ்க்குடும்பங்கள் பல வருடங்களுக்கு முன்னர் சராசரியாக ஐந்து பிள்ளைகளைக் கொண்டிருந்தன. ஆனால், இப்போது தமிழ்க் குடும்பங்கள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள விரும்புவதில்லை. தமிழர்கள் குழந்தைகளைக் குறைவாகப் பெற்றுக் கொள்வது எதிர்காலத்தில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று வடக்கின் முன்னாள் விவசாய அமைச்சரும் மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்ச்சி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயின்ற பல பாடசாலைகளில் இன்று முப்பது, நாற்பது மாணவர்கள் மாத்திரமே பயின்று கொண்டிருக்கின்றனர். மாணவர்களின் எண்ணிக்கைக் குறைவால் பல பாடசாலைகளை மூடிவிடலாம் என்ற கருத்துகள்கூட முன்வைக்கப்படுகின்றன. இதற்கு நகரங்களில் உள்ள பிரபலமான பாடசாலைகளில் மாணவர்கள் பயில விரும்புவதையே பலரும் காரணமாகக் கூறி வருகின்றனர். கிராமப் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து வருவதற்கு இது ஒரு காரணமாக இருந்தாலும் இதுவே பிரதான காரணம் அல்ல.

யுத்தத்தினால் ஒருபுறம் பெருந்தொகையான தமிழ் மக்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து போக, இன்னொருபுறம் இனப் பெருக்க வீரியம் உள்ள ஒரு தலைமுறை இளம்சந்ததியும் போரில் அழிந்து போயுள்ளது. இதனால், எங்களது சனத்தொகை குறைந்து வருகிறது. இருக்கின்ற குடும்பங்கள்கூட பல்வேறு காரணங்களால் இரண்டுக்கு மேல் குழந்தைகளைப் பெற விரும்பவில்லை. இதுவே பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்வதற்கான பிரதான காரணமாக உள்ளது.

இன்று எண்ணிக்கையே சகல விடயங்களையும் தீர்மானிக்கும் பிரதான சக்தியாக உள்ளது. உண்மையானதா, நீதியானதா, சரியானதா, பிழையானதா? என்று பார்க்காமல் பொய்க்கும், அநீதிக்கும், பிழையான விடயங்களுக்கும் பெரும்பான்மைப் பலம் இருந்தால் அது பெரு வெற்றி பெற்று விடுகிறது. தமிழ்மக்கள் குழந்தைகளை அதிகளவில் பெற்றுக் கொள்வதில் அக்கறை காட்டாது விட்டால் விரைவில் இலங்கைத் தீவில் சிறுபான்மையிலும் சிறுபான்மையாகத்தமிழினம் மாற வேண்டிய அவலநிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இளைஞர் மன்ற வாணி விழா

(யாழ்ப்பாணம்)

மூளாய் இளைஞர் மன்றம் நடத்தும் வாணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மூளாய் பிரசாத் அரங்கில் மன்றத் தலைவர் சி.ஜெனார்த்தனன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் சிறப்பு விருந்தினராக வீணாகான குருபீடாதிபதி சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள், வலி.மேற்கு பிரதேச செயலக் கலசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி க.ஜெகதீசன் ஆகியோரும் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினர்களாக மன்றத்தின் முன்னாள் உறுப்பினர்களான சி.சிவமோகன், பா.கேசவன், சி.கோபிதாசன் ஆகியோர் பங்கேற்பர்.

இந்நிகழ்வில்கலாபூஷணம் விருதுபெற்ற ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம், நல்லாசிரியர் விருதுபெற்றவர்களான கு.பாலகுமார், ச.அரவிந்தன் ஆகியோருக்குச் சிறப்புக் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா தலைமையிலான பட்டிமண்டபம், இசைத் தமிழ் வில்லிசைக் குழுவினரின் வில்லிசைக் கச்சேரி என்பனவும் இடம் பெறவுள்ளன. (இ)

# பவித்ராவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் மகிந்த







(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சியின் பிறந்த நாள் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சிக்கு 53 வயது பூர்த்தியாகியுள்ள நிலையில் குறித்த நிகழ்வு மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்தையும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி கேக் வெட்டி, அனைவருக்கும் பகிர்ந்தளித்துள்ளார்.

மேலும், இந்த நிகழ்வில் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளனர். (இ)


இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்க சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

11.10.2017இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி.M.பவானி சற்குணராசா அத்தாட்சிப்படுத்திய 18.06.2015 திகதியிட்ட ஆரம்ப ஈட்டுமுறி இல.4061 மற்றும் 18.06.2015 திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல.4063 ஆகியவற்றின் பேரில் சுழிபுரம், தொல்புரம் என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.சண்முகசுந்தரம்பிள்ளை கஜமுகன், திருமதி சண்முகசுந்தரம்பிள்ளை பத்மாதேவி மற்றும் திருமதி விஜயகுமார் தமிழினி (சுழிபுரம், தொல்புரம் என்னும் முகவரியில் அமைந்த வேலவன் சிற்றி மேக்கர்) ஆகியோரிடமிருந்து தனித்தனியாகவும் கூட்டாகவும் 11.09.2017 வரை முதலும் வட்டியும் பத்தொன்பது மில்லியன் முந்நூற்று அறுபத்தேழு ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினான்கு ரூபாய்களும் எண்பத்து ஆறு சதங்களும் (ரூபா 19,367,914.86) மற்றும் நான்கு மில்லியன் ஐநூற்று அறுபத்து ஆறு ஆயிரத்து இருநூற்று ஆறு ரூபாய்களும் மூன்று சதங்களும் (ரூபா 4, 566, 206.03) மற்றும் பத்து மில்லியன் இருநூற்று எட்டு ஆயிரத்து ஐநூற்று இருபத்து நான்கு ரூபாய்களும் பதினாறு சதங்களும் (ரூபா 10, 208, 524.16) அத்துடன் பதினெட்டு மில்லியன் எழுநூற்று எண்பத்து இரண்டு ஆயிரத்து அறுநூறு ரூபாய்களிலும் (ரூபா 18, 782, 600.00) மற்றும் நான்கு மில்லியன் நாநூற்று முப்பத்து இரண்டு ஆயிரத்து அறுநூறு ரூபாய்களிலும் (ரூபா 4, 432,600.00) மற்றும் ஒன்பது மில்லியன் எழுநூற்று ஐம்பது ஆயிரம் ரூபாய்களிலும் (ரூபா 9, 750,000.00) முறையே ஆண்டுக்கு எட்டு வீதத்திலும் (8.0%) மற்றும் எட்டு வீதத்திலும் (8.0%) மற்றும் பதினொரு வீதத்திலும் (11.0%), 12.09.2017 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;
2. பிரசித்த நொத்தாரிசு திருமதி. M.பவானி சற்குணராசா அத்தாட்சிப்படுத்திய மேற்குறிப்பிட்ட 18.06.2015 திகதியிட்ட ஆரம்ப ஈட்டுமுறி இல.4061 மற்றும் 2015.06.18 திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல.4063 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள பத்தொன்பது மில்லியன் முந்நூற்று அறுபத்தேழு ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினான்கு ரூபாய்களும் எண்பத்து ஆறு சதங்களும் (ரூபா 19, 367, 914.86) மற்றும் நான்கு மில்லியன் ஐநூற்று அறுபத்து ஆறு ஆயிரத்து இருநூற்று ஆறு ரூபாய்களும் மூன்று சதங்களும் (ரூபா. 4,566,206.03) மற்றும் பத்து மில்லியன் இருநூற்று எட்டு ஆயிரத்து ஐநூற்று இருபத்து நான்கு ரூபாய்களும் பதினாறு சதங்களும் (ரூபா.10, 208, 524.16)அத்துடன் 12.09.2017 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இல.692, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.K.P.பாலகிருஷ்ணனுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21ஆம் பிரிவுக்கமைய இத் தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, யாழ்ப்பாணம், இரண்டாவது கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வட்டுக்கோட்டை பகுதியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் பண்ணாகம் J/175ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டுக்கோட்டை கிழக்கில் அமைந்த "இத்திப்புளோ" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் N. ராமச்சந்திரன் தயாரித்த 01.12.2012 திகதியிட்ட வரைபடம் இல.5188 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு கிழக்கில் சண்முகசுந்தரம்பிள்ளையின் கைம்பெண் பத்மாதேவி மற்றும் சண்முகசுந்தரம்பிள்ளை கஜமுகன் ஆகியோரின் சொத்தும், வடக்கு மற்றும் மேற்கில் குமாரமூர்த்தி விஜயகுமார் மற்றும் மனைவி தமிழினியின் சொத்தும், தெற்கில் யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.5188ன் பிரகாரம் 4 லாச்சம் VC மற்றும் 14.52 குழிகளும் விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன், மேற்கில் அமைந்துள்ள கிணற்றின் மீதான பங்கும் வரைபடம் இல.3815இல் துண்டு 5 என அடையாளமிட்ட பாதை ஊடாக கிணற்றுக்கான வழி உரிமையும் நீர்ப்பாய்ச்சல் உரிமையும் ஆகும். இக் காணி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் S17/131ல் பதிவு செய்யப்பட்டது.
2. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வட்டுக்கோட்டை பகுதியில், வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைகளுள் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பகுதியில் வலிகாமம் மேற்கில், பண்ணாகம் J/175 இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டுக்கோட்டை கிழக்கில் அமைந்த "இத்திப்புளோ"என அழைக்கப்படும் காணி, உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.ராமச்சந்திரன் தயாரித்த 01.12.2012 திகதியிட்ட வரைபடம் இல.5188இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு கிழக்கில் ராமநாதனின் மனைவி சாந்தினியின் சொத்தும் வடக்கில் குமாரமூர்த்தி விஜயகுமாரின் மனைவி தமிழினியின் சொத்தும் மேற்கில் வரைபடம் இல.5188இல் துண்டு 2 என அடையாளமிட்டு ராமநாதன் மால்முருகனின் சொத்தும் தெற்கில் காரைநகர் யாழ்ப்பாணம் பிரதான வீதியும் (R.D.A.) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.5188ன் படி 8 லாச்சங்கள் VC மற்றும் 7.41 குழிகள் அளவைக் கொண்டதும் அங்கு அமைந்துள்ள வீடு, கிணறு, கட்டடம் மற்றும் சகலதும் ஆகும். இக் காணி (யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் S14/132 ல் பதிவு செய்யப்பட்டது)

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

இலங்கை வங்கி.
யாழ்ப்பாணம் இரண்டாவது மேற்தரக்கிளை.
திகதி: 07.11.2017.

திரு.G.பரதன்
கிளை முகாமையாளர்.


# சுற்றாடலுக்கு ஏற்றவகையில் இம்முறை வரவு-செலவுத்திட்டம்



(கொழும்பு)

சுற்றாடலுக்கு ஏற்றவகையில் இம்முறை வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கான யோசனைகள் பாராட்டத்தக்கவை. மேலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இதன்மூலம் அடைந்து கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>தொ.இ: B/7947 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/7213 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 19 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில் அவுஸ்ரேலியா<br>தொ.இ: B/7948 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BFA, MA/ ஆசிரியர்<br>தொ.இ: G/7224 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 20 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/சாரதி<br>தொ.இ: B/7949 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்: BA/ ஜேர்மனி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7229 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/கட்டார்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7951 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: 19 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பொறியியளாளர் அவுஸ்ரேலியா<br>தொ.இ: G/7236 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# புதிய தலைமுறையினர் வரலாற்றுத் தவறுகளை படிப்பினைகளாக்க வேண்டும்-மனோ அறிவுரை



புதிய தலைமுறையினர் வரலாற்றுத் தவறுகளை படிப்பினையாகக் கொண்டு எதிர்காலத்தில் செயற்பட வேண்டும் எனவும் கடந்த காலங்களில் தமிழ்த் தலைமைகளின் தவறுளே பிரச்சினைகள் தற்போதும் தொடாந்து கொண்டிருப்பதற்கு காரணம் எனவும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடத்தப்பட்ட தழிழருவி எனப்படும் கலைநிகழ்வில் நேற்று முன்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுடைய அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. சோல்பரி யாப்பு உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் சமஷ்டியை வழங்குவதற்கு அப்போதைய தலைவர்களில் ஒருவராக இருந்த பண்டாரநாயக்கா ஆர்வமாக இருந்தார். அதனை தமிழ் தலைமைகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு காலத்திற்குக் காலம் கிடைத்த வாய்ப்புக்களை நாம் தவற விட்டிருக்கின்றோம்.

இந்நிலையிலேயே தற்போது புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்றது. தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் இல்லாவிட்டாலும் சில நகர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆக, தற்போதைய தலைமுறையினர், கடந்த காலங்களைப் போன்று அவசரப்படாமல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எமது இலக்குகளை எட்டுவதற்கான வழிவகைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.(இ)

# சவுதிஅரேபியாவின் முன்னாள் முடிக்குரிய இளவரசரின் வங்கிக் கணக்குகள் முடக்கம்

சவுதி அரேபியாவின் முன்னாள் முடிக்குரிய இளவரசர் மொஹமட் பின் நயிப்பின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முடிக்குரிய இளவரசர் நிலையிலிருந்து வெளியேற்றப்பட்ட அவர் அந்நாட்டில் ஊழலுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் கீழ் இலக்குவைக்கப்பட்ட பிந்திய அரச குடும்ப அங்கத்தவராகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி நடவடிக்கையின் பிரகாரம் இளவரசர் மொஹமட் பின் நயிப்பினதும் அவரது நேரடி உறவினர்களதும் வங்கிக் கணக்குகள் சவுதி அதிகாரிகளால் முடக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்த ஊழலுக்கு எதிரான நடவடிக்கையின் கீழ் அந்நாட்டைச் சேர்ந்த 11 இளவரசர்களும் 4 அமைச்சர்களும் பல முன்னாள் அமைச்சர்களும் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையானது அந்நாட்டு தற்போதைய முடிக்குரிய இளவரசர் மொஹமட் பின் சல்மான். தனக்கு சவாலாக இருப்பவர்களை அகற்றி தான் அதிகாரத்துக்கு வருவதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொண்ட ஒரு செயற்பாடாக நோக்கப்படுகிறது.

இந்நிலையில் சவுதி அரேபியாவில் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகையான கைதுகள்



மனித உரிமைகள் தொடர்பான கவலையை அதிகரிப்பதாகவுள்ளதாக அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த புதன்கிழமை தெரிவித்திருந்தது. (இ)




- 764 - திபெத்தியப் படைகள் சீனாவின் டாங் மக்களின் தலைநகரான சங்கான் நகரை 15 நாட்கள் கைப்பற்றி வைத்திருந்தன.
- 1833 - அலபாமாவில் லியோனிட் விண்கற்கள் வீழ்ந்தன.
- 1893 - அன்றைய பிரித்தானிய இந்தியாவுக்கும் (தற்போதைய பாகிஸ்தான்) ஆப்கானிஸ்தானுக்கும் இடையேயான எல்லைக்கோடு கீறப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.
- 1905 - நோர்வே மக்கள் வாக்கெடுப்பு மூலம் குடியாட்சியை விட மன்னராட்சியே சிறந்தது எனத் தெரிவித்தனர்.
- 1906 - பாரிசில் அல்பேர்ட்டோ சாண்டோஸ்-டியூமொண்ட் வானூர்தி ஒன்றைப் பறக்க விட்டார்.
- 1918 - ஆஸ்திரியா குடியரசாகியது.
- 1927 - மகாத்மா காந்தி இலங்கைக்கான தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை மேற்கொண்டார்.
- 1927 - லியோன் ட்ரொட்ஸ்கி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். ஜோசப் ஸ்டாலின் சோவியத்தின் முழு அதிகாரத்தையும் கைப்பற்றினார்.
- 1969 - மை லாய் படுகொலைகள் தொடர்பான உண்மைகளை ஊடகவியலாளர் சீமோர் ஹேர்ஷ் வெளியிட்டார்.
- 1980 - நாசாவின் விண்கப்பல் வொயேஜர் 1 சனிக் கோளுக்கு மிக அருகில் சென்று அதன் வளையங்களின் படங்களை பூமிக்கு அனுப்பியது.
- 1981 - கொலம்பியா விண்ணோடம் தனது இரண்டாவது விண்வெளிப் பயணத்தை இரண்டு வீரர்களுடன் ஆரம்பித்தது.
- 1982 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரராக யூரி அந்திரோப்போவ் தெரிவு செய்யப்பட்டார்.
- 1982 - போலந்தின் சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லேக் வலேசா பதினொரு மாத சிறைத்தண்டனைக்குப் பின்பு விடுதலையானார்.
- 1989 - "தென்னிலங்கையின் உலப்பனையில் தனது தோட்ட வீட்டில் மறைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோகண விஜேவீர கைதாகி மறுநாள் கொல்லப்பட்டார்.
- 1990 - இணைய வலை பற்றிய தனது முதலாவது திட்டத்தை ரிம் பேர்னேர்ஸ்-லீ அறிவித்தார்.
- 1994 - இலங்கையின் 5 ஆவது ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டார்.
- 1996 - சவுதி அரேபியாவின் போயிங் விமானமும் கசகஸ்தானின் இல்யூஷின் விமானமும் புதுடில்லிக்கு அருகில் நடுவானில் மோதிக் கொண்டதில் 349 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - கியோட்டோ பிரகடனத்தில் ஆல் கோர் கையெழுத்திட்டார்.
- 2001 - நியூயோர்க் நகரில் டொமினிக்கன் குடியரசு நோக்கிச் சென்ற அமெரிக்க விமானம் புறப்பட்ட சில விநாடிகளில் விபத்துக்குள்ளாகியதில் விமானத்தில் சென்ற 260 பேரும் தரையில் இருந்த 5 பேரும் கொல்லப்பட்டனர்.
- 2001 - ஆப்கானிஸ்தானின் காபூல் நகரை விட்டு தலிபான் படைகள் முற்றாக விலகினர்.
- 2006 - முன்னாள் சோவியத் குடியரசான தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து பிரிந்து செல்ல வாக்கெடுப்பை நடத்தியது.

பிறப்புகள்

- 1817 - பகாவுல்லா, பகாய் சமயத்தைத் தோற்றுவித்த பாரசீகர் (இ. 1892)
- 1840 - ஆகுஸ்ட் றொடான், பிரான்சிய சிற்பி (இ. 1917)
- 1842 - ஜோன் வில்லியம் ஸ்ட்ரட், ஆங்கிலேய இயற்பியலாளர் (இ. 1919)
- 1866 - சுன் இ சியன், சீனக் குடியரசின் 1வது அரசுத்தலைவர் (இ. 1925)
- 1896 - சலீம் அலி, இந்திய இயற்கையியலாளர் (இ. 1987)
- 1918 - சிறீபதி சந்திரசேகர், இந்திய கல்வியாளர், அரசியல்வாதி (இ. 2001)
- 1920 - வல்லிக்கண்ணன், தமிழக எழுத்தாளர் (இ. 2006)

இறப்புகள்

- 1946 - மதன் மோகன் மாளவியா, இந்திய அரசியல்வாதி (பி. 1861)
- 1969 - லு சாஃவ்சி, சீன அரசியல்வாதி (பி. 1898)
- 1994 - வில்மா ருடோல்ஃப், அமெரிக்க தடகள விளையாட்டு வீரர் (பி. 1940)
- 2001 - சத்குரு சிவாய சுப்ரமணியசுவாமி, இந்து-அமெரிக்கத் துறவி (பி. 1927)

சிறப்பு நாள்

- தந்தையர் தினம் (இந்தோனேசியா)
- உலக நுரையீரல் அழற்சி நாள்

# பட்ஜெட் செயலமர்வு

(கொழும்பு)

2018ம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் குறித்து இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் ஒழுங்கு செய்துள்ள செயலமர்வு நேற்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கை வர்த்தக சம்மேளனம், பட்டய கணக்காளர் நிறுவனம், உள்நாட்டு இறைவரி திணைக்களம், மூலோபாய அபிவிருத்தி சர்வதேச வர்த்தக அமைச்சு என்பனவற்றின் பிரதி நிதிகள் இதில் உரையாற்றுவர்.

பட்டயக் கணக்காளர்களும், மாணவர்களும் இதில் பங்கேற்றிருப்பதாக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# அமெரிக்கக் கடற்படையின் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான பணிப்பாளர் இலங்கையில்



(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படையின் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான பணிப்பாளர் கப்டன் பிராங்க் லிங்கோயஸ் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு பாதுகாப்புத் தரப்புகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படைத் தலைமையகத்துக்கு வந்த கப்டன் பிராங்க் லிங்கோயஸ் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை - அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்கள் பலமடைந்துள்ள சூழலில் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே அமெரிக்கக் கடற்படையின் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான பணிப்பாளர் கப்டன் பிராங்க் லிங்கோயஸ் இலங்கை வந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)

# எரிபொருள் நெருக்கடி குறித்து ஜனாதிபதிக்கு விசேட அறிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி குறித்த அறிக்கை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

திடீரென ஏற்பட்ட இந்த எரிபொருள் நெருக்கடி குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழு, குறித்த அறிக்கையைத் தயார் செய்து வருவதாகவும், ஜனாதிபதியிடம் கையளித்த பின்னர், அது குறித்து அமைச்சரவை சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளதாகவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் நிலவிவந்த எரிபொருள் நெருக்கடி நிலை படிப்படியாகக் குறைந்து வருவதாகவும், விரைவில் எரிபொருள் விநியோகம் முழுமையாகச் சீராகிவிடும் என்றும் எரிபொருள் வள அபிவிருத்தி துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ)

# இலங்கையின் மனிதவுரிமைகள் நிலை குறித்து ஜெனிவா அமர்வில் புதன்கிழமை மீளாய்வு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைப்பாடு குறித்து அடுத்தவாரம் மீளாய்வு செய்யப்படவுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், பூகோள கால மீளாய்வு அமர்வு கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இதில் இலங்கையின் மனித உரிமைகள் பதிவுகள் குறித்த மீளாய்வு எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மூன்றாவது தடவையாக இடம்பெறவுள்ள இந்த மீளாய்வு நேரலையாக இணையத்தில் ஒளிபரப்பப்படும்.

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு இலங்கையின் தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு ஜெனிவா செல்லவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை குறித்த மீளாய்வின் போது இலங்கை அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட தேசிய அறிக்கை, சுதந்திரமான மனித உரிமை நிபுணர்கள், குழுக்கள், சிறப்பு அறிக்கையாளர்கள், மனித உரிமை அமைப்புகள், ஏனைய ஐ.நா. அமைப்புகளின் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கைகள், தேசிய மனித உரிமைகள் நிறுவகங்கள், பிராந்திய அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புக்களை உள்ளடக்கிய ஏனைய பங்காளர்களின் அறிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையில் இந்த மீளாய்வு இடம்பெறும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள், பாதிக்கப்பட்டவர்கள், உறவினர்களுக்கான இழப்பீடு, குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் கொண்டு வருதல், போர்க் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகள், பயங்கரவாத தடைச்சட்டம், காணாமல் போனோர் பணியகத்தை நடைமுறைப்படுத்தல், உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்குதல், எல்லா சமூகத்தினருக்கும் சமமான நீதி கிடைப்பதை உறுதிப்படுத்தல், இலங்கைப் படையினர் மற்றும் பொலிஸ் துறையினரின் கண்மூடித்தனமான கைதுகள், சித்திரவதைகள், வன்முறையைத் தூண்டும் வெறுப்புணர்வு பரப்புரைகளுக்கு நடவடிக்கை எடுத்தல், சிறுபான்மை இன, மதத்தவர்களின் பாதுகாப்பு, பாலியல் வன்முறைகள், சிறுவர் தொழிலாளர் முறையை அகற்றுதல், வாழ்க்கைத் தர உயர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இந்த பூகோள கால மீளாய்வு இடம்பெறவுள்ளது. (இ)

## கல்வி நிர்வாகசேவை அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சி வழங்க ஏற்பாடு



(கொழும்பு)

கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு முதற்கட்டமாக விமானப் பயணச் சீட்டுக்களை வழங்கும் நிகழ்வு கல்வியமைச்சில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதுவரை வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெறாத 35 அதிகாரிகள் மலேசியாவின் உட்டாறா பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து பயிற்சிகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## திறன்கள் அபிவிருத்திக்கு பட்ஜெட்டில் அதிக நிதி

### அமைச்சர் சந்திம வீரக்கொடி தகவல்



(கொழும்பு)

விவசாயிகளின் அறுவடையை பாதுகாப்பதற்கான காப்புறுதி முறைமை இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திறன் அபிவிருத்திக்காக இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் பாரியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.


இதேவேளை நாட்டின் எதிர்காலப் பயணத்திற்காக பொருளாதார சவால்களை வெற்றி கொள்ளும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் அவசியம் என்று பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் மக்களைத் தவறாக வழி நடத்துகின்றனர். வரவு-செலவுத்திட்டத்தைக்காட்டி அவர்கள் மக்களை அச்சமூட்டுகிறார்கள். பாராளுமன்ற வரலாற்றில் அழிக்க முடியாத வரவு-செலவுத் திட்டம் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் பரணவிதான கூறினார்.

நாட்டின் உற்பத்திகளை வலுவூட்டும் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரீ.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். கலைஞர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன் ராஜாகருணா இது தொடர்பில் தெரிவிக்கையில்,நாட்டின் அபிவிருத்திக்கு இம்முறை வரவு-செலவுத் திட்டம் உதவும் என்று தெரிவித்தார். (இ-7)

## நான் அர்ஜூன ரணதுங்க அவர் சும்மா தயாசிறியே



(கொழும்பு)

நான் அர்ஜூன ரணதுங்க, அவர் சும்மா தயாசிறி மாத்திரமே என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த ஒரு வார காலமாக ஏற்பட்ட பெற்றோல் நெருக்கடி குறித்து விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ள கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அர்ஜூன இவ்வாறு கூறியுள்ளார்.

அர்ஜூன ரணதுங்கவுக்கு பெற்றோல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முடியாத நிலையில், விளையாட்டுத் துறையில் காணப்படும் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி மேற்கொள்கின்றார். முதலில் பெற்றோல் பிரச்சினை ஏற்படாமல் அவர் பார்த்துக் கொள்ளட்டும் என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்திருந்தார்.

தயாசிறி அவ்வாறு சொல்வதற்கு அருகதையுள்ளது. ஏனெனில், அவர் சிறந்ததொரு கிரிக்கெட் வீரர். அவருக்கு நல்லாக விளையாட்டைப் பற்றித் தெரியும்.

அவர் கூறும் கருத்துக்கெல்லாம் நான் பதிலளிக்க வேண்டும் என்ற தேவையில்லை.. நான் அர்ஜூன ரணதுங்க, அவர் வெறும் தயாசிறி எனவும் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார்மடம் | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 180 | 150 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 450 | 500 | 600 | 500 |
| தக்காளி | 150 | 60 | 90 | 120 | 100 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 20 | 20 | 20 | 50 | 50 | 60 |
| கோவா | 140 | 100 | 80 | 120 | 140 | 120 | 160 |
| கரட் | 120 | 80 | 80 | 100 | 80 | 200 | 200 |
| பூசணி | 60 | 80 | 60 | 50 | 40 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 70 | 80 | 120 | 120 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 | 70 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 250 | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 100 | 170 | 120 | 150 | 200 | 120 |
| பாகற்காய் | 400 | 300 | 200 | 200 | 400 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 80 | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 200 | 160 | 200 | 120 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 200 | 170 | 200 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 60 | 120 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 280 | 260 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 100 | 110 | 100 | 400 | 250 | 120 |
| போஞ்சி | 250 | 200 | 100 | 120 | 140 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 100 | — | 200 | 180 | 160 |
| கீரை-1பிடி | 50 | 40 | 30 | 40 | 50 | 50 | 40 |
| தேசிக்காய் | 80 | 50 | 150 | 120 | 100 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 80 | 75 | 90 | 90 | 60-100 |
| இராசவள்ளி | — | — | 200 | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | 250 | — | 200 | — | 200 |
| முள்ளங்கி | 80 | — | 30 | 80 | 90 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | — | 30 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | — | 15 | 20 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | — | — | — | 100 | 60 | 80 |


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1929 - 11 - 17



உதிர்வு 2017 - 11 - 09

பளை இந்து ஆரம்ப வித்தியாலய அதிபர் திரு.க.ஞானசீலன் அவர்களின் பாசமிகு தந்தை

அமரர். ஐயாகுட்டி கந்தர்

அவர்கள் 09.11.2017 அன்று காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பளை இந்து ஆரம்ப பாடசாலை சமூகம்.


## பி.பீ.அபேகோனுக்கு நீதிமன்றம் அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் செயலாளர் பி.பீ.அபேகோனை எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சொத்து விபரங்களை வெளியிட மறுத்ததன் மூலம், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியங்களை விசாரிப்பதற்காகவே பி.பீ.அபேகோனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜோன்ஸ்டன் பெர்னான்டோ 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேகரித்த சொத்து விபரங்களை வெளியிட தவறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 88 பேருக்கு மாதாந்தம் உதவித்திட்ட கொடுப்பனவு



(பரந்தன்)

வன்னி விழிப்புலனற்றோருக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினை சேர்ந்த 88 பேருக்கு கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஊடாக புலம்பெயர் அமைப்பு ஒன்றினால் இவ்வுதவி திட்டம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் வன்னியில் உள்ள விழிப்புணர்வு அற்ற 88 பேருக்கு தொடர்ச்சியாக இவ்வுதவி வழங்கப்படவுள்ளன.

சங்கத்தின் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.போதானா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# நந்திக்கடல் பகுதியில் வெள்ளநீர் தேங்கியதாக முறைப்பாடுகள் கிடைக்கவில்லை

## அரச அதிபர்,கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் வெள்ளநீர் தேங்கி விவசாயிகள் பாதிக்கப்பட்டதாக எந்தவிதமான முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மற்றும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு நந்திக்கடல் ஏரியில் வெள்ளநீர் தேங்கியுள்ளதால் வடக்கு வெளிப் பகுதியில் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதாகவும் நந்திக்கடல் ஏரியின் நீரையை திறந்து விடுமாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்த கருத்தையடுத்து கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

அதாவது நந்திக்கடல் ஏரியின்குளத்தின் நீர் அதிகரிப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதாக தனக்கு முறையிட்டிருப்பதாகவும் உடனடியாக அதனைத்திறந்து விட நடவடிக்கை எடுக்குமாறும் விவசாய அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் மாவட்ட அரசஅதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கமநல உத்தியோகத்தர், விவசாயிகள் பாதிக்கப்பட்டமை தொடர்பில் தங்களுக்கு இதுவரை எந்த விதமான முறைப்பாடும் கிடைக்கவில்லை என கூட்டத்தில் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து கூட்டத்திற்கு சமுகமாகியிருந்த மீனவர் சங்கப்பிரதிநிதிகள்,மாவட்ட கடற்தொழில் பரிசோதகர்கள் ஆகியோர் அமைச்சரின் கருத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இந்த விடயத்தில் மீனவர்களை எதிர்க்கின்றீர்களா எனவும் அவர்கள் கேட்டிருந்தனர்.

நந்திக்கடல் நிரம்பி வட்டுவாகல் பாலத்தில் நீர் தட்டும் போது, நந்திக்கடல் நீர் கடலுக்கு வெட்டிவிடப்படும். இதுவே பரம்பரையாக 30 வருடங்களுக்கு நடைபெற்று வருவது வழமை.

இந்த வெட்டுவாய் வெட்டுவதற்கு முன்னர்அந்த இடத்தில் விவசாயிகளும் மீனவர்களும் மரபுரீதியாக பொங்கல் பொங்கிப்படைத்து பக்தி பூர்வமாகவே இந்த நிகழ்வை செய்து வருகின்றார்கள்.

அப்படியிருக்க உடனடியாக வெட்ட வேண்டிய அவசியமில்லை. தேவைப்படின் விவசாய அமைச்சின் செயலாளர் கலந்து ஆலோசித்து இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம் என மீனவ சங்கப் பிரதிநிதிகளும்வடக்குமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் மீனவ சமுகப் பிரதிநிதிகளும் தெரிவித்திருந்தனர். (2-315)

# உதவிப்பொருட்கள் வழங்கி வைப்பு

(மல்லாவி)

வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட நடப்பாண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்களை கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றிற்கு அண்மையில் வழங்கி வைத்துள்ளார்.

இதன் போது, வவுனியா, எல் லப்பர் மருதங்குளம் பாரதி மாதர் சங்கத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அலுவலக உபகரணங்களும் பொன்னா ஆவரசங்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனத் தொகுதி யும். சிறிராமபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு75 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் மருக்காரம்பளை ஐங்கரன் முன்பள்ளிக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரமும், தவசிகுளம் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு 50, ஆயிரம் ரூபா பெறுமதியான தகரப் பந்தல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-15)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களில் நிலவும் உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர், உதவிக் கணக்காளர். உதவி உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகளுக்கும், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்கு உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகும்.

போட்டிப் பரீட்சை எதிர்வரும் 2018 ஜனவரி மாதம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமூடாக வெளியிடப்படும்.

நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெறும் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகத் தேர்வுகளை இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடத்தி நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரிவோர், போதிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதுடன், குறிப்பிட்ட பதவிக் காலத்தையும் நிறைவு செய்திருப்பின் அந்தந்த நிறுவனத் தலைவர்களுக்கூடாக விண்ணப்பிக்க முடியும்.

வெளிவாரியாக விண்ணப்பிப்போர், பொது நிர்வாக படப்பின் டிப்ளோமா அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும் என்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான உச்ச வயதெல்லை 30 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களையும். விண்ணப்ப படிவத்தையும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பரீட்சை வெற்றியாளர் கௌரவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் தரம் 5 புலமை ப்பரிசில் பரீட்சை வெற்றியாளர் கௌரவிப்பு அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய 51 மாணவர்கள் பரிசில்கள்,கேடயங்கள், சான்றிதல்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்கலந்துகொண்டுமாணவர்களுக்கு கௌரவிப்புக்களை யும் பரிசில்களையும் வழங்கிவைத்தார். (2-281)

# எஸ்.எல்.என்.எஸ். சயுறால தாய்லாந்து பயணம்

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் மிகப்பெரிய ஆழ்கடல் ரோந்துக் கப்பலான எஸ்.எல்.என் எஸ்.சயுறால தாய்லாந்து நோக்கி பயணமானது.

2017ஆம் ஆண்டுக்கான தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தின் சர்வதேச கப்பற்படை மீளாய்வு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் நாட்டை விட்டு புறப்பட்டு சென்றுள்ளது.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து 127 கடற்படை சிப்பந்திகளுடன் புறப்பட்டுச்சென்ற "சயுறால" கடற்படை கப்பல் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் கப்பற்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன்,



இதன் முதலாவது வெளிநாட்டு கடற்பயணம் இதுவாகும்.

இந்த சர்வதேச கப்பற்படை மீளாய்வு நிகழ்வு தாய்லாந்தின் பட்டயாவில் எதிர்வரும் 18ஆம்திகதி முதல்21ஆம்திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இடம்பெறுவதுடன், கப்பற்படை மீளாய்வு மற்றும் அது தொடர்பான பயிற்சிகளில் 19 தென்கிழக்கு ஆசிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 26 கடற்படை கப்பல்கள் கலந்து கொள்ளவுள்ளன.

இந்திய கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டப்பட்ட "சயுறால" கடற்படை ரோந்துக்கப்பல் கடந்த ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆணை அதிகாரம் அளிக்கப்பட்டது.

இக்கப்பல் இந்திய கப்பல் பதிவுகள் (ஐ.ஆர்.எஸ்) மற்றும் அமெரிக்க கப்பல் பணியகம் (ஏ.பி.எஸ்) ஆகிய கப்பல் தர நிலையங்களுக்கமைய கட்டப்பட்டுள்ளது. இவ் ரோந்துப் கப்பல் 105.7மீற்றர் நீளமும் 13.6 மீற்றர் அகல மும் கொண்டதுடன், அதி கூடியதாக 26 நொட் வேகத்தில் செல்லக் கூடியதும் மற்றும் சஞ்சரிப்பு நேரத்தில் 12-14 நொட் வேகத்திலும் செல்லக் கூடியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மன்னாகண்டல் குளத்தின் புனரமைப்புப்பணி கமக்கார அமைப்பின் நிதியில் முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடைப்பெடுத்த மன்னாகண்டல் குளத்தினுடைய புனரமைப்புப்பணிகள் எதிர்வரும் 15ஆம் திகதி புதன் கிழமைக்குள் நிறைவடையும் என மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மன்னாகண்டல்குளம் அண்மையில் உடைப்பெடுத்து குளத்தின் நீர் வெளியேறியுள்ளது.

இதனால் இக்குளத்தின் கீழுள்ள விவசாய நிலங்கள் அழிவடைந்ததுடன், விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இக்குளத்தினுடைய நிலமை தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் தகவல் தெரிவிக்கும் போது இக்குளத்தின் அணைக்கட்டுப்பகுதியில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவே குளம் உடைப்பதற்கான காரணமாகும் என கூறப்பட்டது.

ஆரம்பத்தில் அதனைப் புனரமைப்பதற்குநிதிபோதாமை இருந்தது. 2014ஆம் ஆண்டு 1.8 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று ஆழப்படுத்துவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

2015ஆம் ஆண்டிலே 1.9 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அதன் மூலம் துருசுக்கான கதவுமாற்றப்பட்டு வாய்க்கால்வேலைகள் செய்யப்பட்டன. குளத்தின் வேலைகள்முழுமையாகச்செய்யப்பட்டு போதிய நீர்கிடைக்கவில்லை,

தற்போது இக்குளத்தினுடைய புனரமைப்புப் பணிகள் கமக்கார அமைப்பின் நிதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமைக்குள் இதன் பணிகள் அதற்கான நிதி கமக்கார அமைப்புக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கமநல சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-315)

# கனடா செல்லும் இலங்கை இராணுவத்தினருக்கு சிக்கல்

(கொழும்பு)

கனடாவில் நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்து கொள்ள செல்லும் இலங்கை இராணுவத்தினரை அனுமதிக்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சமாதான மாநாடு கனடாவில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை இராணுவத்தினர் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கனேடிய பிரதமரின் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் இந்தக் கோரிக்கைக்கு கனேடிய பிரதமர் இன்னமும் பதிலளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி இந்த மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரும் இந்தக் கோரிக்கையை கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோவிடம் விடுத்துள்ளதாகவும் இலங்கை இராணுவத்தினருக்கு விசா வழங்க வேண்டாம் எனவும் கோரியுள்ளார்.

போர்க்குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினருக்கு எதிராக தடை விதிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

# நீலப்பசுமை பட்ஜெட்-2018

03

"நீலப் பசுமை" எனும் தொனிப் பொருளில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் (பட்ஜெட்-2018) (09.11.2017) நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.



(நேற்றைய தொடர்ச்சி...)

27. தனியார்துறை மற்றும் உள்ளூர் மக்களுடன் இணைந்து திண்மக் கழிவு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் உள்ளூராளுகை நிறுவனங்களுக்கு உதவிகள்வழங்கப்படவுள்ளன. (ரூ.50 மில்.)

28. நாங்கள் அடிக்கடி நிகழும் வெள்ளப் பெருக்கு, வரட்சி மற்றும் நிலச்சரிவுகளுடன் இணைந்த அசாதாரண காலநிலை விளைவுகளை அனுபவித்து வருகின்றோம். எங்களது ஆற்றங்கரைகள் மற்றும் மணப்படுக்கைகள் அதிகளவில் நலிவுடையனவாக மாறியுள்ளன.

29. தற்போதிருக்கும் காலநிலை சகிப்பு இயலளவுத்தன்மை நிகழ்ச்சித்திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டிய தேவையினை களனி ஆற்றங்கரைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. எனவே குறுங்கால தீர்வொன்று என்ற வகையில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டப்படவுள்ளது.

அதேவேளை ஒரு நீண்டகால தீர்வு என்றவாறு ஒரு புதிய பல்நோக்கு நீர்த் தேக்கம் வீஓயா,நாவத்த, ஹொலம்புவ மற்றும் றியோ காசல் ஆகியவற்றின் மேற்பகுதியில் நீர்த்தேக்க இயலளவினை அதிகரிக்கக் கூடியவாறு அமைக்கப்படவுள்ளது. களுகங்கை, நில்வளகங்கை மற்றும் ஜின்கங்கை போன்ற இதர தொடர்ந்தோடும் நதிகளுக்கும் இதுபோன்ற பொறிமுறை பிரயோகிக்கப்படவுள்ளது. (ரூ. 4900 மில்.)

30. அரசாங்கத்தின் இந்த முயற்சியில் பங்காளர்களாக தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் செலவுகள் 'தகுதிபெற்ற செலவீனங்களாக' கருதப்படவுள்ளது.

31. மல்வத்து ஓயா, கும்புக்கன் ஓயா மற்றும் மாதுறு ஓயா ஆகிய மூன்று ஆற்றுப்படுக்கைகளில் கண்காணிப்பு பொறிகளை அமைப்பதன் மூலம் 8 மாவட்டங்களை உள்ளடக்கியவாறு நிலக் கீழ் நீர்வளக் கண்காணிப்பு 2018 ஆம் ஆண்டிலும் தொடரப்படவுள்ளது. நீர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் தூய்மை உறுதிப்படுத்தல் தொடர்பில் இந்த நடவடிக்கை மிக முக்கியமானதாகும். (ரூ.1500 மில்.)

32. எமது ஆற்றுவழிகள் சிலவற்றின் மாசுபடல் மட்டம் முன்னெப்போதும் இல்லாத மட்டத்தினை அடைந்துள்ளன. எனவே "பவித்ர கங்கா" கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இக் கருத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலை கழிவுகள் நதியில் விடப்படுவதை நாளடைவில் பூச்சியமாக/ முற்றாக நிறுத்துவதனை முதன்மைப்படுத்தவுள்ளது. இது தொடர்பில் களணி ஆற்றில் தமது கழிவுகளை வீசுகின்ற/அகற்றுகின்ற சகல தொழிற்சாலைகளும் நிலைபேறுடைய சூழல் நட்பு வழிகளில் தமது கழிவுகளை அகற்றுவதற்கு 5 வருடங்கள்வழங்கப்படவுள்ளன. அத்தகைய தொழிற்சாலைகள் சலுகை அடிப்படையிலான கடன் வசதிகள் ஊடாக ஆதரவளிக்கப்படவுள்ளன. (ரூ.750 மில்.)

33. நாங்கள் ஒவ்வொரு பிரதேச சபை பிரிவுகளிலும் பசுமைப் பூங்கா (சூழல் நட்பு பூங்கா) அல்லது மெதுவோட்ட ஒழுங்கையுடனான பசுமை சுவாசங்கள் (Green Lung) அமைக்கவுள்ளோம் என்பதுடன் சமச்சீரான உளம், உடல் மற்றும் ஆத்மா என்ற பழங்கால ஏதென்ஸ் எண்ணக்கரு என்பதனை அடியொற்றி இப்பூங்கா நூல் நிலையம், உடற்பயிற்சி நிலையம் மற்றும் யோகா, தியானம் அல்லது இதர ஆத்மீக பயிற்சிகளுக்கேற்றவாறு ஒரே கூரையிலமையும் பூங்கா என்பவற்றைக் கொண்டமையும். (ரூ.1500 மில்.)

34. அந்த வகையில் "நில்வல எலிய" மாதிரிப்பூங்கா மற்றும் பெரு வலயம் மாத்தறையில் நில்வல கங்கையின் இடது கரையில் அமைக்கப்படவுள்ளது. (ரூ.1500 மில்.)

35. தெஹிவளை மிருகக்காட்சி சாலையினை "கூடுகளில் அடைக்கப்பட்ட மிருகக் காட்சிசாலை" என்ற எண்ணக்கரு விலிருந்து விலகி "கூடல்லாத" மிருகக்காட்சி சாலையாக மாற்றவுள்ளோம் என்பதனை நான் கூறவிரும்புகின்றேன். பின்னவலை யானைகள் சரணாலயம் "சுதந்திரமாகப் பிறந்தோம் சங்கிலிகளின்றி வாழ்வோம்" (Born free chain free) என மீள் ஒழுங்கமைக்கப்படவுள்ளது.

சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப எமது யானைகள் மற்றும் மிருகங்கள் கூடுகளின்றி சுதந்திரமாக வாழ வழிசெய்யப்படவுள்ளது.(ரூ.75 மில்.)

36. நாங்கள். பின்னவலையில் யானைகள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை அமைக்க உள்ளதுடன் வனவிலங்கு காப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்டவாறு யானைப் பாகன்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

37. நாங்கள். வனவிலங்கு காப்பு நிதியத்துடன் இணைந்து மர அணில், மீன் பிடிக்கும் பூனை மற்றும் அலுங்கு போன்ற அழிவடையும் நிலையிலுள்ள உயிரினங்களை பாதுகாக்கவுள்ளோம். (ரூ.20 மில்.)

38. கையடக்கத் தொலைபேசிக் கோபுரங்களின் பெருக்கம்/ பரவுகை ஒரு சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத் தீங்கு ஆகும். எனவே மாதாந்தம் கோபுர மொன்றுக்கு ரூபா 200,000 என்றவாறு ஒரு கையடக்கத் தொலைபேசி கோபுர அறவீடு (Cellular Tower Levy) விதிக் கப்படவுள்ளது.

## நீலப் பொருளாதாரம் (கடல்சார் பொருளாதாரம்)

39. சபாநாயகர் அவர்களே, எமது கடல் படுக்கையானது எமது நாட்டின் நிலப் பரப்பினை விட 26 மடங்கு பெரியதாக உள்ளதுடன் கணக்கிட முடியாதளவு வாய்ப்புக்களையும் கொண்டுள்ளது. கடல்சார் / நீலப் பொருளாதாரத்தினை ஊக்குவிப்பதில் நிறுவகம் சார் சட்டத்தினை கட்டியெழுப்புதல், தற்போது இடம் பெறும் செயற்பாடுகளை திறன்படுத்தல் அதேவேளை சூழலியல் சமநிலையை விட்டுக்கொடுக்காத வகையில் ஏனையவற்றுக்கு பல்தன்மைப்படுத்தல் என்பவற்றை முதன்மைப்படுத்திய பன்முக உபாயங்களை அரசாங்கம் கொண்டுள்ளது.

40. ஒருங்கிணைந்த கரையோர வலய முகாமைத்துவ பொறிமுறையொன்று அனைத்து அக்கறையுடையவர்களது பங்குபற்றுகையுடன் விருத்தி செய்யப்படவுள்ளது. (ரூ.25 மில்.)

41. எமது கரையோரங்கள் கடலரிப்பு மற்றும் மாசடைதல் போன்ற அபாயங்களுக்கு முகங்கொடுத்துள்ளமையுடன் இந் நிலைமையானது சுற்றுலாத்துறை, மீன் பிடி. போக்குவரத்து போன்றவற்றின் மீது எதிரிகணிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. எனவே நான் பின்வருவனவற்றை முன்மொழிவு செய்கின்றேன்.

42. கல்கிஸ்சையிலிருந்து இரத்மலானை வரையிலான கடற்கரை மீள் நிரப்புகை (Replanishment) தொடர்பில் ஒரு கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் குறிப்பாக சுற்றுலா மற்றும் மீன்பிடித் துறைகளில் மேலும் முதலீடுகளை உருவாக்கும் வகையில் இது விரிவுபடுத்தப்படவுள்ளது. (ரூ.400 மில்.)

43. நீர்கொழும்பிலிருந்து மாரவில வரையிலான கரையோரத்தினை பாதுகாப்பு செய்வதற்கு முதலீடு செய்வதுடன் இது கல் அணைகளை எழுப்புதல், சதுப்பு நில தாவரங்களை துப்புரவு செய்வது மற்றும் மீள்நடுதல் போன்றவற்றை உள்ளடக்கும். (ரூ.800 மில்.)

44. சபாநாயகர் அவர்களே, எமது நாட்டில் 116 களப்புகளும் முகத்துவாரங்களும் காணப்படுகின்றன. களப்புக்கள் ஒரு தனித்துவமான சூழலியல் முறைமையைக் கொண்டிருப்பதனால் காலநிலை மாற்ற விளைவுகளை குறைத்தல், சகிப்புத் தன்மையான வளர்ச்சியைப் பேணல், கழிவு நீர் முகாமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கு ஆதரவுபடுத்தும் வகையில் அவை பாதுகாக்கப்படல் வேண்டும். அதன்படி, 2018 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு, றெக்கவ, புத்தளம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நந்திக்கடல், நாயாறு, சிலாபம், முந்தல் மற்றும் ஆண்டிக்குளம் ஆகிய 10 களப்புகளில் அரசாங்கம் முதலீடு செய்யவுள்ளது. அத்தகைய முதலீடு களப்புகளைத் தூய்மைப்படுத்தல், மீனவர்களின் வாழ்வாதாரங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் ஆய்வு மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் பயன்படுத்தப்படவுள்ளது.

45. களப்புகளுக்குள் தமது கழிவுகளை வெளியேற்றும் விருந்தகங்கள் மற்றும் ஏனைய தொழிற்சாலைகள் மீது நான் கவனம் செலுத்துவதுடன் அவை களப்புகளுக்குள் கழிவு அகற்றுவதனை நிறுத்தக் கூடிய/பூச்சியமாக்கக் கூடிய தொழில்நுட்பம் மீது முதலீடு செய்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படும். (ரூ.250 மில்.)

46. எமது நீல வளர்ச்சி உபாயத்திற்கு கடல்தள மேடை விரிவாக்கம் வசதியளிப்பதன் காரணமாக எமது அரசாங்கம் இது தொடர்பில் தொடர்ந்து முன்னெடுத்துச் செயற்படும். இந்த முயற்சியினை மேலும் வலுப்படுத்தக்கூடிய வகையில் பூரணமாக பொறிமுறைப்படுத்தப்பட்ட ஒரு நிரந்தர செயலகம் நிறுவப்படவுள்ளது. (ரூ.25 மில்.)

47. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றுக்கான ஒன்றிணைக்கும் செயலகத்தின் (COSTI) கீழ் ஒரு "மெய் நிகர் நீல - பசுமை நிறுவகம்" அமைக்கப்படவுள்ளதுடன் இந் நிறுவனம் நீல பசுமை முன்னெடுப்பின் கீழ் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கி நிலைபேறுடையதாக முன்னெடுத்துச் செல்லும்.

## நிலைபேறான விவசாய மற்றும் கடற்றொழில் தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல்

48. சபாநாயகர் அவர்களே, கடந்த காலங்களில் கைக்கொள்ளப்பட்ட நிலைபேற்றுத் தன்மையற்ற விவசாய நடைமுறைகள் காரணமாக குறைந்த உற்பத்தித்திறன், மண்வளவிழப்பு, நீர்வளம் மற்றும் நீர் என்பவற்றின் தரத்தினை விட்டுக் கொடுத்தல் ஆகியவை நிகழ்ந்துள்ளன. எனவே சூழலியல் நட்பான விவசாய நடைமுறைகளை கடைப்பிடித்தல் என்றவாறு ஒரு அடிப்படை மற்றும் முன்மாதிரி நகர்வு அத்தியாவசியமாயுள்ளது. சமகாலத்தில் விருத்தியடைந்துள்ள சந்தைகளில் சூழலியல் நட்பான நடைமுறைகள் மற்றும் அறமுறையான பயிற்சிச் செய்கையில் பெறப்படும் விளைபொருட்களுக்கு அதிக விலை கொடுக்க விரும்புகின்றமை காரணமாக கிடைக்கும் சிறந்த விலை மற்றும் விழிப்புணர்வு என்பன காரணமாக சூழலியல் நட்பான விவசாய நடைமுறைகள் எமது சுற்றுச் சூழலுக்கு நலனளித்தல் மட்டுமின்றி புதிய ஏற்றுமதிச் சந்தைகளையும் திறந்துள்ளது. எனவே நான் பின்வரும் முன்மொழிவுகளை செய்கின்றேன்.

49. ஏற்றுமதிச் சந்தைகளுக்கு ஏற்றுமதிச் செய்யக்கூடியவாறு சூழலியல் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை மேலும் வலுப்படுத்தல். (ரூ.25 மில்.)

50. ஜனாதிபதி அவர்களது முன்னெடுப்பினைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் வகையில் மழை நீரை முறைமையாக அறுவடை செய்யும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர குளங்களில் தூர் வாரப்படவுள்ளது. இக்கருத்திட்டம் வடமேல், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பிரதானமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. (ரூ.1000 மில்.)

51. பொலநறுவை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் விவசாய விளைபொருட்களை சேமித்து வைக்கக்கூடிய வகையில் 3 பண்டகசாலைகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படும். தற்போது நடைமுறையிலுள்ள நம்பிக்கை பற்றுச்சீட்டு அடிப்படையிலான பண்டகசாலை தொழிற்பாட்டு முறையினை மேலும் மேம்படுத்தக் கூடியவாறு வரவு- செலவுத்திட்ட ஒதுக்கீடு மேலும் அதிகரிக்கப்படவுள்ளது. நம்பிக்கை பற்றுச்சீட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பண்டகசாலை தொழிற்பாட்டு முறைமையானது விவசாயிகளின் வருமானத்தை உறுதிப்படுத்த வசதியளிப்பு செய்வதனால் விவசாயிகளுக்கு நன்மையளிக்கும் ஒரு முறைமையாகும். (ரூ.250 மில்.)

(தொடரும்)

# வவுனியா வளாகம் 2018இல் வன்னிப் பல்கலையாக மாறும்

## முதல்வர் த.மங்களேஸ்வரன் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா வளாகம் 2018 ஆம் ஆண்டு வன்னிப் பல்கலைக்கழகமாக மாறும் என்று எதிர்பார்க்கின்றோம் என யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின், வவுனியா வளாகத்தினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வில் ஊடகவியலாளர்களால் பாதீட்டில் வவுனியா வளாகத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டமை தொடர்பாக வினவிய போது இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2018ஆம் ஆண்டுக்கான அரசின் பாதீட்டில் எமது வவுனியா வளாக நூலகத்திற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர். இதற்காக நாங்கள் கேட்டிருந்த 487 மில்லியன் நிதியில் 2018ஆம் ஆண்டுக்கு 200 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியானது எங்களது தேவையான நூலகத்தை பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை தேவையாக இருக்கும். கடந்த ஓகஸ்ட் மாதம் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இங்கே வருகை தந்த எமது வளாகத்தின் கட்டாங்கள் பற்றாக்குறையாக உள்ளதை சுட்டிக்காட்டி எமக்கொரு நிர்வாக கட்டடம் அமைத்து தர வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக அதனை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்.

அத்தோடு எமது வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்துவதாக அறிவித்திருந்தார். அதன்படி 2018ஆம் ஆண்டு எமது வளாகமானது வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படுவதையும் எமக்கான நிர்வாக கட்டடத்திற்கான நிதியும் அடுத்த வருடம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

எமது வளாகத்திலும் தொழில்நுட்ப பீடத்திற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதேவேளை கடந்த வருடம் தொழில்நுட்ப கற்கைகளுக்காக 75 மாணவர்களை உள்வாங்கியிருக்கிறோம்.

மேலும் இந்த வருட இறுதிக்குள் தொழில்நுட்ப கற்கைகள் பீடத்தை இந்த வருட இறுதிக்குள் அதற்கான மூன்மொழிவை வைத்து அடுத்த வருடம் அளவில் இத்தொழில்நுட்ப பீடத்தை வவுனியா வளாகத்தில் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டத்தை மேற்கொள்வோம் என்றார். (2-250)

# மரநடுகை மாதத்தையொட்டி

# 1000 பயனாளிகளுக்கு ஒன்பது வகையான பழ மரக்கன்றுகள் விநியோகிக்கப்படும்

## வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(வவுனியா)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் விவசாய வனவியல் திட்டத்தின் கீழ் 0.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பயனாளிகள் தெரிவு ஒவ்வொரு விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலுமிருந்து 100 பயனாளிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு 1000 பயனாளிகளுக்கு 9 வகையான பழமரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாக வவுனியாமாவட்டபிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் தெ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மர நடுகை மாதத்தையொட்டி இந்நிகழ்வு நடைபெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் விவசாய வனவியல் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள கிராமங்கள் வருமாறு,

கோவில்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள ஆச்சிபுரம் கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும் பம்பைமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள கற்பகபுரம் கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும்,

சாஸ்திரி கூழாங்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சுந்தரபுரம் கிராமத்தில் 50 பயனாளிளுக்கும் ஓமந்தை விவசாயப் பிரிவிலுள்ள மாதர் பணிக்க மகிழங்குளம் கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும்,

நெடுங்கேணி விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள மருதோடை ஊஞ்சல் கட்டி கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும்,

கனகராயன் குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள பரசங்குளம் கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும்,

பாவற்குளம்விவசாயப்போதனாசிரியர் பிரிவிலுள்ள பெரியகட்டு பெரியதம்பனை கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும்,

செட்டிகுளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள மீடியாபாம், கங்கன்குளம் கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும்,

மடுக்கந்த விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள மகாகச்சக்கொடிய மாமடு கிராமத்தில் 100 பயனாளிகளுக்கும்,

ஈரட்ட விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள ஈரப் பெரியகுளம் கிராமத்தில் 50 பயனாளிகளுக்கும்,

உலுக்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள ஏக்கர் 400 கிராமத்தில் 100பயனாளிகளுக்குமாக மொத்தம் 1000 பயனாளிகளுக்கு பழ மரக்கன்றுகளாக ஒட்டுப்பலா, ஒட்டுமா, தேசி, கொய்யா, மாதுளை, நெல்லி, தென்னை, சண்டி, முருங்கை என்பன வழங்கப்படவுள்ளன.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 2017 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் பிரகாரம் விவசாய வனவியல் திட்டத்தின் கீழ் கிராமங்களில் உள்ள வீட்டுப் புறச் சூழல் பயன்தரும் பழ மரங்களின் விநியோகநிகழ்வும்நடுகையும் நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக நாளை திங்கட்கிழமை மு.ப10 மணிக்கு மாதர் பணிக்க மகிழங்குளம் வீட்டுத்திட்டத்திலும், பி.ப 3 மணிக்கு ஈரப்பெரிய குளம் வீட்டுத்திட்டத்திலும், மறுநாள் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு பெரியகட்டு, பெரியதம்பனை வீட்டுத்திட்டத்திலும், பி.ப. 3 மணிக்கு மீடியாபாம், கங்கன் குளம் வீட்டுத்திட்டத்திலும்,

எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆச்சிபுரம் வீட்டுத்திட்டத்திலும் அதனைத் தொடர்ந்து மு.ப. 11 மணிக்கு கற்பகபுரம் வீட்டுத்திட்டத்திலும்,

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு மகாகச்சக்கொடிய, மாமடு வீட்டுத்திட்டத்திலும், பி.ப. 3 மணிக்கு ஏக்கர் 400 வீட்டுத்திட்டத்திலும்,

எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு மருதோடை ஊஞ்சல்கட்டி வீட்டுத்திட்டத்திலும், காலை 9மணிக்கு பரசங்குளம் வீட்டுத்திட்டத்திலும்,

எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு சுந்தரம் வீட்டுத்திட்டத்திலும் நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார். (2)




# பிலவுக்குடியிருப்பு மக்கள்

# தற்காலிக வீடுகளை மீள ஒப்படைத்தால் சொந்த இடத்தில் வீடுகளை வழங்கலாம்

## ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் சிவமோகன் எம்.பி.

(கண்டாவளை)

பொதுமக்களுக்கு இழப்பீடு எதனையும் வழங்காத அரசாங்கம் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்ட வீடுகளை மீள ஒப்படைத்தால் தான் அவர்களுடைய சொந்த இடத்தில் வீடுகளை வழங்கலாம் என்று தெரிவித்திருப்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 முதல் இரவு 7மணிவரை முல்லை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிலக்குடியிருப்புப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் வீதியில் போராடி விமானப் படையினரிடம் இருந்து தமது பூர்வீக நிலத்தை மீட்டு குடியேறியுள்ள மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் எதுவும் வழங்கப்படாது தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் தமது நிலை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து வீட்டுத்திட்டங்களைப் பெற்றுத்தர வேண்டுமென பிலக்குடியிருப்புப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை பிலக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் மாதிரிக்கிராமமாக தெரிவு செய்யப்பட்டு தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாகாணசபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன் அடுத்த ஆண்டில் மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு பத்து இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றபோது, இந்த மக்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாவை பத்து இலட்சமாக அதிகரிக்க வேண்டுமென தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், யுத்தத்தினால் வெளியேற்றப்பட்ட மக்களை இராணுவம் வலுக்கட்டாயமாகவே மாதிரிக்கிராமத்தை உருவாக்கி அதில் இராணுவத்தினரால் வீடுகள் கட்டப்பட்டு குடியேற்றப்பட்டார்கள்.

கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் மக்களின் சொத்துக்களையும் வருமானங்களையும் இராணுவமே அபகரித்து வருகின்றது. இன்று மக்கள் மாதக்கணக்கில் வீதியில் போராடி வருகின்றார்கள்.

இவ்விடயம் தொடர்பில் கரைதுரைப்பற்றுப்பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் கருத்துத் தெரிவிக்கையில், கேப்பாப்புலவு மாதிரிக் கிராமத்தில்ஏற்கனவே குறித்த பயனாளிகளுக்கு அரசாங்க நிதியில் வீட்டுத் திட்டங்கள் மற்றும் ஏனைய கட்டுமானங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே வழங்கப்பட்ட வீடுகளை மீளப்பெற்று அதன் பின்னரே வீடுகளை வழங்குமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கின்றது என தெரிவித்திருந்தார்.

இவ்வாறு பொதுமக்களுக்கு இழப்பீடு எதனையும் வழங்காத அரசாங்கம் கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்ட வீடுகளை மீள ஒப்படைத்தால் தான் அவர்களுடைய சொந்த இடத்தில் வீடுகளை வழங்கலாம் என்று தெரிவித்திருப்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார். (2-315)

# மனைவி வழங்கிய தகவலையடுத்து கணவன் கசிப்புடன் கைதானார்

## நாளை நீதிமன்றில் ஆஜர்

(பூநகரி)

பூநகரி முக்கொம்பன் பகுதியில் அடர்ந்த காட்டுப்பகுதியில் குழுவொன்று பெருந்தொகையான கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை நடைபெறுவதாக அப்பகுதி பொதுமக்கள் பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து வந்தநிலையில் கடந்த மாதம் அக் காட்டுப்பகுதிக்கு சென்ற பொலிஸ் குழுவினர் தேடுதல் நடத்திய வேளை கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் தடயங்களையும் கண்டபோதும் இது தொடர்பில் எவரையும் கைது செய்யவில்லை.

இருப்பினும் நபர்கள் தப்பிச் சென்று இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில்நேற்றுமுன்தினம் குடும்பப் பெண்ணொருவர் பூநகரி பொலிஸாருக்கு வழங்கிய இரகசியத் தகவலையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸ் நிலையப் பதில் பரிசோதகர் விஜயதுங்கா தலைமையிலான பொலிஸ் குழுவினர் தகவல் வழங்கியவரின் கணவனை (வயது-34) கசிப்புடன் கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதுடன் ஏனைய சந்தேக நபர்களை கைது செய்யும் நோக்கில் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக பிரபல தாப நபர் பூநகரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது ஒரு மாதகாலம் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதுடன் 60 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்தி அன்னமையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபரை நாளை திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-84)

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் மாகாண நிதியொதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட தமிழர் பாரம்பரிய வாத்திய உபகரணங்கள் கனகராயன் குளம் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. முன்னாள் சுகாதார அமைச்சர் வாத்திய உபகரணங்களை பாடசாலை அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். (படம்:-குருமன்காடு செய்தியாளர்)



ஒருவன் புத்திசாலியா, முட்டாளா என்று கண்டு பிடிக்க அவனை ஐந்து நிமிடம் பேச விடுங்கள்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஊழல் அற்ற பொது அமைப்பை முன்னிறுத்துவது பற்றி சிந்தியுங்கள்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆரவாரங்கள் புத்துருவாகியுள்ளன. கூடவே அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபும் வெளியாகி அதன் மீதான விவாதங்களும் நடந்துள்ளன.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்கு வைத்து அரசியல் கட்சிகளுடன் சுயேட்சைக் குழுக்கள் பலவும் தேர்தல் களமிறங்கத் தயாராகியுள்ளன.

தேர்தல் என்று வந்துவிட்டால் அரசியல் ஆர்வமுடையோர் விழித்துக் கொள்வது தவிர்க்க முடியாதது.

· அதிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது ஊர் மக்களை கடுமையாக ஆர்வப்படுத்துவது.

அரசியல் கட்சிகள் தங்கள் ஆதரவாளர்களுக்கு ஆசனம் வழங்கி அவர்களை ஆசுவாசப்படுத்துகின்ற தேர்தல் இதுவென்பதால் யாரை தேர்ந்தெடுப்பது என்ற விடயம் ஊர் முழுக்க விரிந்து பரந்து கிடக்கும்.

என்னை நியமியுங்கள் என்ற கோரிக்கைக்கு பஞ்சம் இராது. அரசியல் கட்சிகள் தமக்கு ஆசனம் தரவில்லை என்றதும் கட்சி மாறி களமிறங்குவது, சுயேட்சையாகப் போட்டியிடுவது, தனது கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்வது என்ற கூத்துக்களுக்கும் பஞ்சமிராது. இதுதான் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் இயல்பு.

இருந்தும் மாகாண சபைத் தேர்தல், பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் என்பவற்றின் வெற்றியைத் தீர்மானிப்பதில் உள்ளூராட்சி சபை கணிசமாகப் பங்காற்றுகிறது என்ற உண்மை ஏற்புடையது.

அதனால்தான் ஊர்ப் பிரமுகர்களுக்கு உள்ளூராட்சி சபையில் இடம்கொடுத்து அவர்கள் ஊடாக பாராளுமன்றத் தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெறுகின்ற தந்திரோபாயத்தில் அரசியல் கட்சிகள் மிகக் கவனமாக இருக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, இம்முறை வடக்கு கிழக்கில் நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வித்தியாசமானதாக இருக்கும் என்று கூறுவதற்கு நிறையக் காரணங்கள் உள்ளன.

எது எவ்வாறாயினும் வடக்கு கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமாக இருந்தால், ஒட்டுமொத்த உள்ளூராட்சி சபைகளும் ஊழல் அற்ற; அரசியல் சார்பற்ற; பொதுத் தன்மை கொண்ட அமைப்பிடம் வருவதே பொருத்தமானதாகும்.

இதை நாம் கூறும்போது அரசியல் அற்ற பொது அமைப்பு என்பது சாத்தியமா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால்; அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி பொது அமைப்பிடம் உள்ளூராட்சி சபைகளை ஒப்படைக்க வேண்டும் என முடிவு செய்யும் பட்சத்தில் பொது அணி ஒன்று உள்ளூராட்சி சபைகளைப் பொறுப்பெடுப்பதற்கான வாய்ப்பு நிறையவே இருக்கிறது எனலாம்.

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறுப்பேற்கின்றது சீன நிறுவனம்

(கொழும்பு)

சீனாவின் மேர்ச்சன்ட் ஹோல்டிங் நிறுவனமும் இலங்கை துறைமுக அதிகார சபையும் இணைந்து உருவாக்கிய கூட்டு முயற்சி நிறுவனம, அம்பாந்தோட்டை துறைமுகத்தை வரும் டிசம்பர் 8ஆம் திகதி தொடக்கம் இயக்கவுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் வர்த்தகப் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பில், அனைத்துலக வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்த தகவலை வெளியிட்டார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறுப்பேற்கும் போது, 430 மில்லியன் அமெரிக்க டொலர் பெற்றுக் கொள்ளப்படும். எஞ்சிய கொடுப்பனவு, ஆறு மாதங்கள் கழித்து செலுத்தப்படும்.

கடந்த ஜூலை மாதம் அரசாங்கம் சீன நிறுவனத்துடன செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அமைய 1.1 பில்லியன் டொலருக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 வீத பங்குகள் குத்தகைக்கு விடப்படவுள்ளன.

இதற்கமைய அம்பாந்தோட்டையில் சீனாவின் 5 பில்லியன் டொலர் முதலீட்டில், கைத்தொழில் வலயம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இங்கு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

3 பில்லியன் டொலரில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், 125 மில்லியன் டொலரில் சீமெந்து ஆலை என்பனவற்றை உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து கூட்டு முயற்சியாக தொடங்குவதற்கான திட்டங்களும முன்வைக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில் வலயத்துக்கான காணிகள் பெரும்பாலும் அடையாளம் காணபபட்டுள்ளன. இதற்கான உடன்பாடு குறித்து சீனத் தரப்புடன் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இந்தப பேச்சுக்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் வலயத்திலும் கூட 70 வீதம் சீனாவின பங்கு இருக்கும்.

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்பாடு, ஜனவரி மாதம் தயாராகும் என்று நம்புகிறோம். இந்தியா, சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்பாடுகள் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில், சாத்தியமாகும்" என்றும அவர் தெரிவித்துள்ளார். (ம)

## துவிச்சக்கரவண்டி கண்டெடுப்பு

நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட பகுதியில் ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் குறித்த துவிச்சக்கரவண்டி நெல்லியடி வர்த்தக சங்க பாதுகாப்பு உத்தியோகத்தரினால் கண்டெடுக்கப்பட்டு வர்த்தக சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த துவிச்சக்கரவண்டியின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு வர்த்தக சங் கச் செயலாளர் சுரேரஞ்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-60)

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை வெல்வதன் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்

### விஜயகலா மகேஸ்வரன்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை வெல்வதன்ஊடாகவே நாட்டில நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நிரந்தர சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு காணாமல் போனோர் பணியகம் ஊடாக விசாரணைகளை முன்னெடுத்து தீர்வினை வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

2018ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில். இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம)

## மோட்டார் சைக்கிள் விபத்து

### மூவர் படுகாயம்

முல்லைத்தீவு நகரப் பகுதியில் இருந்து மாங்குளம் செல்லும் வீதியில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் வீதி சந்திக்கு அண்மையாக 2 மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்கள் வீதி ஓரத்தில் இருந்த கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில், 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, முள்ளியவளையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி 02 மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்கள் போட்டி போட்டு ஓடிய வேளை முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் இருந்த கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிளும் அதனுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது முள்ளியவளை குமாரபுரத்தை சேர்ந்த அகிமசன் குட்டிமணி (வயது-23), முள்ளியவளை, கீச்சிராபுரம் தண்ணீரூற்றை சேர்ந்தவர்களான குலசிங்கம் துசியன் (வயது-18) மற்றும் ஜோன்சன் தமிழமுதன் (வயது-17) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வீதியால் சென்ற பொதுமக்களினால் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற முல்லைத்தீவு பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-15)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கர்ப்பவதிகள் பூஜை செய்ய வேண்டுமா?**

கர்ப்பம் அடைந்து விட்டோம் என்று தெரிந்த பிறகு தினமும் இறைவனின் நாமத்தை ஜெபிக்க வேண்டும். முடிந்தால் கோவிலுக்குச் செல்வது, புராணக் கதைகளைப் படிப்பது, கேட்பது போன்ற இறை வழிபாடுகளில் ஈடுபடலாம். அனைத்திற்கும் இறைவனை வணங்குவதே உகந்ததாகும். நல்ல குழந்தை பிறப்பதற்கும் சுகப் பிரசவத்திற்கும் அது நல்லதாகும். பஜனை இருப்பது, வெண்ணெய், பழம் ஆகியவற்றை வைத்துப் பூஜித்து சில நாட்கள் சேவிப்பது நல்லதாகும். இயன்றவரையில் ஐந்துகாலப் பூஜை செய்வது மிகவும் சிறந்ததாகும். (தொடரும்)




சந்நிதானத்திலேயே சமைந்துவிடலாமா என்று உள்ளம் ஏங்கினும் அடுத்தவருக்கும் அந்த ஆனந்த அனுபவம் கிட்டவேண்டும் என்று கர்ப்பக்கிரகத்திலிருந்து கால்கள் நகர்கின்றன.

வெளியே தீர்த்தம் வழங்கப்படுகிறது. சடாரி வைக்கப்படுகிறது. பெற்றுக்கொண்டு வலம்வந்து அண்ணாந்து பார்த்தால் ஆனந்த நிலையத்து விமானம் அப்பழுக்கற்ற தங்கத்தால் வேயப்பட்டுத் தகதகவென மின்னுகிறது.

அந்தத் தங்கக் கோபுரத்தில் விமான வேங்டேசர் அருள்பாலிக்கிறார்.

கோபுரதரிசனம் கோடி புண்ணியம்.

கோபுரத்தையும் கோபுரத்தில் குடிகொண்ட கோவிந்தனையும் தரிசித்தவர் அகத்தில் அலை அலையாய்ப் புரளும் எண்ணங்கள் அடங்கி ஆனந்த மயமான அமைதி நிலவுகிறது. (முற்றும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் அச்செழுப் பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில குருக்கள் புதுக்குளம், குருக்கலூர், பறயனாலங்குளம், நீலியாமோட்டை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில உயிலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், அடம்பன் நீர்ப்பாசன சபை, கமலாம் பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம் ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, ரைமெக்ஸ் கார்மெண்ட், விசேட அதிரடிப்படை முகாம், எருக்கலம்பிட்டிய ஐஸ் பேசாலை Palmayrah House, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ்தொழிற் சாலை, மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# மைலோ கிண்ண நன்னடத்தை அணியாக நீக்கிலஸ், சென்ஜோன்ஸ், றோமன் கத்தோலிக்க தெரிவு






மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் சிறந்த நன்னடத்தை அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச்செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தின.

வழமையாக கடந்த 4 வருடங்களாக கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் மாத்திரம் நடைபெற்று வந்த இந்தச் சுற்றுப்போட்டியானது, இம்முறை மாற்றம் செய்யப்பட்டு பாடசாலைகளின் 14 மற்றும் 16 வயதுப்பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலும் நடைபெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றிய அணிகளிலிருந்து சிறந்த நன்னத்தை அணிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கான வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. அதாவது, போட்டியின் விதிமுறையை மதித்து நடந்த அணிகளுக்கு சிறந்த நன்னடத்தை விருதுகள் வழங்கப்பட்டன.

கழகங்களுக்கிடையிலான போட்டியில், காலிறுதி வரையில் ஆடிய நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி, கழகங்களில் நன்னடத்தை அணியாக தெரிவாகியது. 14 வயதுப்பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்ற, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அந்தப் பிரிவில் சிறந்த நன்னடத்தை அணியாகத் தெரிவு செய்யப்பட்டது. 16 வயதுப்பிரிவில் 4 ஆம் இடத்தைப் பெற்ற நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி அந்தப் பிரிவில் நன்னடத்தை அணியாக தெரிவு செய்யப்பட்டது. (க-26)

# பனால்டி உதை வரை சென்று கிண்ணத்தை வென்ற ஹென்றியரசர்







போட்டியை பனால்ட்டி உதை வரையில் கொண்டு சென்று, சரியாக வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இளவாலை ஹென்றியரசர் கல்லூரி 16 வயதுப்பிரிவு அணி சம்பியனாகியது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தின.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் 16 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான முதற்சுற்று ஆட்டங்கள், அந்தந்த மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்றன. தொடர்ந்து நடைபெற்ற, சுப்பர் - 10 சுற்று ஆட்டங்களிலிருந்து, அரையிறுதிக்கு அணிகள் தெரிவாகின. சென்.பற்றிக்ஸ் கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கொற்றாவத்தை அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

அரையிறுதியாட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியையும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி, கொற்றாவத்தை அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணியையும் வென்றன.

இறுதியாட்டம் மற்றும் மூன்றாமிடத்துக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் 9 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

முதற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் விறுவிறுப்பாக ஆடின.

34 ஆவது நிமிடத்தில், மூலை உதையிலிருந்து கிடைத்த பந்தை, சென்.பற்றிக்ஸ் அணியின் அன்ரன் பவளநாயகம் டிலக்ஸன் கோலாக மாற்றினார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில், ஹென்றிஸ் அணி, சென்.பற்றிக்ஸ் அணியின் கோல் கம்பத்தை அடிக்கடி ஆக்கிரமித்தது. போட்டியின் 39 ஆவது நிமிடத்தில், சென்.பற்றிக்ஸ் கோல் கம்பத்துக்கு அருகில் வைத்து, அந்த அணியின் வீரர் ஒருவரின் கைகளில் பந்து பட்டமையால், ஹென்றிஸ் அணிக்கு பனால்ட்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. அதனை அவ்வணியின் மரியறொசாந்த் பிரசாந்தன் கோலாக மாற்றினார். போட்டியின் முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க பனால்டி உதை நாடப்பட்டது. ஹென்றிஸ் அணி, பனால்ட்டி உதையில் 8:7 என்ற கோல்கள் கணக்கில் வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கொற்றாவத்தை அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது. இதில் கொற்றாவத்தை அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. கொற்றாவத்தை அணி சார்பாக, எஸ். விஸ்ணுபரன், வைணவன் ஆகியோர் கோல்களை அடித்தனர்.

இந்தச் சுற்றுப்போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக ஹென்றியரசர் அணியின் பி.பகலவன், இறுதிப் போட்டியின் நாயகனாக ஹென்றியரசர் கல்லூரி அணியின் மரியறொசாந்த் பிரசாந்தன், தொடரின் நாயகனாக சென். பற்றிக்ஸ் அணியின் ஈ.டனிஸன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

# மணற்காடு அணியை பந்தாடிய சென்.பற்றிக்ஸ்






சென்.பற்றிக்ஸ் அணி, மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியை பந்தாடி, மைலோ கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தின.

இந்தச் சுற்றுப்போட்டியின், அரையிறுதியாட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியையும், மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியையும் வென்றன.

இறுதிப்போட்டி மற்றும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் 9 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றன.

இறுதிப்போட்டி ஆரம்பமாகி 3 ஆவது நிமிடத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ஜெராட் ஜெரோம் முதல் கோலைப் பதிவு செய்தார். அதே உத்வேகத்துடன் ஆடிய சென்.பற்றிக்ஸ் அணிக்கு, 6 ஆவது நிமிடத்தில் ஜெரோம் இரண்டாவது கோலையும் பெற்றுக்கொடுத்தார்.

இதன் பின்னர் ஆட்டத்தை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சென்.பற்றிக்ஸ் அணி, 12 ஆவது நிமிடத்தில் 3 ஆவது கோலைப் பெற்றது. அந்தக் கோலை, நிசாந்த் அடித்தார். தொடர்ந்து 15 ஆவது நிமிடத்தில் சென்.பற்றிக்ஸ் அணியின் லியோ அணிக்கான 4 ஆவது கோலையும் அடித்தார். முதற்பாதியாட்டம் அந்த 4 கோல்களுடன் முடிவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் மேலதிகமாக கோல்கள் அடிக்கப்படக்கூடாது என்ற நோக்கில் மணற்காடு அணி, தடுப்பாட்டம் ஆடியது. இதனால் சென்.பற்றிக்ஸ் அணியின் கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டன. இருந்தும், போட்டியின் 30 ஆவது நிமிடத்தில் லியோ மேலும் ஒரு கோலை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்தார்.

அதன் பின்னர் போட்டியில் எவ்வித கோல்களும் பதிவு செய்யப்படவில்லை. முடிவில், சென்.பற்றிக்ஸ் அணி, 5:0 என்ற கோல்கள் கணக்கில் வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் சென்.ஜோன்ஸ் அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. சென்.ஜோன்ஸ் சார்பாக அதகர்ஸன், பவிந்தன் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றனர்.

இந்தச் சுற்றுப்போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக சென்.ஜோன்ஸ் அணியின் வை.ஜிம்பிரியன், இறுதிப் போட்டியின் நாயகனாக சென். பற்றிக்ஸ் அணியின் ஜெராட் ஜெரோம், தொடர்நாயகனாக மணற்காடு அணியின் றொபேர்ட் மிதுசன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (க-26)

## நீரில் மூழ்கியது...

நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

குடத்தனை விளாங்காட்டு சந்தியில் இருந்து மணற்காட்டிற்கு செல்லும் பிரதான வீதியில் ஒரு அடி உயரத்திற்கு வெள்ளம் காணப்படுகின்றது. இதைவிட உள்வீதிகளில் மூன்று அடி வரையில் வெள்ளம் தேங்கியுள்ளது.

மணற்காடு றோ.க.த.க பாடசாலையில் இரண்டு அடி வெள்ளம் தேங்கி நிற்கின்றது. அங்குள்ள சிறுவர் பூங்காவில் மூன்று அடி வெள்ளம் காணப்படுகிறது.

இதைவிட பொதுமக்கள் வசிக்கும் வீடுகளில் ஒரு அடிவரையில் வெள்ளம் காணப்படுகின்ற போதிலும் வீட்டின் பின்பகுதிகளில் இரண்டு அடிவரையில் வெள்ளம் காணப்படுகிறது.

மேலும் மழை பொழியுமாயின் விளாங்காட்டு சந்தியில் இருந்து மணற்காட்டிற்கு செல்லும் வீதி முற்றாக துண்டிக்கும் அபாயமும் காணப்படுவதுடன் வெள்ளம் மேலும் உயரும் நிலையில் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறக் கூடிய நிலையும் காணப்படுகிறது.

வெள்ளத்திற்கு மத்தியிலும் அப்பகுதிக்கு பொறுப்பான கிராம அலுவலரான உமாசங்கர் அப்பகுதி வீடுகளிற்கு சென்று வெள்ள நிலைமை குறித்து ஆராய்ந்து வருகின்றமையினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (ம-60)

## பியர் விலைக்குறைப்பு...

மாத்திரமே இடம்பெறுவதாகவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பியர் விலை குறைப்பினால் சிறுவர்களும், பெண்களும் மதுபானப் பயன்பாட்டுக்கு தூண்டப்படுவதாகவும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி உறுப்பினரான அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார். தான் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கப் போவதில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## 2025இல் அனைவருக்கும்...

துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

இம்முறை வரவு செலவுத் திட்டதின் ஊடாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு கடந்த ஆண்டை விட 66 வீதத்திற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வீடமைப்புத் துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தி அதன் முழுமையான பிரதிபலனை நாட்டு ஏழை மக்களுக்கு வழங்குவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு உரையாற்றியுள்ளார். (ம)

## அத்தியாவசிய...

வீரவினால் இவற்றின் விலைகள் குறைக்கப்பட்டன.

எவ்வாறாயினும் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்படவில்லை என்பதுடன், அடுத்த வாரமளவில் வர்த்தமானி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விலை குறைக்கப்பட்ட அத்தியாவசிப் பொருட்களுக்காக புதிய விலை நிர்ணயிப்பதற்குரிய ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தை தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நுகர்வோர் சபையினால் விலைகள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட உள்ளது.

உருளைக் கிழங்கு ஒரு கிலோ கிராம் மற்றும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ ஆகியவற்றுக்கான வரி 39 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், ஒரு கிலோ கிராம் பருப்புக்கான வரி 12 ரூபாயினால் குறைக்கப்பட்டது.

இது தவிர மேலும் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. (ம)

## சதொசவில்...

தேங்காய் பெற்றுக் கொள்ள முடியும் என சதொச தலைவர் ஆர்.ரி.எம்.கே.பீ.தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதற்கென 12 இலட்சம் தேங்காய்களை நாட்டிலுள்ள அனைத்து சதொச நிலையங்களுக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## சமகால அரசியல்...

செஞ்சிலுவைச் சங்க தலைவரும், மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்க ஒன்றிய அமைப்பாளருமான கெனடி இந்தக் கூட்டத்துக்கான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொண்டிருந்தார்.

இந்த கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், டெலோவின் செயலாளர் நாயகம் சிறீகாந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த அருட் தந்தையர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையே கருத்து முரண்பாடு வலுப்பெற்று வருகின்றது.

இந்த நிலையில், தமிழ் அரசியல் பிரதிநிதிகளை நேற்று நேரில் அழைத்து மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கலந்துரையாடினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து உத்தியோகப்பூர்வமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆரம்பித்தன.

எனினும், பின்னர் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பின் அதிகாரத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிப்பதாக அண்மைக்காலமாக பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிக்ள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

வடக்கு மாகாண சபையில் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கான அமைச்சர்களை பதவி நீக்கம் செய்வதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுத்த சந்தர்ப்பத்தில் தமிழரசுக் கட்சி தமது அதிகாரத்தை நிரூபிக்கும் வகையில் பல செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படாமைக்கு தமிழரசுக் கட்சியும் ஒரு காரணம் என கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் கடந்த காலங்களில் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தன.

தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகள் காரணமாக எதிர்வரும் தேர்தல்களில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடப்போவதில்லை என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பகிரங்கமாக அறிவித்துள்ளது.

கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்வதற்கான உரிமை அக்கட்சிக்கு உள்ளதென தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து யாரும் வெளியேறலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் ஊடகங்கள் மூலம் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் கூட்டமைப்பின் ஒற்றுமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் தற்போது ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது

இதன் பின்னணியில், கூட்டமைப்பின் அரசியல் பிரதிநிதிகள் மன்னார் ஆயர் இல்லத்திற்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தனர்.

மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக அங்கு நடைபெற்ற கலந்துரையாடலுக்கு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் பேரருட் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமை தாங்கினார். (ம-4)

## மழையினை சாதகமா...

டர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 50 பவுண் நகைகள் மற்றும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடர்கள் எடுத்து சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் திருமண நிகழ்வு ஒன்று இடம்பெற்றதாக கூறப்படுகிறது. நேற்று இரவு பெய்த கன மழையினை சாதகமாக பயன்படுத்திய திருடர்கள் வீடு புகுந்து இத் திருட்டினை மேற்கொண்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் மழைக்குளிருக்கு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளனர். இந்நிலையிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருட்டு போன நகையின் பெறுமதி 20 இலட்சம் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது.

எனினும் காலை எழுந்து பார்த்த போதே வீட்டு அறையில் இருந்த பொருட்கள் அனைத்தும் சிதறுண்டு இருந்துள்ளது. அத்துடன் வைக்கப்பட்டிருந்த இடத்தில் நகைகளை தேடிப் பார்த்த போது இரவு திருடர்கள் புகுந்தமை தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

## மட்டக்களப்பு பொது...

குழுவினர் மட்டக்களப்பில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடவுள்ளனர் என தெரிய வருகிறது. (ந)

## உள்ளூராட்சி சபை...

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் தலைவர் காங்காணி கல்பாணி லியனகே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களை உள்ளடக்கிய, வர்த்தமானி அறிவிப்பு முதலில் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இந்த வர்த்தமானி அறிவிப்பு அடுத்த சில நாட்களில் வெளியிடப்படும்.

இதுசம்பந்தமாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரால், கடந்த நவம்பர் 1 ஆம் நாள் வெளியிடப்பட்ட வர்த்தமானியைப் பயன்படுத்தி இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதன்படி, உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,486 இல் இருந்து 8,356 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 336 ஆக இருந்த மொத்த உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கையும் 341 ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 23 பேரிலிருந்து 27 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 18 உறுப்பினர்களை கொண்டிருக்கும் கட்சி ஆட்சி அமைக்கும். யாழ்ப்பாண மாநகர சபைக்கு தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி ஆரம்பமாகும் என மாகாண சபைகள் ம்ற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் சாவகச்சேரி நகர சபைகளுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படவில்லை.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளுக்கு 9 உறுப்பினர்களும் சாவகச்சேரி நகர சபைக்கு 11 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவேண்டும்.

அவர்களின் பதவிக்காலம் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் வர்த்தமானி அறிவிப்புவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தீவகத்தில் வேலணை பிரதேச சபைக்கு ஒரு உறுப்பினர் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பிரதேச சபைகளுக்கான உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டு உள்ளது.

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 11 பேரிலிருந்து 8 பேராக குறைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச சபைக்கு உறுப்பினர் எண்ணிக்கை 9 பேரிலிருந்து 8 பேராக குறைக்கப்பட்டுள்ளனர்.

வேலணைப் பிரதேச சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 11 பேரிலிருந்து 12 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வலிகாமத்திலுள்ள 5 பிரதேச சபைகளில் வலி. வடக்கு பிரதேச சபை தவிர்ந்த ஏனைய 4 பிரதேச சபைகளுக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு (சுழிபுரம்) பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 14 பேரிலிருந்து 15 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர். வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் கள் 21 பேர் என்ற எண்ணிக்கை மாற்றம் செய்யப்படவில்லை. வலி. தென்மேற்கு ( மானிப்பாய்) பிரதேச சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 16 பேரிலிருந்து 17 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர். வலி. கிழக்கு (புத்தூர்) பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 21 பேரிலிருந்து 22 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

வலி. தெற்கு பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 16 பேரிலிருந்து 18 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபைக்கான உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மாற்றமில்லை. பருத்தித்துறை, வடமராட்சி தென்மேற்கு, சாவகச்சேரி மற்றும் காரைநகர் பிரதேச சபைகளுக்கு உறுப்பினர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 பேரிலிருந்து 12 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர். வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 17 பேரிலிருந்து 19 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 பேரிலிருந்து 17 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர். நல்லூர் பிரதேச சபையின் 12 உறுப்பினர்களில் மாற்றமில்லை. காரைநகர் பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 5 பேரிலிருந்து 6 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 9 பேரிலிருந்து 8 பேராகக் குறைக்கப்பட்டுள்ளது. 5 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் கட்சி சபையை அமைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கரைச்சிப் பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 19 பேரிலிருந்து 21 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 9 பேராகவிருந்து 11 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர். 7 உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சி அதிகாரத்தைப் பெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுக்கு தெரிவாகும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி ஆரம்பமாகும் என மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் நானாட்டான் பிரதேச சபைக்கான உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபைக்கு உறுப்பினர்கள் 7 பேரிலிருந்து 9 பேராக அதிகரிக்கின்றனர். மன்னார் பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை 9 பேரிலிருந்து 12 பேராக அதிகரிக்கின்றனர். நானாட்டான் பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களிலிருந்து 10 பேராக குறைக்கப்படுகிறது. முசலி பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் 9 பேரிலிருந்து 10 பேராக அதிகரிக்கப்படுகின்றனர். மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களிலிருந்து 13 பேராக அதிகரிக்கப்படுகின்றனர்.

இந்தச் சபைகளுக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மனித உரிமை மீறல்கள் தொடர்பில்...

தர் வதைகளும், துஷ்பிரயோகங்களும் கடந்த ஜூலை வரை தொடர்ந்ததாக நாட்டின் சிறுபான்மை உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், அசோசியேட்டட் பிரெஸ் நிறுவனத்தின் புதிய அறிக்கைக்கு ஏற்ப விசாரணைகளை ஆரம்பிக்குமாறு, வைத்தியர்கள், உளவியலாளர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் ஐ.நாவிடம் முறையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(C-346)

அமெரிக்க லொத்தர் விசா
இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)
18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
இன்னும் சில நாட்களே, அலட்சியம் வேண்டாம்
யாழ்ப்பாணம் / வேலனை / கிளிநொச்சி
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
(C-359)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
அமெரிக்க லொத்தர் விசா (Green Card)முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலனை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா
(C-341)

தோட்டக்காணி விற்பனைக்கு
அரியாலை கிழக்கு 3-ம் கட்டையில் அமைந்துள்ள 18 ஏக்கர் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்கள் நேரில் பேசித் தீர்க்கலாம்.
தொடர்பு: 0212221827, 0776080565
(1295)

One roof of growth
எமது EVEREST இல்லத்திற்கு புதிய இளைஞர், யுவதிகளை வரவேற்கிறோம்.
இப்பொழுது எமது இலக்கு ஆரம்பமாகிறது. எமது புதிய கிளைகளுக்கு புதுமுக இளைஞர், யுவதிகளை இணைக்க உள்ளோம். (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா)
எம்மிடம் 100 இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன
முகாமையாளர் (10 நபர்கள்) Rs.40,000/= - 60,000/=
உதவி முகாமையாளர் (15 நபர்கள்) Rs. 35,000/=
விற்பனை பிரதிநிதிகள் (50 நபர்கள்) Rs.28,000/=
அலுவலக உதவியாளர் (5 நபர்கள்) Rs.15,000/=
மேற்பார்வையாளர் (20 நபர்கள்) Rs. 25,000/=
விசேட செயற்பாட்டிற்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.
தொலைபேசி இலக்கங்கள் : 077 160 7411 / 076 878 2921
Office Number: 021 722 3317
everest02jaffna@gmail.com
(1308)

வாகன சேவிஸ்நிலையம் விற்பனைக்கு
யாழ் நகருக்கு அண்மையில் விசாலமான நிலப்பரப்புடன் வாகன சேவிஸ் நிலையம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- 075 942 6609
(1249)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விற்பனைக்கு
உணவகங்களில் உணவு பார்சல் செய்யக் கூடிய மற்றும் மாணவர்கள் பயிற்சி செய்து பழகக்கூடிய கட்டிங் சீட் விற்பனைக்குண்டு.
வலம்புரி
இல.3,2ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்
021 567 1532

SB Travels and Tours Pvt Ltd
SRI LANKAN AIRLINES இன் நேரடி முகவரான SB Travels and Tours Pvt Ltd இன் விமான பயணச்சீட்டுக்களுக்கான விசேட விலைக்கழிவுகளாக சென்னைக்கு 40kg உடன் Air Indiaவில் 26,000/= இருந்தும் 23,000/= இருந்து Spice Jetலும் மதுரைக்கு 22,800/= இருந்தும் திருச்சிக்கு 32,200/= இருந்தும் பெற்றுக்கொள்ளலாம். இந்திய விசா விண்ணப்பப்படிவம் 100/= இற்கு நிரப்பித் தரப்படும் 46kg உடன் one wayஇற்கு கனடாவிற்கு 68,500/= இருந்தும் பிரான்ஸுக்கு 39,500/= இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.( நிபந்தனைக்கு உட்பட்டது) 40kg உடன் சிங்கப்பூருக்கு 31800/= இல் இருந்தும் ஐயப்ப பக்தர்களுக்கான குழு ரிக்கட்கள் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
No.212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9555, 222 8555, 076 691 1080,81, 076 691 1082, 83, 0777 111 228
(C-353)

விசேட விலைக்கழிவு!!!



44 % வரை
Lanka Wall Tiles, Floor Tiles,
கொமட் வகைகள், குளியலறை சாதனங்கள், மற்றும் பெயின்ற் வகைகள் ஏகவிநியோகஸ்தர்
நியூ கமல் செரமிக்ஸ்
இல. 37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2085, 021 221 9305
Fax : 021 222 4544
(நிபந்தனைக்குட்பட்டது)
(1302)

அறை வாடகைக்கு உண்டு
நல்லூர் செட்டித் தெருவில் சகல வசதிகளுடனும் கூடிய மூன்று அறைகள் வாடகைக்கு உண்டு
தொடர்பு: 077 525 6311

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
(C-303)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
இன்னும் ஒரு சில நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.
0768226243
பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச விசா வாய்ப்புக்கள் இருக்காது.ஆகவே இப்போதே முந்துங்கள்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
நான் A/L எடுத்துக்கொண்டிருக்கும்போதே பதிவு செய்துவிட்டேன் பெறுபேறுகள் வரவும் விசா வரவும் சரியாக இருந்தது.இப்போது அமெரிக்காவில் எனது வாழ்க்கை நான் எதிர்பார்த்த விதத்தில் அமையக்கூடியதாக இருந்தது.V2 TRAVELS க்கு நன்றிகள்.
(C-303)
2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



யோகேஸ்வரன் - சுவீந்திரன்
அமெரிக்கா விசா வெற்றியாளர்
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

MBSL

Merchant Bank of Sri Lanka & Finance PLC, one of the leading, well-established Finance Institutions listed on the Colombo stock exchange, has been awarded "Best Employer Brands 2016" and "Asia's Best Employer Brand Awards 2017" by World HRD Congress for enriching Human Capital. We are seeking dynamic and result-oriented individuals to join our team as:

PAWNING OFFICERS/RECOVERY OFFICERS/ MARKETING OFFICERS

JAFFNA/KILINOCHCHI/TRINCOMALEE/VAVUNIYA/BATTICALOA/HATTON BRANCHES

Required Qualifications, Skills & Experience
- Pass GCE O/L Examination
- Minimum 2 years' experience in relevant field
- Good communication skills
- Age below 30 years

Staff Assistant
- GCE (A/L) Examination with 3 passes
- GCE (O/L) Examination with 5 Credit Passes
- 01 year experience in the relevant field

Remuneration Package
Selected candidates will receive an attractive remuneration package on par with industry standards for above positions.

How to Apply
Applicants are advised to indicate the position applied for on the top left corner of the envelope or subject line of the e-mail and send your detailed CVs along with names of two non-related referees within 7 days of this advertisement to:

Assistant General Manager – Human Resources
Merchant Bank of Sri Lanka & Finance PLC
Level 17, Bank of Ceylon Merchant Tower,
No. 28, St. Michael's Road, Colombo 03.
E-mail: careers@mbslbank.com
(C338)

CCTV
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
வேலைவாய்ப்பு உத்தரவாதம்* (*Conditions Apply)
Next Batch : 18- Nov-2017

Mobile Phone Repairing Course



I Phones & Smart Phones
Hardware , Software and Unlocking
Next Batch start on 18.11.2017
* சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
* தனிப்பட்ட கவனிப்பு.
* சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
*10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.
iCS EDUCATION
77,மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
021-7306000, 076-7013060
(C-357)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378


வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 142

வள்ளுவர் ஆண்டு 2048 12.11.2017 தொலைபேசி : 021 222 3378



# தமிழ் மக்களை ஏமாற்றுவதில் யாருக்கு முதலிடம் ?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# உள்ளூராட்சித் தேர்தல் மக்களின் பணி என்ன?

உள்ளூராட்சி சபைத் தேர்தலை தமிழர் தாயகம் எங்ஙனம் எதிர்கொள்ளப் போகிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் எமது மக்கள் கரிசனை கொண்டுள்ளனரா? என்ற கேள்விகள் எழுகின்ற இந்நேரத்தில், அதற்கான வேட்பு மனுத் தாக்கல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதியுடன் நிறைவு பெறுகின்றது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு மாகாணத்தின் பெரும் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்திருந்த போதிலும் அவற்றின் செயற்றிறன் படு தோல்வி என்பதைக் கூறித் தானாக வேண்டும்.

செயற்றிறன் அற்ற நிர்வாகம், ஊழல் மோசடிகள், திட்டமிடப்படாத வேலைத்திட்டங்கள், செல்வாக்குக் கலாசாரங்கள், அதிகாரிகளை இயங்கவிடாமல் தடை செய்யும் அதிகாரங்கள் என அனைத்தும் எழுந்து நின்று தாண்டவமாடின. இதன் காரணமாக சில சபைகளை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கலைப்புச் செய்ய வேண்டியதாயிற்று.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைகள் மக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகள் கிடைக்காமல் அல்லது காலதாமதமாகிப் போவதாக இருந்தது என்பது உண்மை.

இதன்காரணமாக உள்ளூராட்சி சபைகள் மீது மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர். இந்த வெறுப்பு நிலையில் இருந்து தங்களை மீட்டெடுப்பதென்பதும் அதே மக்களிடமே இருக்கின்றது.

ஆம், மீண்டும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரவுள்ளது. கடந்த முறை விட்ட அதே தவறு இம்முறையும் விடப்படுமாக இருந்தால் அது ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் பலமடங்கு அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இதனை நாம் கூறும் போது அப்படியானால் முன்னிருந்தவர்களுக்கு இம்முறை சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது என்று நாம் கூறுவதாகவோ அன்றி ஆட்சியில் இருந்த அரசியல் தரப்புக்களைக் குறை பாடுவதாகவோ எவரும் கருதிக் கொள்ளக்கூடாது.

மாறாக நாம் கூறுவதெல்லாம் கடந்த முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல் மீது தமிழ்மக்கள் கொண்டிருந்த பற்றற்ற நிலைமை இந்த முறையும் தொடரக்கூடாது என்பது தான்.

விட்ட தவறில் இருந்து, நடந்த பிழையில் இருந்து கற்றுக் கொள்வது தான் முன்னேற்றத்திற்கான ஒரே வழி. எனினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தேர்தல் அரசியல் குறித்து ஆராய்வது கிடையாது. ஏதோ மரபு வழி அரசியல் நடப்பது போலவும் அதனைக் குழப்பாமல் வாக்களித்து விட்டு நம் பாட்டைப் பார்ப்போம் என்பதாகவுமே நினைக்கின்றனர். நமக்கேன் வீண் வேலை என்று நினைப்பதனால் தான் எங்கள் அரசியல்வாதிகள் எங்களை ஏமாற்றுகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் தமிழ் மண்ணை அபிவிருத்தி செய்வதில்; எங்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதில் தமிழ்த் தலைவர்கள் கடுமையாகப் பாடுபட்டிருக்க வேண்டும். எங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைச் சுட்டிக்காட்டி அந்தக் காரியத்தை முடித்திருக்க வேண்டும்.

ஓ! சர்வதேசமே வன்னியில் எங்கள் இனம் அழிக்கப்பட்டதே இதற்கு நீ எடுத்துத் தந்த நிவாரணம் என்ன என்று கேட்டிருக்க வேண்டும்.

ஆனால் அதைச் செய்யாமல் அரசுடன் சேர்ந்து சென்று தங்களின் சொந்த வாழ்வைத் துலங்க வைப்பதில் கரிசனை காட்டப்பட்டதே அன்றி போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

சுருங்கக்கூறின் சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றியதை விட தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ்மக்களை ஏமாற்றியதே அதிகம் எனலாம்.

இருந்தும் இதுபற்றிய நினைப்புகளை நாம் அறுத்துவிட்டு அரசியலில் எது நடந்தாலும் நமக்கென்ன என்று இருந்ததால் இன்று எங்கள் நிலைமை படுமோசமாகியுள்ளது.

இதில் இருந்து விடுபடுவதாக இருந்தால் எங்கள் அரசியல்வாதிகளுக்குச் சரியான பாடம் புகட்டப்படவேண்டும். தாங்கள் விட்ட தவறுக்குத் தமிழ்மக்கள் தங்களைத் தண்டித்துவிட்டனர் என்று உணர வேண்டும். இதற்கான செயற்பாடு மக்களிடம் இல்லையாயின் தொடர்ந்தும் அவர்களின் ஏமாற்று நாடகம் கனகச்சிதமாக அரங்கேறும் என்பது நிச்சயம்.

ஆகையால் திருத்தத்திற்கு இடம் கொடுக்கும் வகையில், நடைபெறப் போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளுமையும் செயற்றிறனும் மிக்க ஆட்சிச் சபைகளை தேர்ந்தெடுப்பதில் தமிழ்மக்கள் உறுதியாக இருக்க வேண்டும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது மாகாண மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பதற்கு அப்பால், ஊரில் உள்ள சேவையாளர்களை, நிர்வாகிகளை, பொதுத் தொண்டு புரிபவர்களை, பரோபகாரிகளை முன்னிலைப்படுத்தி அவர்கள் மூலம் சபைகளை இயக்குவது என்பது இங்கு அமுலாக்கப்பட வேண்டும்.



ஆகையால் அரசியல், அரசியல் கட்சி என்ற எல்லைகளைத் தாண்டி ஒரு புதிய பாணியில் புதிய வியூகம் அமைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதே தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.


எனினும் இது விடயத்தில் புத்திஜீவிகள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் ஆகியோரின் வகிபங்கு அவசியமாகும்.

கூடவே காலம் கடத்தாமல் தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சிச் சபைகள் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் இயங்குவதற்கான ஏற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்படுவது அவசியம்.

இது விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் அரசியல் என்ற எல்லை கடந்து ஒரு பொது அணிக்கு தமது ஆதரவை வழங்க முடியும். இது பற்றியும் சிந்திப்பது தமிழ்மக்களுக்கு நன்மை தரும்.

**விதுரன்**

# ஆலடி மாநாடு



## டிசெம்பர் மாதம் 19,20 கலகலப்பான நாட்கள்

**ப**ண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** வரவு-செலவுத் திட்டம் வெறும் வரவு செலவோட நிற்குது போல.

**வாத்தியார்:** வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில வாசிக்கப்படப் போகுது எண்டால் மக்கள் இரவிரவாக விழித்திருந்து வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்வர். அந்தக் காலத்தில வரவு- செலவுத் திட்டம் இரவிலதான் வாசிக்கப்படும். முழுமையாக வாசித்து முடிய நடுச்சாமம் கடந்து போயிடும்.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லத்தான் ஞாபகம் வருகுது. ஒருக்கால் எல்லாப் பொருளுக்கும் விலை ஏற்றின வரவு- செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில வாசிக்கப்பட்டது. பொருட்களின் விலை ஏற்றத்தால மக்கள் கவலைப்பட்டினம். அப்ப யாழ்ப்பாணத்தில ஈழநாடு பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. ஈழநாடு ஆசிரியர் சபாரட்ணம் மாஸ்ரர் **நள்ளிரவில் நட்டம் பயின்றானே** என்று ஆசிரியர் தலையங்கம் எழுதினார். இதெல்லாம் ஒரு காலம்.

(பண்டிதர் பரமலிங்கம் பெருமூச்சுவிட்டபடி அமைதியானார். அந்த அமைதியை விதானையார் விசுவலிங்கம் கலைத்தார்.)

**விதானையார்:** இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில வடக்கு- கிழக்கிற்கு முன்னுரிமை கொடுத்திருக்கினம். இது ஒரு நல்ல விடயம்.

**கங்காணி:** அது சரி உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்படிப் போகப் போகுதாம்.

**விதானையார்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில இருந்து தாங்கள் பிரிந்து நின்று போட்டியிடப் போவதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்திருக்கிறார்.

**வாத்தியார்:** இருந்தும் சுரேஷ் பிறேமச்சந்திரனையும் சேர்த்து தேர்தலில நிற்கிறதுதான் நல்லது எண்டு சம்பந்தர் ஐயா கருதுகிறாராம். அதால சுரேஷ் பிரேமச்சந்திரனோட கதைக்கிற பொறுப்பை மாவை. சேனாதிராஜா விட்ட ஒப்படைத்துள்ளதாகவும் தகவல்.

**பண்டிதர்:** பொது அணி யொன்று களத்தில இறங் கப் போவதாகவும் தகவல் இருக்கல்லோ.

**வாத்தியார்:** தேர்தலில ஆரு இறங்கினாலும் முதலில மக்களிட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த வேணும். இல்லையெண்டால் சுத்திச் சுத்திச் சுப்பற்ற கொல்லைக்குள்ள என்பதுதான் எங்கட நிலைமையாகிவிடும்.

**சாத்தியார்:** சரி...சரி... கந்தறுந்த அரசியலை விட்டிட்டு பயனுள்ள நாலு விடயத்தைக் கதைப்பம்.

**விதானையார்:** அரசியலை விட்டிட்டுக் கதைக்கிறதெண்டால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி சனி மாற்றமல்லோ. அப்ப அதைப் பற்றித்தான் கதைக்க வேணும்.

**கங்காணி:** டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதிதான் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யிற இறுதி நாள். அப்ப அண்டைக்குத்தானோ சனி மாற்றமும் நடக்கப் போகுது.

**பண்டிதர்:** ஏதோ இந்த முறையாவது சனி மாற்றம் நல்லதா நடக்கட்டும்.

**வாத்தியார்:** அப்ப டிசெம்பர் 19, 20 எல்லாம் கலகலப்பாக இருக்கும் எண்டு சொல்லுறியள்.

**மூப்பர்:** ஏன் வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.

**வாத்தியார்:** டிசெம்பர் 19 தமிழ்மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடப் பூர்த்தி. டிசெம்பர் 20 வலம்புரி நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டு 18 வருட நிறைவு. அத்தோட உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் இறுதி நாளும். போதாக்குறைக்கு அண்டைக்குத்தான் சனி இடப்பெயர்ச்சியும் நடக்குது. அதுதான் சொன்னனான் டிசெம்பர் 19, 20 கலகலப்பாக இருக்கும் எண்டு.

**கங்காணி:** அட சங்கதி அப்படியோ. நான் நினைச்சன் டிசெம்பர் மாதம் பொதுவில மரநடுகைக்குரிய காலம். அதுதான் கலகலப்பாக இருக்குமெண்டு சொல்லுறியளாக்கும் எண்டு.

**வாத்தியார்:** அட! மரநடுகை பற்றி கங்காணியார் சொல்லத்தான் ஞாபகம் வருகுது. கடந்த 9 ஆம் திகதி கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவில் மண்டபத்தில ஒரு திருமணம் நடந்தது. நானும் அங்க போயிருந்தனான். அங்க ஒரு வித்தியாசமான- முன்மாதிரியான செயற்பாடு நடந்தது.

**மூப்பர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** திருமணத்திற்குச் சென்ற அத்தனை பேருக்கும் ஒவ்வொரு பலாக்கன்று குடுத்தவியள். அதுமட்டுமல்ல சொப்பிங் பாக் பயன்பாட்டையும் நிறுத்தி நல்லதொரு துணி பாக்கில பலாக்கண்டை வைத்துக் கொண்டு செல்வதற்கு வசதியாக அப்படியொரு ஏற்பாடும் செய்திருந்தவியள்.

**பண்டிதர்:** உண்மையில இது ஒரு நல்ல செயற்பாடுதான். கல்யாண வீடுகளில குபேரன் சிலை கொடுக்கிறது, கண்ணன் ராதை சிறு சிலை இப்படிக் கொடுக்கிறதால எந்தப் பயனும் இல்லை.

**விதானையார்:** உண்மைதான். கல்யாண வீடுகளில தந்த குபேரன் சிலையள் சோக்கேஸ் நிறையக் கிடக்குது. குபேரன் சிலையை விற்றவன் பணக்காரன் ஆகிற்றான். ஆனால் குபேரன் சிலையை வீடுகளில வைச்சிருக்கிற நாங்கள் சில்லறைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி நாங்களும் சில்லறையாப் போனம்.

(ஆலடியில் சிரிப்பு)

**சாத்திரியார்:** கொக்குவிலில நடந்த திருமண வீட்டில மரக்கன்றுகள் கொடுத்தது போல வசதி வாய்ப்புக்கள் உள்ள எல்லாரும் அந்த முறையைப் பின்பற்றினால் மரநடுகைக்கு உதவினதாகவும் இல்வாழ்க்கையில இணையிற போது நல்ல பணி செய்த புண்ணியமும் கிடைக்கும்.

(சாத்திரியார் இப்படிக் கூறியதும் அப்ப இது தொடர்பில ஒரு தீர்மானம் எடுப்பம் என்று மூப்பர் கூறினார். மூப்பரின் கருத்தை ஏற்றுக்கொண்ட ஆலடி மாநாட்டுத் தலைவர் பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.)

**பண்டிதர்:** வசதி வாய்ப்புள்ளவர்கள் தங்களின் திருமண வைபவங்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள், ருதுசாந்தி நிகழ்வுகள் இவற்றின் போது பயன்தரு மரக்கன்றுகளை வழங்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றுவம் என்று அறிவிக்க அனைவரும் அத்தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

(தீர்மானம் நிறைவேற்றிய கையோடு விதானையார் ஏதோ சொல்ல முற்பட்டார். அதற்கு உறுப்பினர்கள் இடம் கொடுத்தனர்)

**விதானையார்:** மரக்கன்றுகளை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் திருமண வீடுகளில மரக்கன்றுகளை வழங்குவதற்கு வசதியாக மா, பலா, கொய்யா, மாதுளை, தென்னங்கன்று இப்படியான நாற்றுக்களைத் தயார்படுத்தி வைப்பதுடன் அவற்றை ஒரு குறைந்த மட்ட இலாபத்துடன் விற்பதற்கும் முன்வர வேணும்.

இப்படிச் செய்வதன் மூலம் மரநடுகை ஊக்குவிக்கப்படும். அத்தோட எங்கட மண்ணில பழக்கன்று விற்பனை நிலையங்களிலும் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இந்தியாவில இருந்து குபேரன் சிலையை வாங்கிவந்து இங்க இருக்கிறவியளுக்குக் கொடுக்கிறதால எந்த நன்மையும் வராது.

**பண்டிதர்:** எனக்கெண்டால் திருமண வீடுகளில இன்னொரு தீர்மானமும் எடுக்கவேணும் போல இருக்குது.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா என்ன சொல்லுறியள்.

**பண்டிதர்:** வீடியோ எடுக்கிறவியளைக் கட்டுப்படுத்த வேணும். இவையள் அங்க நிண்டுகொண்டு கொஞ்சம் பொறு தாலியை ஆறுதலாகக் கட்டு எண்டு சகுனப் பிழையாச் சொல்ல முதற்கோணம் முற்றிலும் கோணமாய்ப் போயிடுது.

**சாத்திரியார்:** எனக்கு நல்லாத் தெரியும் ஒரு வருடத்திற்கு முன்னர் ஒரு திருமண வீட்டில பார்த்தன் மாப்பிள்ளையிட்ட குருக்கள் ஐயா தாலியை எடுத்துக் குடுத்திட்டார். மாப்பிள்ளை தாலியை எடுத்துக் கட்டப்போகின்ற நேரம் வீடியோகக்காரன் கொஞ்சம் பொறு கொஞ்சம் பொறு எண்டு சொல்லி ஒரு தடை போட்டான். இப்ப அந்தக் குடும்பம் விவாகரத்துக் கேட்டு நீதிமன்றில நிற்குது பார்த்தியளோ.

**மூப்பர்:** சிலவேளை இப்ப விவாகரத்து அதிகரிக்கிறதுக்கு இந்த வீடி யோக்காரர்களின்ர சகுனப் பிழைகளும் காரணமாக இருக்குமோ. மூப்பர் ஒரு பெரும் சந்தேகத்தை எழுப்ப இது தொடர்பில அடுத்த மாநா ட்டில் ஆராயப்படும் என்று பண்டிதர் அறிவிக்க அந்நேரம் ஆலடிப் பிள்ளையாரின் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# எரிநட்சத்திர மழை



குட்டி பிரசன்னாவுக்கு அன்று பிறந்தநாள். 7 வயதைத் தொட்டிருந்தான். அந்த மலைப்பிரதேசத்தில் நிலவொளியில்தன் அக்கா. அம்மா. அப்பாவுடன்படகுச் சவாரி செய்துகொண்டிருந்தான். அப்போது வானில் மிக அதிக அளவில் எரிநட்சத்திரங்கள் மழையாய்ப் பெய்யத் தொடங்கின.

"அப்பா! அங்க வானத்துல என்ன?" என்று ஆச்சர்யத்துடன் தன் குட்டி விரலை அந்த இரவு வானைநோக்கிநீட்டினான் பிரசன்னா.

"சொல்றேன் வா!" என்று படகில் அங்கும் இங்குமாய் ஓடிக்கொண்டிருந்தவனைப் பிடித்து மடியில் உட்கார வைத்த அப்பா. பொறுமையாக விளக்கத் தொடங்கினார்.

"அதுதான் எரிநட்சத்திரங்களின் மழை. இது ஒரு வானியல் நிகழ்வு. வருடத்தின் ஒரு குறிப்பிட்ட நாளில் வானில்இதுபோல நிறைய எரிநட்சத்திரங்களைப் பார்க்க முடியும்"

"அது எப்படிப்பா உருவாகுது?" என்று ஆர்வத்துடன் கேட்டாள் அக்கா.

தொண்டையைக் கனைத்து சரிசெய்து கொண்ட அப்பா. மீண்டும் பேச ஆரம்பித்தார். "ஆங்கிலத்தில் comet என்றழைக்கப்படும் வால்நட்சத்திரங்கள். பனிக்கட்டியாலான சிறிய. சூரியக் குடும்பப் பொருளாகும். அவை அங்கும் இங்கும் உன்னைப் போலவே துறுதுறுவென அலைந்து கொண்டிருக்கும். அவற்றின் ஒரு சில பகுதிகள் உடைந்து விண்கற்களாக மாறி சூரிய மண்டலத்தில் சுற்ற ஆரம்பித்துவிடுகின்றன. இதைப் போல் பில்லியன் கணக்கில் சிறு கற்களும், உலோகப் பாறைகளும் ஆங்காங்கே வான் வெளியில் நீந்திக் கொண்டிருக்கின்றன. அவை நம்பூமி போன்ற கோள்களின் அருகில் வரும் போது. புவியீர்ப்பு விசையால் இழுக்கப்பட்டு நம் காற்று வெளி மண்டலத்துக்குள் வந்துவிடுகின்றன. அப்படி வந்தவை வேகமாகக்கீழே இறங்கும்போது. வளிமண்டலத்தில் உராய்வு ஏற்பட்டுத் தீப்பிடித்துக்கொள்கின்றன. எரிநட்சத்திரங்களாக மாறி ஒளிக்கீற்றுகளை உருவாக்கியவாறே பூமியில் இறங்கிவிடுகின்றன!"

தொடரும்...

# பொது அறிவு

1. உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன?
**12,500**
2. புயல் பற்றிய எச்சரிக்கை கொடுக்கத் துவங்கிய ஆண்டு ?
**1886**
3. அமெரிக்காவில் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரே கத்தோலிக்க ஜனாதிபதி யார்?
**ஜான் எப் கென்னெடி**
4. மஞ்சள் ஆறு என அழைக்கப்படும் ஆறு ?
**ஹோவாங்கோ ஆறு**
5. இந்திய நெப்போலியன் என அழைக்கப்பட்டவர்?
**சமுத்திர குப்தர்**
6. இந்தியாவையும் இலங்கையும் பிரிக்கும் நீரினை?
**பாக்குநீரினை**
7. எவரெஸ்ட் சிகரத்தின் உயரம்?
**8848 மீற்றர்கள்**
8. எகிப்து நாகரிகம் எந்த நதிக்கரையில் தோன்றியது?
**நைல் நதி**
9. பண்டைய எகிப்தியரின் எழுத்து என்ன?
**ஹெய்ரோகிளிபிக்ஸ்**
10. யுப்ரடீஸ், டைகிரிஸ் நதிகள் பாயும் இடத்தில் தோன்றிய நாகரிகம்?
**மொசப்பத்தேமியா**

# விடுகதைகள்

1. வகை வகையாய் தெரியும் வண்ணப்படம். கண்மூடிக் காணும் காட்சிப்படம். அது என்ன?
2. மென்மையான உடம்புக்காரன், பாரம் சுமக்கும் கெட்டிக்காரன். அது என்ன?
3. மூன்றுகால் குள்ள அக்கா, பாரம் தாங்கி, நெருப்பை சுமந்து சோறு சமைப்பாள். அவள் யார்?
4. பட்டனைத் தட்டினால் சட்டென விரியும். அது என்ன?
5. நீரிலும், நிலத்திலும் வாழ்வான், பாறைக் குள்ளும் பதுங்கி வாழ்வான். அவன் யார்?
6. கையளவு உடம்புக்காரன், காவலுக்கு கெட்டிக் காரன். அவன் யார்?
7. மேகத்தின் பிள்ளை அது, தாகத்தின் நண்பன். அது என்ன?
8. முற்றத்தில் நடக்கும் மூலையில் படுப்பான். அவன் யார்?
9. முன்னும் பின்னும் போவான். ஒற்றைக் காலிலே நிற்பான். யார் அவன்?
10. மேல் பலகை. கீழ் பலகை நடுவில் நெளி பாம்பு. அது என்ன?

**விடைகள்:**

| | | |
|---|---|---|
| 1. கனவு | 2. நத்தை | 3. அடுப்பு |
| 4. குடை | 5. தவளை | 6. பூட்டு |
| 7. மழை | 8. துடைப்பம் | 9. கதவு |
| 10. நாக்கு | | |

# ஆசியக் குயில்



ஆசியக் குயில் (Eudynamys scolopacea) இது சுமார் 36-46 செ.மீ. அளவு வரை இருக்கும். இது காளகண்டம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆண்குயில் பளபளப்பான கருமை நிறமுடையது. அலகு மஞ்சள் கலந்த பச்சை நிறத்திலும் கண்கள் இரத்தச்சிவப்பு நிறத்திலும் இருக்கும். தனியாகவோ இணையுடனோ மரங்கள் நிறைந்த தோட்டம், தோப்புகளில் இவற்றைக் காணலாம். இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமாகப் பார்த்தால் மூன்று வகைக் குயில்கள் உள்ளன. அவற்றுள் scolopacea வகை தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படுகின்றன. மற்ற பறவைகளைப் போல குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது.

# மாரி அளவாய்ப் பொழிக! மக்கள் வளமாய் வாழ்க!

திருநாவுக்கரசர் சிவனிடம் தஞ்சம் அடைந்ததைப் பொறுக்காத சமணர்கள் அவரைத் தண்டிக்கும்படி அப்போது அரசனாக இருந்த மகேந்திரவர்மனைப் பணித்தனர். அரசன் இவரை சுண்ணாம்புக் காளவாயில் தூக்கிப் போட்டான்.

திருநாவுக்கரசருக்கோ சூடு எதுவும் தெரியவில்லை. இளவேனிற்காலத்து காற்று போலவும் நீரின் குளிர்ச்சி போலவும் அவருக்கு இனிமையாக இருந்ததாம். இதனை "**மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**



**மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நிழலே**" என்று பாடினார்.

இதில்வருகிறபொய்கை, அவர் வேண்டி விரும்பிச் செய்த திருப்பணிகளின் அடையாளம்.

குளம் தொட்டு வளம் பெருக்கிய மரபில் வந்த நாம் குளத்தை மறந்தோம், வளத்தை இழந்தோம். மூர்த்தி. தலம். தீர்த்தம் என்பதில் தலத்தில் கால் பதித்து மூர்த்தியை தரிசிக்கின்றோம்.

குளத்தைக் கவனிப்பதில்லை. குளத்தைத் தரிசிப்பதும் மூர்த்தியைத் தரிசிப்பதற்குச் சமமாகும்.

அதனால்தான் விசேட தினங்களில் நீராடல் மரபைப் பின்பற்றி வருகிறோம். நீரை அசுத்தம் செய்வதும் குளங்களில் சிறுநீர் கழிப்பதும் பாவத்தின் கணக்கில் கொள்ளப்படும். பல உயிரினங்களின் வாழ்வியல் களம்தான் குளங்கள்.

"**ஊருணி நீர் நிறைந்தற்றே உலகை வாம் பேரறிவாளன் திரு**" என வள்ளுவப் பெருந்தகையும், பேரறிவாளனின் செல்வத்தோடு ஒப்பிடுகிறார்.








**மறுபடி வாள்வெட்டு அதிகரித்து விட்டதே?**

**கடவுள் ஏன் கெட்டவர்களை மட்டும் நல்லா வச்சிக்கிறான்?**

**பல்கலைக்கழக மாணவர்களின் அறவழிப் போராட்டம் பற்றி?**

அன்பன்

**இராவணன் சீதையைக் கடத்தியதற்காக அரக்கர் குலத்தை அழித்தார் இராமன். நீங்கள் இராமனாக இருந்திருந்தால்?**

சீதையைக் கண்டறிய ஒரு குழுவை நியமித் திருப்பேன். அந்தக் குழு இலங்கையை சென்றடைய பத்து ஆண்டுகள் ஆகிவிடும். இலங்கையில் இறங்கிய குழு தாம் தங்குவதற்கு நல்ல வீடு கட்டி முடிக்க மூன்று ஆண்டுகள் கடந்து விடும். அதன்பின் அந்தக்குழு சீதையைத் தேடி தேடி அலைந்திருக்கும்.

ஒருவாறாக அலைந்து சீதையை சிறை வைத்த இடத்தைக் கண்டுபிடிக்க ஐந்து வருடங்கள் ஆகிவிடும்.அதன்பின் சீதை இருக்கும் இடம் எதுவென்றுஎனக்கு செய்திவர இரண்டுவருடங்கள். நான் இலங்கை வர மூன்று வருடங்கள். இராவணனுடன் போர் புரிய பத்து வருடங்கள் மொத்தத்தில் முப்பத்து மூன்று வருடங்கள் இராமனாகிய எனக்கும் சீதைக்கும் அறுபதாம் கல்யாணம் நடக்கும்.

நந்தகுமார் — மானிப்பாய்

**கிழக்கில் உதிக்கும் சூரியன் இடம்மாறுமா?**

இனிவரும் காலங்களில் தெற்கில் உதிக்க அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. நான் சொல்லுவது புரியவில்லையா? எம் தலைமை அங்கு தானே படுத்துக்கிடக்கிறது.

குட்டிநந்தன் — விஸ்வமடு

**பல்கலைக்கழக மாணவர்களின் அறவழிப் போராட்டம் பற்றி?**

**என் அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் சக்தியை வார்த்தைகளால் சொல்லி விட முடியாது. தமிழ் தலைமைகளால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் எம் மக்களுக்கு விடிவு தர உங்களால்தான் முடியும்.

தேர்தல் வருகிறது. கூடி ஆராயுங்கள். யாருக்கு வாக்களிப்பது என்பதை முடிவெடுத்து மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள். எங்களுக்குத் துரோகம் செய்யும் தமிழ்த் தலைமையை தூக்கி எறிய இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது.

நிந்து — கோண்டாவில்

**வீட்டில் தனிமையில் இருக்கும் பெண்களின் நிலை?**

ஒரு பெண் வீதியில் தனிமையில் செல்கிறாள் என்றால் ஐம்பது வீதம் தனது மனத்திடம் ஐம்பது வீதம் ஆண்களில் இருக்கும் நம்பிக்கை.

பெண்களை விட ஆண்களைப் பலமாகப் படைத்ததற்கு காரணம் அவளுக்கு பாதுகாப்பாய் இருப்பதற்கே தவிர பலாத்காரம் செய்வதற்கல்ல என்று இவ்விடத்தில் பதிவிட்டதை மீண்டும் பதிவிடுகிறேன்.

சுதன் — குப்பிளான்

**வீட்டை நம்பினோம் அதிலும் ஏமாற்றம் என்றால்?**

தம்பி வீட்டில் இருக்கும் அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, மருமகள், மருமகன் இப்படி எல்லோரையும் ஒரே கட்டுக் கோப்பில் வைத்திருக்க வேண்டியதும் அனைவருக்கும் சமமாக அந்தஸ்துக் கொடுக்க வேண்டியதும் ஒரு தந்தையின் கடமை.

அதைச் சரியாகச் செய்யாவிட்டால் அவர் தந்தை என்ற புனிதத்தை இழந்து விட்டார் என்று பொருள். இல்லையென்றால் தந்தை கண்களை மூடிக் கொண்டு கதிரைகளைக் கட்டிப்படித்துக் கொண்டிருக்க வீட்டுக்குள் யானை புகும் கவனம்.




ஜுபா — கரவெட்டி

**முல்லைத்தீவு தமிழரசுக் கட்சியினர் அடிபாடு பற்றி?**

தாழம்பூவை மட்டுமல்ல சாக்கடையைக்கூட எவ்வளவுதான் மூடி வைத்தாலும் மணக்கத்தான் செய்யும்.

தமிழர்களுக்கு விடிவு தருவார்கள் என்று நாம் யாரை நம்பினோமோ அவர்களே தமிழர்களை நம்பவைத்துக் கழுத்தறுக்கும் நாசகரம் நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை ஒரு இனம் இனத்தை வதைத்தால் அது குற்றம். தன்னினத்தை தன்னினமே வதைத்தால், ஏமாற்றினால் அதன் பெயர் துரோகம்.

ரஜீனா — வட்டுக்கோட்டை

**காதல் கல்யாணமா-பெற்றோர்கள் பார்க்கும் கல்யாணமா சிறந்தது?**

தற்கொலை செய்யவேண்டும் என்று முடிவெடுத்த பின்பு விசம் குடித்தால் என்ன தூக்கு மாட்டினால் என்ன. வலைத்தளத்தில் படித்து ரசித்தது.

தருண் — றெட்பானா

**தாய்க்கும் தாரத்துக்கும் உள்ள வேறுபாடு?**

உயிர் தருபவள் தாய்
உயிரானவள் தாரம்
உதிரத்தை பாலாக்கிச் சுரப்பவள் தாய்
உயிரைக் கொடுத்து உன்னுள்
வாழ்பவள் தாரம்
உனக்கொன்றென்றால் துடிப்பவள் தாய்
உனக்கே தன்னைத் தருபவள் தாரம்

ரூபி — யாழ்ப்பாணம்

**கடவுள் ஏன் கெட்டவர்களை மட்டும் நல்லாவச்சிக்கிறான்?**

அப்படி நினைப்பது தவறு ராஜா. பணத்தால் உயர்வது மட்டும் நல்ல வாழ்வு இல்லை. அந்த பணத்தால் மனநிறைவு அடைகின்றானா? உண்ணும் உணவை நிம்மதியாய் உண்கிறானா? என்ற கேள்விகள் இருக்கிறது.

பணம் பாதாளம் வரை பாயுமே தவிர அதனால் சந்தோசத்தை அள்ளி வழங்கிவிடவோ நிம்மதியைத் தந்து விடவோ முடியாது.

ஏழைகளுடன்தான் எப்போதும் கடவுள் இருப்பான். அவர்கள் சிரிப்பில் தான் அவன் மனம் மகிழ்வான். இதுதான் உண்மை. இதுதான் யதார்த்தம்.

கிருஷ்ணா — சுழிபுரம்

**தாயின் மகத்துவம் பற்றி?**

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. தொண்டுகளால் தீர்த்து விட முடியாது. தாய் என்ற ஒற்றைச் சொல்தான் இந்த உலகின் அச்சாணி. கடவுளைத் தேடி அலைபவர்களுக்கு இதுதான் தெய்வம் என்று காட்டப்பட வேண்டியவள், போற்றப்பட வேண்டியவள்.

சூர்யா — யாழ்ப்பாணம்

**தமிழ்மொழி அழிந்து வருகிறதா?**

அழிந்து வருகிறது என்பது பொய் அழிக்கப்பட்டு வருகிறது.

நந்தன் — விஸ்வமடு

**மறுபடி வாள்வெட்டு அதிகரித்து விட்டதே?**

மழைவந்து விட்டதல்லவா அதனால் அவர்களுக்கு குளிர்விட்டுப் போச்சு.

பாஸ்கரன் — சிவநகர்

**குடிகாரன் விதண்டாவாதம் கதைத்தால் திருப்பி நியாயம் கதைக்கலாமா?**

திருப்பி நியாயம் பேசலாம். ஆனால் அவனுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.




## மாவீரர்கள்

தியாகத்தின்
பாதையில்
பயணித்தவர்களே
யாகத் தீயின்
பாசச்சுடர்களே
தேசத்தின்
சுவாசக் காற்றுகளே
எரிமலைக்கும்
ஏதுவானவர்களே
எத்திசைக்கும்
தோள் கொடுப்பவரே
புலரும் விடியலுக்கு
புதுவிதி சமைப்பவர்களே
பூகம்பத்தின்
வழித்தோன்றல்களே
தாயகம் மலர
விதையானவர்களே
எம் விழிநீர்
சொரிய
விருட்சமாவீர்களே...

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

## பணம் தேடி

விட்டுக் கொடுப்பும்
தியாகங்களும் எத்தனை
இழந்ததைப் பெற்றுக்கொள்ள
மனதும் துடிக்கவில்லை
அன்பும் பாசமும் அரவணைக்கும் என்பவர்
நேசம், பாசம் காட்டும் போல் வேசம்
ஆறடிக் குழியினுள் தேடுவர் பணத்தை
மக்களைப் பெற்ற மகராசி
மங்கல வார்த்தை இன்று இல்லை
முதுமைக்கோலம் முகத்திரையில்
அன்பைத் தேடி ஆயுள் குறைந்து
நோயும் கொல்லும்

**எஸ்.சுப்பிரமணியம்**
**கல்வயல்**
**சாவகச்சேரி**

## வாழ்க்கைப் பயணம்

தாயின் கருவறையில்
குடியிருந்தேன்
உலகைக் காண உதித்தேன்
அன்னையின் மடியில் பால்
குடித்தேன்
தரையில் மெல்லத்
தவழ்ந்தேன்
எழுந்தேன்
விழுந்தேன்
நடந்தேன்
பாடங்கள் படித்தேன்
பண்புகளை வளர்த்தேன்
இளைஞனாய் வளர்ந்தேன்
இல்லறத்தில் புகுந்தேன்
பெற்றாரை நினைத்தேன்
உற்றாரை மதித்தேன்
உலகத்தை புரிந்தேன்
ஒன்றாய் வாழ்ந்தேன்
வாழ்க்கையை மதித்தேன்
வாழ்ந்தது போதுமென நினைத்தேன்
இறைவனை உணர்ந்தேன்
என்னை மறந்தேன்
இவ்வுலகை நீத்தேன்

**குட்டிநகர் பாவரன்**

## நாளை நமதே!

நாற்றுக்கள்...
நீங்கள்...
இளம் நாற்றுக்கள்
வித்துக்கள் இல்லாமல்
வேர் இல்லை
வேர் இல்லாமல்
விருட்சம் இல்லை
கோணங்கிப் பார்வையாலே...
கோமாளியாகிவிடாதே
சிந்தையைச் செதுக்கும்
வேள்விக்கூடத்திலே...
வாழ்க்கையைச் சுவடிகளை...
தேடிப்பார்
வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும்
உரிய வகையில்
உலவியவர்கள் தடத்தை...
ஒட்டி நடந்து பார்
ஒற்றி நடக்க முயன்று பார்
நினைவுச்சரம் தொடுத்து...
பூமாலை ஆக்கிப்பார்...
அதுவே உனக்கு...
வெற்றிமாலை
ஆற்றலை...
தூசி தட்டிக்கொள்
நாடும் ஏடும் போற்றும்
நாளைய வாழ்வின்...
சாதனையாளன்
நீயே

**வேலணையூர்**
**மயிலைக்கிளி**

## டணக்கு டண்டா

தேர்தல் வருகுது தேர்தல் வருகுது
டணக்கு டண்டா டணக்கு டண்டா
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் வருகுது
டணக்கு டண்டா டணக்கு டண்டா

மாற்றம் வேண்டும் மாற்றம் வேண்டும்
டணக்கு டண்டா டணக்கு டண்டா
மாண்டவர் வாழ்வு மீண்டிட வேண்டும்
டணக்கு டண்டா டணக்கு டண்டா

மாற்றான் தோட்ட மல்லிகை வாசனை
டணக்கு டண்டா டணக்கு டண்டா
மனதை மயக்கும் வாழ்வை அழிக்கும்
டணக்கு டண்டா டணக்கு டண்டா

வீட்டுப் படலையில் இழித்து வருவார்
டணக்கு டண்டா டணக்கு டண்டா
விரட்டி அடிப்போம் வீட்டில் முடங்கோம்
டணக்கு டண்டா டணக்கு டண்டா

ஏற்றம் வேண்டும் எமது வாழ்வில்
டணக்கு டண்டா டணக்கு டண்டா
ஏமாற்றுக்காரரை ஏமாளியாக்குவோம்
டணக்கு டண்டா டணக்கு டண்டா

ஓட்டுப்போட்டொரு மாற்றத்தைக் காணுவோம்
டணக்கு டண்டா டணக்கு டண்டா
வீட்டை மாற்றியே புது விதி செய்வோம்
டணக்கு டண்டா டணக்கு டண்டா

நன்மை செய்வதற்கு எமது வாக்கு
டணக்கு டண்டா டணக்கு டண்டா
நம்மை ஏமாற்றியவருக்கு நாமம் போடுவோம்
டணக்கு டண்டா டணக்கு டண்டா

**மாவை. நா.கஜேந்திரன்**



## கரத்தை முறித்து நிமிர்...!

குண்டுகள் குதறிய தசை
துண்டுகள் நடுவே தசை தின்னி
பிண்டங்களால்
குதறப்பட்ட என் தமிழ்
குலப்பெண்ணே...!
குழறியழு– உன்
ஆற்றாமையால் நாணியல்ல...!
எம் அரசியல்வாதிகளின்
தேற்றாமையை எண்ணியழு...!
மறுநொடி எழு– பகை
கரத்தை முறித்து நிமிர்...!
இவர்களுக்கு நீதான்
பாடை கட்ட வேண்டும்...!

**சு.பா.சுபன்**
**சுழிபுரம் மேற்கு**

## ஆண்டவனே

தமிழர்
நம் வாழ்வில்
கொடுமையின்
தருணங்கள்
அரசியல்
தலைமையில்தான்
என்றால்
இப்படியும் கதை
தொடர்கிறதே...

**தேன் நிலா**
**நல்லூர்**

# மௌனத்தின் தேடல்– 376

## மாதவம் எங்கே மாதரே

பெண்ணாகப் பிறந்துவிட்டால்
பேறழிவு உனக்கு உண்டு
மாதராய்ப் பிறப்பதற்கு
மாதவம் செய்யவேண்டும்
என்பதும் பொய்யே
காமுகன் கைபட்டு
உயிர் மாய்தல்தானா
இந்த மாதவம்
அடியே பேதைப்பெண்ணே!

**அபி குலமாலிகா**
**சங்கானை**

## விலங்கினை உடைத்து...

ஆணாதிக்கத்தினுள்
சிக்கி உன்னை
அடக்கி ஒடுக்கும்
தருணமதில்
அஞ்சி அழும் மங்கையே!
ஆணையிட்டு சொல் இங்கே
பாரதி கண்ட புதுமைப் பெண்களால்
பாரினிலே விலங்கினை உடைத்து
விரைந்திடுவோம் விடியலை நோக்கி

**பி.மேரி சிந்துஜா**
**மிருசுவில்**

## பெண்ணே!

கண்மூடிக் கதறியழுது
சோகத்தின் உச்சத்தை
உச்சரிக்கும் உன் உதடுகளால்
அச்சத்திற் கஞ்சிபாமல்
அநீதிக்கெதிராய்
வாயெடுத்துப் பேசு
நீதிக் கண்கள்
உனைக் காணும்– நாளை
பாரதிகண்ட புதுமைப்பெண்ணாய்– நீ
பார்புகழும் புரட்சிப் பெண்ணாவாய்

**சாந்தையூர் வினிஸ்**
**பண்டத்தரிப்பு**

## பெண் என்பவள்

பெண் என்பவள்
தாயானவள்
பெண்ணை பெண்ணாகப் பார்
பொருளாகப் பாராதே
தாரம், தாய், சகோதரி போன்றோரை
தவிர ஏனைய பெண்களை
தவறாகப் பாராதே
ஆதிசக்தியும் பெண்ணே
அவள் சக்தி பெண்ணை துன்புறுத்தி
நீ பஸ்பமாகாதே
துஷ்ட மனிதா
அன்புக்கு அன்னை அவள்
வீண் வம்புக்கு
தேவி காளி அவள்


**சி.அபிலாசினி**
**யா/வ/ம/ம/க.**

## பெண்ணின் புரியாத புதிர்

பெண் அன்பில் ஒருதாய்
பெண் அழகில் ஒரு தேவதை
பெண் அறிவில் ஒரு மந்திரி
பெண் ஆதரவில் ஒரு உறவு
பெண் வெறுப்பில் ஒரு நெருப்பு
பெண் வெற்றிக்கு ஒரு மாலை
பெண் தோல்விக்கு ஒரு பள்ளம்
பெண் நட்பில் ஒரு நேர்மை
பெண் கண்டிப்பில் ஒரு ஆசிரியர்
இருந்தாலும் பெண்
ஒரு புரியாத புதிர்...

**வி.கஜானன்**
**வடலியடைப்பு**

# மௌனத்தின் தேடல் –377



**அன்பு வாசகர்களே !**

*உங்கள் எண்ணத்தில் தோன்றும்*
*கவிதைகள் மற்றும் வியாசர்*
*பதிலுக்கான கேள்விகளை*
*ஆசிரியர்*
*'மௌனத்தின் தேடல்'*
*சங்குநாதம்*
*இல3,2ம் ஒழுங்கை,*
*பிறவுண்வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*எனும் முகவரிக்கு 15.11.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.*

*குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.*

*-ஆசிரியர் -*

# பாட்டியும் பனை ஓலையும்



சிறுகதை

திருமதி.வனஜா விநோகரன்
ஆசிரியர்
யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை

பார்வதியின் தொடர்ச்சியான பெருமூச்சு காற்றலைகளில் மிதந்து சென்றவண்ணமிருந்தது. பாய் இழைப்பதற்காக நேர்த்தியாக வாரப்பட்ட ஓலைக்கட்டு ஒருபுறம். மறுபுறம் கன்னிப்பேர்த்தியை அரவணைத்து தான் செய்யும் தொழிலுக்கு உதவியாக வீட்டுத் திண்ணையில் அமர்த்திக் கொண்டாள் பார்வதி. வாரத்திற்கொருமுறை இழைத்த பாய்களை தலையில் சுமந்துசென்று பக்கத்திலுள்ள சந்தையில் விற்பனை செய்வாள். விற்ற பணத்தைக்கொண்டு சாமான்கள் வாங்கிவந்து சமைத்து உண்டு தனது மூன்று பேர்த்திகளுடன் தானும் வாழ்ந்து வந்தாள். இருந்த போதும் எண்ணற்ற துயரங்கள் பார்வதியைத் துரத்தியவண்ணமிருந்தன. தனக்கோ வயது எழுபத்தி இரண்டைத் தாண்டிவிட்டது. இளைய இரு பேர்த்திகளின் படிப்புச் செலவுக்கு ஏதுவழி? மூத்த கன்னிப் பேத்தியின் திருமணத்திற்கு என்ன வழி? என்று கனவிலும் நனவிலும் சிந்திக்கத் தொடங்கினாள் பார்வதி. வெள்ளிக்கிழமைகளில் பக்கத்து வைரவர் கோவில் பூசை நடக்கும் நேரத்தில் தனது கவலைகளை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. பார்வதியின் அளவு கடந்த பக்தியின் விளைவாக சில நிமிடம் பரவசநிலையை அடைந்துவிடுவாள். இறைவனும் பார்வதியின் வேண்டுதலைச் செவிமடுத்து காலம் வரும் போது உதவிபுரியச் சித்தம் கொண்டான். "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒப்புக்கொள்" என்பது முதுமொழி. தனது தாயிடம் குடிசைக் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொண்டதால் இன்று குடிசையில் இருந்துகொண்டு தானும் மூன்று பேர்த்திகளும் நிம்மதியாக வாழ முடிகிறது. இத்தனைக்கும் எனது பெற்றோர்தான் காரணம் என்று மனதில் நினைத்துக் கொள்வாள் பார்வதி. இருந்தபோதும், தனது ஒரேயொரு மகளும் மருமகனும் கொடிய யுத்தத்தில் சிக்குண்டு இறந்த துயரமும் இடையிடையே வந்து முட்டிமோதும். தனது மகளும் மருமகனும் இன்று உயிருடன் இருந்தால் இந் நிலை எனக்கு ஏற்பட்டிருக்காது என்று தனக்குள்ளே முணுமுணுத்துக் கொள்வாள். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. பார்வதியின் மூத்த கன்னிப்பேர்த்தி பாட்டியிடம் கைப்பணி நுட்பங்களை எளிதில் கற்றுவிட்டாள். மற்றையவர்களுக்கும் குடிசைக் கைத்தொழிலை கற்றுக் கொடுக்கும் அளவிற்கு வந்ததை எண்ணி இறும்பூ தெய்தினாள் பார்வதி. ஏழை மாணவர்களுக்கு கைப்பணிப் பயிற்சி வழங்கும் பொருட்டு நல்ல நோக்கம் கொண்ட நிறுவனம் ஒன்று விளம்பரம் செய்தது. இந்த விளம்பரம் சமீபத்தில் உள்ள வாசிகசாலையில் ஒட்டப்பட்டிருந்தது. தாய், தந்தையற்ற வறுமையில் உள்ள பிள்ளைகளுக்கு முன்னுரிமை பயிற்சிக்காலத்தில் சிறு உதவிப்பணமும் பயிற்சி முடிவடைந்த பின்னர் பெறுமதிமிக்க சான்றிதழும் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்தகவலை தனது ஆருயிர் நண்பி மூலம் தெரிந்து கொண்டாள் குமுதா. அன்றிரவு தூக்கம் வரவில்லை. தனது எதிர்கால வாழ்வு பற்றியும் இரு சகோதரிகளின் கல்வி பற்றியும் பாட்டியின் கஷ்டநிலை பற்றியும் ஆழமாக சிந்திக்கத் தொடங்கி னாள். விடிந்ததும் ஒரு தீர்க்கமான முடிவுடன் பாட்டியிடம் சென்று கைப்பணிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கப் போவதாக தனது விருப்பத்தைத் தெரிவித்தாள் குமுதா. பாட்டியும் பச்சைக்கொடி காட்டிவிட்டாள். குமுதாவின் அளவுகடந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. உரிய காலத்தில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து விட்டாள். இரண்டு வாரத்தின் பின்னர் பயிற்சி நெறிக்கு விண்ணப் பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்று முடிந்தது. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் பத்திரிகையில் விரைவில் பிரசுரிக்கப்படும் என்று தேர்வு நடத்தியவர்கள் கூறிச் சென்றனர். மூன்று வாரம் கழித்து பத்திரிகையில் பிரசுரமாகியது. இதை வாசித்த நண்பி குமுதாவின் வீட்டிற்கு ஓடோடிச் சென்றாள். எடி குமுதா உன்னை இனிப் பிடிக்கேலாது. நீ பெரியாளாய் விட்டாய் என்று கூறினாள். கதையை விட்டிட்டு விசயத்தைச் சொல்லடி என்று கேட்டாள் குமுதா. அண்டைக்கெடி நடந்த நேர்முகப் பரீட்சையில் உன்னைத்தான் முதலாவதாக தெரிவு செய்திட்டினம். இதைக் கேட்டதும் அளவுகடந்த மகிழ்ச்சி ஏற்பட்டது குமுதாவுக்கு. குறிப்பிட்ட திகதியில் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பயிற்சி பெற்றுக்கொள்வதற்காக அன்றைய தினம் அதிகாலை எழுந்து காலைக்கடன்களை முடித்து இறைவனை வணங்கி பாட்டியின் ஆசீர்வாதம் பெற்று பயிற்சி நெறி நடைபெறவுள்ள பொது மண்டபத்திற்குச் சென்றாள். அங்கு நிறுவன அதிகாரி,பிரமுகர்கள், பயிற்சி நெறி வழங்குவதற்கான ஆசிரியை ஊர் மக்கள் பிரசன்னமாயிருந்தனர். பயிற்சி நெறிக்கு வந்தவர்கள் ஒருபுறம். முதலில் இறைவணக்கம் செலுத்தப்பட்டு மங்கல விளக்கேற்றப்பட்டு நிறுவன அதிகாரியால் திட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துக் கூறப்பட்டு பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. பயிற்சிநடைபெறும் நேரத்தில் பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவரின் செயற்பாடுகளையும் அவதானிக்கத் தவறுவதில்லை. குமுதாவின் வினைத்திறன் மிக்க கைப்பணி செயற்பாடுகள் பயிற்சி ஆசிரியரை ஒருகணம் சிந்திக்க வைத்தது. பயிற்சியாளர்களினால் செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டு விழா நடைபெற்றது. குமுதாவின் கைவண்ணப் பொருட்கள் எல்லோர் மனதையும் கவர்ந்துவிட்டது. பயிற்சி முடிவடைந்த பின்னர் அதிகாரிகளால் விசேட சான்றிதழ் வழங்கப்பட்டது. சில மாதங்களின் பின் கைப்பணிப் பயிற்சி நெறிக்கான ஆசிரியருக்கு தகுதியானவர் களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டது. குமுதாவும் விண்ணப்பம் செய்தாள். கைப்பணி ஆசிரியர் நியமனமும் கிடைத்தது. பனை ஓலையையும் பாட்டியையும் நினைத்து அகமகிழ்ந்தாள். இறைவன் தக்க தருணத்தில் உதவி புரியத் தவறவில்லை.

---

மழை அதிகமாக பெய்ததால் அந்த இடம் புல். பூண்டுகள் முளைத்து பற்றையாக காட்சியளித்தது. ஒரு வண்ணத்துப் பூச்சி ஆறுதலாக பறந்து பறந்து அங்கே இருந்த பூக்களில் தேன் குடித்துக் கொண்டிருந்தது. பின்பு அங்கேயுள்ள ஒரு மரக் கிளையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தது. அந்தக் கிளையில் இருந்த குளவி ஒன்று அதனுடன் பேச்சுக் கொடுத்தது. நீ அழகாய் இருக்கிறாய்! என்ற கர்வத்தினாலோ எவருடனும் சேராமல் தனித்து திரிகிறாய்?

வண்ணத்துப் பூச்சியின் முகத்தில் ஒரு ஏக்கம் கலந்த ஒரு புன்சிரிப்பு தோன்றி மறைந்தது. எனக்கா கர்வம்? நான் கடந்து வந்த பாதை என் இரத்தமெல்லாம் பதிந்திருக்கிறது. சொல்லுகிறேன் கேள்.

நான் என் தாயைக் கண்டதில்லை. நானும் என்னுடைய சகோதரங்களும் ஒரு முருங்கை மரத்தில் கூட்டமாக சேர்ந்திருந்தோம். ஒருநாள் அந்த மரம் நின்ற வீட்டுக்காரன் ஓலை ஒன்றில் தீயை மூட்டி எங்களை சுட்டுப் பொசுக்கினான். நான் துள்ளிப் பாய்ந்து நிலத்தில் குதித்தேன். உயிரைக் காக்க விரைந்து நகர்ந்தேன். சூரியனும் என்னை

# சக்கரம்



சுட்டெரித்தது. ஒருவாறு புல், பூண்டுகளுக் கூடாகச் சென்று ஒரு வீட்டின் பின் சுவரில் ஏறினேன்.

என்னுடைய சகோதரர்களுக்கு என்ன நடத்திருக்கும்! என்னைப் போல் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எரிந்து சாம்பராகியிருப்பார்கள். மிகுதிக் கதையையும் கேள். பல நாட்கள் அங்கேயே இருந்தேன். என் உருவம் மாறியது.

என் உருவத்தைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். ஒரு கணம் தோன்றிய சந்தோசம் ஓடி மறைந்தது. பழைய நினைவுகள் என் நெஞ்சத்தை முற்றுகையிட்டன.

மெல்ல, மெல்ல பறக்கத் தொடங்கினேன். என்னைப் பார்த்து சிறுவர்கள் வண்ணத்துப் பூச்சி வண்ணத்துப் பூச்சி என்று மகிழ்ந்து கூறுகின்ற சத்தம் மயிர்கொட்டி மயிர் கொட்டி என்று அவலக் குரல் எழுப்புகின்ற சத்தத்தை ஞாபகமூட்டும்.

என்னுடைய சாந்தம் அமைதிக்கு காரணம் நான் பழையதை மறக்காமல் இருப்பது தான்.

ஒருவருடைய வெளித்தோற்றத்தைப் பார்த்து முடிவு எடுப்பது தவறு என்பதை இப்போது உணருகின்றேன். ஒவ்வொருவருடைய இதயத்திலும் ஒவ்வொரு கதை குளவி கூறி விட்டு பறந்து சென்றது.

க.தர்மலிங்கம்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

# விவசாயத்தில் அசத்தும் நெதர்லாந்து

ஐரோப்பாவில் இருக்கும் ஒரு சிறிய நாடு அது. அங்கிருக்கும் ஒரு சின்னக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அவர். மெட்ரோ ரயில் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் க்ரேன் கேபினில் அமர்ந்திருப்பவரைப் போல அந்த விவசாயியும் அமர்ந்திருக்கிறார். அவர் முன்னால் பரந்து விரிந்த அவரது வயல். அந்த வயலில் ஆளில்லா டிராக்டர் ஒன்று உழுது






கொண்டிருக்கிறது. வயலின் மேல் இரண்டு ட்ரோன்கள் பறந்து கொண்டிருக்கின்றன. அதில் ஒன்று மண்ணின் தன்மை, நீரின் அளவு, இன்னும் ஏராளமான தரவுகளை அந்த விவசாயிக்கு அனுப்புகிறது. அவர் அனைத்தையும் கவனமாகக் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறார். உருளைக்கிழங்கு சாகுபடி செய்திருக்கும் அந்த விவசாயி ஏக்கருக்கு 20 தொன் விளைச்சல் எடுக்கிறார். உலக அளவில் உருளையின் சராசரி விளைச்சல் எவ்வளவு தெரியுமா? ஏக்கருக்கு 9 தொன்தான். நெதர்லாந்தின் ஸ்கோர்கார்டைப் பார்த்தால் அவர்களை "விவசாயத்தில் விராட் கோலி" என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நெதர்லாந்தைப் பற்றிச் சில விடயங்களைப் பார்த்துவிடுவோம். நெதர்லாந்து, ஐரோப்பியக் கண்டத்தில் இருக்கும் குட்டி நாடு. ஆனால், ஒரு சதுர மைலுக்கு 1300 மக்கள் வாழக்கூடிய மக்கள் நெருக்கடி அதிகமான நாடு. மொத்த நிலப் பரப்பில் 60 சதவிகிதம் விவசாயம்தான்.

மேலோட்டமாகப் பார்த்தால் நெதர்லாந்திள் எந்த உணவுத் தயாரிப்பாளரும் பெரிய உற்பத்தியை எடுக்காதது போலத் தெரியும். ஆனால், உலகின் பெரிய உணவு உற்பத்தி நாடு இது. ரூபாய் மதிப்பில், அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் இருக் கும் உலகின் இரண்டாவது விவசாய ஏற்றுமதி செய்யும் நாடு. (அமெரிக்கா நெதர்லாந்தைவிட 270 மடங்கு அதிக நிலப்பரப்பைக் கொண்ட நாடு). உலகின் தக்காளி உற்பத்தியில் முதல் இடம் வகிக்கும் நாடும் நெதர்லாந்து தான். இந்நாட்டில் மனிதர்கள் வசிக்கும் வீடுகளைவிடப் பசுமை வீடுகளின் எண்ணிக்கை அதிகம். நெதர்லாந்து



விவசாயிகள் பின்பற்றப்படும் முக்கிய விவசாயக் கொள்கை 'குறைந்த இடம், குறைவான செலவு, அதிக உணவு மற்றும் வருமானம்' என்பதே. உலகில் 2050ஆம் ஆண்டு மக்கள் தொகை 10 பில்லியினை எட்டிவிடும் என்பதை நெதர்லாந்து விவசாயிகள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதற்குத் தங்களைத் தயார் செய்துகொண்டு வருகிறார்கள்.

இங்கு அதிகபட்சமாக 175 ஏக்கர் வரைக்கும்கூடப் பசுமைக்குடில் அமைக்கப்படுகிறது. தக்காளி, உருளைக்கிழங்கில் மட்டுமல்ல மற்ற காய்கறிகள் விளைச்சலிலும் மெர்சல் காட்டுகிறார்கள். ஒரு சதுர மைல் அளவில் உலகிலேயே அதிகமாகப் பச்சை மிளகாயும், மிளகுப் பொருட்களையும் விளைவித்து அதிக விளைச்சலை எடுக்கிறார்கள். அதற்கு இவர்களின் தொழில்நுட்பம் முக்கியக் காரணம்.

நெதர்லாந்தில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்னர்தான் தொழில்நுட்பம் வளர ஆரம்பித்தது. அதன் பின்னர், தொழில்நுட்பங்கள் நிலையானதா எனச் சரிபார்த்தே விவசாயிகள் பயன்படுத்த ஆரம்பித்தனர். மண்ணின் காரத் தன்மை, நீரின் உப்புத் தன்மை ஆகியவற்றைச் சரிபார்த்தல், பயிருக்குக் கொடுக்க வேண்டிய ஊட்டச்சத்துகள், பயிரின் வளர்ச்சியைச் சரிபார்த்தல் எனப் பல வேலைகளையும் விவசாயியே பார்த்துவிடுகிறார். ஒருமுறை உபயோகிக்கப்பட்ட தொழில்நுட்பம் நிலையான விவசாயத்திற்கு உதவுமா எனச் சரிபார்த்த பின்னரே ஒரு விவசாயி அதைப் பயன்படுத்தத் தொடங்குகிறார்.

நெதர்லாந்துப் பண்ணைகளில் வெர்ட்டிகல் கார்டன் முறையில் விவசாயம் செய்யப்படுகிறது. இதன்மூலம் விவ சாயம் செய்யும்போது தண்ணீர் செலவு 90 சதவிகிதம் குறைய வாய்ப்புண்டு. பசுமைக் குடில்களில் இரசாயன உரங்களை உபயோகிப்பதையும் பெருமளவில் குறைத்துக் கொண்டார்கள்.

எல்.இ.டி விளக்கைப் பயன்படுத்தித் தக்காளி விளைவிக்கும் தொழில்நுட்பம் ஒன்றை அவர்கள் பின்பற்றுகிறார்கள். அது ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கிறது என்றாலும், நல்ல விளைச்சல் தருகிறது. மேலும், குடில்களைச் சுற்றிலும் தேனீப்பெட்டிகள் வைக்கப்பட்டு மகரந்தச் சேர்க்கையை அதிகப்படுத்தி மகசூல் அதிகமாகப் பெறும் தொழில்நுட்பமும் பின்பற்றப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பண்ணைக்கும் தேவையான உரம் மற்றும் மின்சாரம் ஆகியவை உள்ளேயே இருக்கும். அதே போல, உற்பத்தி செய்யும் பொருட்களை அவர்களே நேரடியாக விற்பனையும் செய்து வருகிறார்கள். பசுமைக்குடில் அமைத்து விவசாயம் செய்யும்போது, குடிலுக்கு உள்ளே ஒரே சீரான வெப்ப நிலையைத் தக்கவைக்க முடியும். இதன் மூலம் விவசாயத்தை இலாபகரமான தாகச் செய்யலாம்.


2016ஆம் ஆண்டு நிலவரப்படி, விதை உற்பத்தியிலும் நெதர்லாந்து தான் முன்னிலை வகிக்கிறது. அதே போல இங்கு விற்கப்படும் விதைகள் அனைத்தும் இயல்பாகவே நோய் எதிர்ப்புத் தன்மையைத் தாங்கி நிற்கின்றன.

விவசாயத்தையே நம்பியிருக்கும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் நெதர்லாந்தைக் கண்டு பயப்படத் தேவையில்லை. விவசாயத்தில் நெதர்லாந்து செய்திருக்கும் சாதனைகள் ஏராளம் தான். ஆனால், இந்தச் சாதனையை அவர்களால் எப்போதும் முறியடிக்க முடியாது. அதற்கு நெதர்லாந்து அரசு உதவியும் செய்யாது.

**விகடன்**

---

**நம்ம பூமி கொஞ்சம் இல்ல, ரொம்பவே அதிசயம் நிறைந்துள்ளது. அதிசயம் என்றவுடன் உலகில் உள்ள ஏழு அதிசயங்கள் ஞாபகம் வருமே. ஆனால், நாம் இப்போது பார்க்கப்போவது அது மாதிரி இல்ல. உலகில் இருக்கிற நீங்கள் இதுவரைக்கும் கேள்விப்படாத விடயங்கள் இதோ.**



**மழையே பெய்யாதாம்...**


நம்ம பூமியில மழையே பெய்யாத பகுதி எதுன்னு கேட்டா உங்களுக்கு ஏதாவது ஒரு பாலைவனம் ஞாபகத்துக்கு வரலாம்.

சிலியில் இருக்கும் அட்டகாமா பாலைவனத்துல ஆயிரம் வருடமா மழை பெய்யலைன்னு யாராவது சொல்லி நீங்க கேள்விப்பட்டிருக்கலாம். அப்படியே இன்னொரு விடயத்தையும் தெரிஞ்சுக்கோங்க. அண்டார்டிகா வில் இருக்குற மெக்முர்டோ பள்ளத்தாக்கில் 2 மில்லியன் வருடங்களா மழையே பெய்யலை. இது தான் உலகிலே மிக வறட்சியான இடமாம்.



**ஒரே பூமி... ஒரே கண்டம்!**

உலகம் உருவானபோது ஒரே ஒரு நிலப் பரப்பு இருந்ததாகவும் அது பிரிந்து 7 கண்டங்களாக மாறியது என்றும் படித்திருப்பீர்கள். அந்த ஏழு கண்டங்களும் இன்னும் 250 மில்லியன் வருடங்களில் மீண்டும் பழைய மாதிரியே ஒரே நிலப்பரப்பாக மாறிவிடும் என்றும் கண்டறிந்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். அப்பொழுது ஒரே பூமி ஒரே கண்டம்தான்.



**எது உயரம்...**

உலகின் மிக உயரமான சிகரம் எது என்று கேட்டால் உங்க எல்லோருக்கும் எவரெஸ்ட் என்று பதில் தெரிந்திருக்கும். அதுதான் உலகத்துல உயர்ந்த சிகரமா? இல்லவே இல்லை.

அதைவிட உயரமானது ஹவாய் தீவுகளில் இருக்குற கியா சிகரம்தான்.

இதோட மொத்த உயரம் 10,203 மீற்றர். ஆனால், எவரெஸ்டின் உயரமோ 8,848 மீற்றர்தான். எவரெஸ்டைவிட 1,355 மீற்றர் உயரம் அதிகம் இருந்தாலும் கியா சிகரத்தோட பெரும்பாலான பகுதி பசுபிக் கடலுக்கு அடியில் இருக்கு.

# தலைதூக்கும் தீவிரவாதம் திணறும் அமெரிக்கா



சிதறிக் கிடக்கும் பலியானவர்களின் சைக்கிள்கள்

வாரம் தவறாமல், ஹொலிவுட் அக்ஷன் சினிமாக்கள் போல அமெரிக்காவில் துப்பாக்கிகள் வெடிக்கின்றன. ஒரு மாதத்துக்கு முன்பு லாஸ் வேகாஸில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு பயங்கரம் விலகாத நிலையில், நியூயோர்க்கின் மான்ஹட்டன் நகர் ட்ரக் தாக்குதல் அமெரிக்கர்களை நிலைகுலைய வைத்திருக்கிறது.

பாடசாலை நண்பர்களின் 30ஆவது வருடச் சந்திப்பை மான்ஹட்டனில் கொண்டாடியவர்களுக்கு, அடுத்த வருடக் கொண்டாட்டம் தொடர்பான திட்டமிடல்தான் நோக்கமாக இருந்திருக்கும். அதையெல்லாம், 29 வயது இளைஞன் சாய்போவ் சிதைத்துவிட்டான். இரட்டைக் கோபுரத்தின்மீது பயங்கரவாதத் தாக்குல் நடந்ததற்கு பிறகு, அமெரிக்கா, தன்னைத் தீவிரவாதிகளிடமிருந்து கவனமாகப் பாதுகாத்துக்கொண்டிருப்பதாக மார்தட்டிக் கொண்டிருந்தது. இதனை உடைத்தெறிந்தது உபேர் நிறுவனத்திலிருந்து 75 நிமிடங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்ட ட்ரக்!

கையில் துப்பாக்கிகளுடன் ட்ரக்கில் வந்த இளைஞன், வாகனத்தை வேகமாகச் செலுத்தியதில் 8 பேர் உயிரிழந்தனர். பாடசாலை நண்பர்களின் 30 ஆவது வருடச் சந் திப்புக் கொண்டாட்டத்தை முடித்துவிட்டு போனவர்களுக்குத்தான் இப்படியொரு பரிதாப மரணம் நேர்ந்தது. ட்ரக்கை நிறுத்திவிட்டு நடந்து வந்த அந்த இளைஞனை வயிற்றில் சுட்டுப் பிடித்தது பொலிஸ். இந்தச் சம்பவத்துக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்கவில்லை. ஆனால் “இது ஐ.எஸ்.தாக் குதல்தான்” என்றது அமெரிக்கா. ட்ரம்ப் தனது டுவிட்டரில், ‘ஐ.எஸ் தீவிரவாதிகளை அமெரிக்காவைவிட்டு வெளியேறவும் விட மாட்டோம். உள்ளே நுழையவும் அனுமதிக்க மாட்டோம். அனைத்துப் பகுதிகளிலும் அவர்களைத் தோற்கடிப்போம்’ எனச் சூளுரைத்திருக்கிறார்.

யார் இந்த சாய்போவ்? உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்தவன் செய்ஃபாலோ சாய்போவ். அமெரிக்காவில் 2010ஆம் ஆண்டு ஒஹியோ பகுதியில் குடியேறினான். சாய்போவ் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர், “மிகவும் அமைதியான பையன். யாரிடமும் அதிகமாகப் பேச மாட்டான். வேலைக்குச் சென்று விட்டு வீட்டுக்குத் திரும்புவான். வெளியில் செல்லமாட்டான்” என பொலிஸில் தெரிவித்திருக்கிறார்.

அவனது கையில் ஒரு பெல்லட் துப்பாக்கியும், ஒரு பாயின்ட்பால் துப்பாக்கியும் இருந்துள்ளது. உபேர் வாகன சர்வீஸ் நிறுவனத்தில் பணிபுரிந்துள்ளான் என்பதை உபேர் நிறுவனம் உறுதி செய்துள்ளது.

ஐ.எஸ்.இந்த தாக்குதலுக்குப் பொறுப்பேற்காத நிலையில் சாய்போவ் தீவிரவாதிதான் என்பதற்குச் சில ஆவணங்கள் முன்வைக்கிறது அமெரிக்கா. “சாய்போவின் செல்போனில் ஐ.எஸ்.தொடர்பான வீடியோக்கள் இருந்தன. ஐ.எஸ்.இயக்கத்தால் பெரிதும் தூண்டப்பட்டவனாக இருந்திருக்கிறான். ட்ரக்கில் ஐ.எஸ் கொடியை வைத்திருந்திருந்தான். அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும்கூட ‘ஐ.எஸ் கொடியை அறையில் பறக்கவிட வேண்டும்’ என்றான். தாக்குதல் முழுவதுமே ஐ.எஸ்.தாக்குதல் விதிகளின்படி நடந்துள்ளது” என்கிறது பொலிஸ். இந்தக் காரணங்கள்தான் சாய்போவைத் தீவிரவாதி என அடையாளப் படுத்துகின்றன.

இரட்டைக் கோபுரம் தாக்குதல் நடந்த கட்டடத்துக்கு அருகில் தான் இப்படியான துப்பாக்கிச் சூடுகள் சர்வ சாதாரணமாக நடைபெறத் தொடங்கி விட்டன. மான்ஹட்டன் ட்ரக் தாக்குதல் நடந்த 24 மணி நேரத்துக்குள் அடுத்த தாக்குதல் கொலராடோவில் நடைபெற்றது. வால்மார்ட் ஷாப்பிங்கில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர், மூன்று பேர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றிருக்கிறான்.

நவம்பர் 5ஆம் திகதி டெக்ஸாசில் தேவாலயத்துக்குள் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். டெவின் பேட்ரிக் செல்லி எனும் 26 வயது இளைஞன்தான் தாக்குதல் நடத்தியிருக்கிறான். இவன் அமெரிக்க ஏர்ஃபோர்ஸில் பயிற்சி பெற்றவன் என பென்டகன் தெரிவித்துள்ளது.

ட்ரம்ப் அரியணைக்கு வந்தபிறகு இப்படியான தாக்குதல்கள் அதிகமாகி வருகின்றன. இரட்டைக் கோபுரம் தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகு தீவிரவாதத்தை ஒழிப்பதில் தீவிரம் காட்டியது அமெரிக்கா. ஒபாமா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டன. அந்த நடவடிக்கையின் ஒரு அங்கமாக ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டான். ஆனால், தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ட்ரம்ப் மெத்தனம் காட்டுகிறாரா என விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், தற்போது தீவிரவாதத் தாக்குதல்கள் அமெரிக்காவில் மெல்ல தலை தூக்கத் தொடங்கியுள்ளன.


> “ட்ரம்ப் அரியணைக்கு வந்த பிறகு இப்படியான தாக்குதல்கள் அதிகமாகி வருகின்றன. இரட்டைக் கோபுரம் தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகு தீவிரவாதத்தை ஒழிப்பதில் தீவிரம் காட்டியது அமெரிக்கா. ஒபாமா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக்கப் பட்டன. அந்த நடவடிக்கையின் ஒரு அங்கமாக ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டான். ஆனால், தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ட்ரம்ப் மெத்தனம் காட்டுகிறாரா என விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், தற்போது தீவிரவாதத் தாக்குதல்கள் அமெரிக்காவில் மெல்ல தலை தூக்கத் தொடங்கியுள்ளன.”



- **அமெரிக்காவில் 100 பேருக்கு 88 துப்பாக்கிகள் என்ற அளவில் துப்பாக்கி விகிதம் உள்ளது.**
- **உலகில் துப்பாக்கி வைத்திருக்கும் 100 பேரில் 5 பேர் அமெரிக்கர்கள்**
- **ஆண்டுக்குச் சராசரியாக 30,000 அமெரிக்கர்கள் துப்பாக்கிச்சூட்டால் இறக்கிறார்கள்.**
- **ஓர் ஆண்டில் துப்பாக்கிச்சூட்டால் நடக்கும் கொலைகள் 73%**
- **ஆண்டுக்குச் சராசரியாக அமெரிக்காவில் 4 இலட்சம் துப்பாக்கித் திருட்டுச் சம்பவங்கள் நடக்கின்றன.**
- **துப்பாக்கிச் சூட்டால் ஆண்டுக்கு ஏற்படும் மருத்துவச் செலவு, சுமார் 18,000 கோடி ரூபாய்.**
- **எளிதாக துப்பாக்கி கிடைக்கும் 5 நாடுகள்:- அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, இத்தாலி, பின்லாந்து, பனாமா**

# நல்லாட்சி அரசின் பட்ஜெட்-2018

## ஒரு பார்வை



நீலப்பசுமை எனும் தொனிப் பொருளில் (Blue-Green) 2018 இற்கான வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப் பட்டிருக்கின்றது. நீலம் (Blue) என்பது சமுத்திர வளத்தின் உள்ளார்ந்த ஆற்றலினை ஒருங்கிணைத்தல் மற்றும் பயன்படுத்தல் என்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இலங்கை சுதந்திரமடைந்து 70 வருடங்கள் கடந்தும் கடல் வளத்தின் உள்ளார்ந்த ஆற்றல் சரியான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டு முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. 2018 வரவு-செலவுத்திட்டம் அதற்கு முன்னுரிமை வழங்கியது சிறப்பம்சமாகும். ஆனால் இதனை எவ்வாறு செயற்படுத்தப் போகிறார்கள் என்பதும் அதற்குரிய நிதி ஒதுக்கீட்டுத் திட்டங்கள் தெளிவாக இல்லை. ஆனாலும் உரிய முறையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் பொருளாதாரத்திலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்படும்.

பசுமை (Green) என்பது சூழல் நட்புக்கொள்கைக்கு முன்னுரிமை அளிக்கும் திட்டமாகும். அதற்குரிய திட்டங்களில் மின்சாரத்தில் இயங்கும் வாகனத்தின் அறிமுகம், சொகுசு வாகனங்களுக்கான வரியதிகரிப்பு மற்றும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான வரிகள் மற்றும் திட்டங்கள் காபன் வரி அறிமுகம் போன்றவற்றின் ஊடாக பேண்தகு அபிவிருத்தியினை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் வரி வருமானத்துடன் தொடர்புபட்டிருப்பதனால் அரசு ஓரளவிற்கு தெளிவாக திட்டங்களை முன் வைத்துள்ளது.

பொதுவாக கடந்த காலங்களில் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது கட்சி மற்றும் ஆட்சிமுறையினை நிலைநிறுத்துவதற்கு அல்லது அவ் ஆட்சிமுறையின் கடந்த காலத் தவறுகள் மற்றும் பிரச்சினைகளை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் இடம்பெறும். குறிப்பாக ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, தனியார் ஊழியர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் சலுகைகள், அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக் குறைப்பு, வர்த்தக சமூகத்தை திருப்திப்படுத்தும் கொள்கைகள் எனப் பட்டியல் விரிந்து செல்லும். இம்முறையும் அடுத்தாண்டு உள்ளூராட்சித்தேர்தல் வருவதாலும் நல்லாட்சி அரசு கடுமையான அழுத்தங்களை பொதுமக்களிடமிருந்து எதிர்நோக்கி வருவதாலும் அதி சலுகைகள்கொண்ட அரசியல் பட்ஜெட் ஆக இருக்குமென நம்பப்பட்டது. ஆனால் இந்த அரசு 2020 இல் பொதுத்தேர்தலை சந்திக்க இருப்பதால் அதனை மிகச்சலுகைகள் கொண்ட சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வரவு-செலவுத்திட்டமாக 2019ஆம் ஆண்டு சமர்ப்பிக்க உத்தேசித் திருக்கலாம். அதனால்தான் இந்த இடை வெளியில் ஓரளவு பொருளியல் அம்சம் கொண்ட தூரநோக்குடைய வரவு-செலவுத்திட்டத்தை முன்வைத்துள்ளது. 2018 ஆம்ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் உடனடியான சலுகைகள் சாதாரண பொது மக்களுக்கு இல்லை. அரசியல் சாயம் கொண்டதாகவும் அது இல்லை.

இந்த வரவு-செலவுத்திட்டத்தின் வெற்றி அதன் அமுலாக்கத்தில் தங்கியுள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் இலங்கையின் அமுலாக்கல் பிரிவுகள் அல்லது மட்டம் இன்னும் போதிய வினைத்திறன்உடையதாக காணப்படாது வேண்டாவெறுப்பாக செயற்படும் பிரிவாக இருந்து வருவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. சமூக உட்கட்டுமானங்களுக்கு குறிப்பாக கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளுக்கு நிதிகள் குறிப்பிடத்தக்களவு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் தரம் மற்றும் நிலைபேண்தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் திட்டங்கள் இல்லை. குறிப்பாக புதிய பீடங்களை நிறுவுவதற்கும் அடிக்கட்டுமானத்திற்கும் பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வியமைப்புகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆய்வு அபிவிருத்தி தொடர்பில் நிதிஒதுக்கீட்டில் தெளிவில்லை. இலங்கைக்கு மிக வேண்டியதான ஆய்வு அபிவிருத்தி தொடர்பான ஊக்கப்படுத்தலில் இலங்கை 2018இலும் பின்தங்கியே காணப்படப் போகின்றது.

வடக்கு-கிழக்குத் தொடர்பில் குறிப்பாக போராளிகள் நலன், வீடமைப்பு, ஒருசில தொழிற்சாலைகள் நிறுவுதல் என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆயினும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி, மீள்நல்லிணக்கம் என்றவகையில் வடக்குக் கிழக்கிற்கு பெரு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக வடமாகாணத்தில் ஒருசில தொழிற்சாலைகள் உருவாக்கத்திற்கான திட்டங்கள் காணப்படுகின்றன. உற்பத்திக் கைத்தொழிலில் மிக பின்தங்கிய நிலையில் இருக்கின்ற வட மாகாணத்திற்கு சிறப்பான திட்டங்கள் எவையுமில்லை. தொடர்ந்தும் இம் மாகாணங்கள் சேவைகள் வழங்குகின்ற மாகாணங்களாகவே இருக்கப் போகின்றன. உற்பத்தி சார்ந்த தொழில் முயற்சித்திட்டங்களை வடக்கு-கிழக்கு மாகாணத்தை மையப்படுத்திய வகையில் இவ்வரவு செலவுத்திட்டத்தினூடாக முன்வைக்கப்பட்டிருந்தால் இது ஒரு சிறந்த பட்ஜெட்டாக இருந்திருக்கும். வடக்கு-கிழக்குப் பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவகையில் சிறப்புத் திட்டத்தை முன்வைத்திருந்தால் இவ் வரவு-செலவுத்திட்டத்தினூடாக தேசிய நல்லிணக்கத்திற்கு பலம் சேர்த்திருக்கக்கூடும். ஆனால் வரவு-செலவுத்திட்டத்தினூடாக அதனை அரசு நிரூபிக்கத் தவறிவிட்டது. ஆனாலும் ஒட்டுமொத்தமாக நாம் நோக்குகின்றபோது அரசியல் சாயமற்ற ஒரு பொருளாதார வரவு-செலவுத்திட்டமாக இது காணப்படுகிறது.

கலாநிதி
எஸ். விஜயகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஒட்டுக் கேட்கிறதா பேஸ்புக்?

இணையம் நம்மை எப்படியெல்லாம் இணைக்கிறது என்று கேள்வி கேட்டால் படம் வரைந்து பாகங்கள் குறிக்கும் அளவிற்கு நமக்கு விபரங்கள் தெரியும். தோராயமாக விளக்கிவிட்டு, இதற்கெல்லாம் மென்பொருள் பொறியியல் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று கொலரைத் தூக்கிவிட்டுக்கொள்ளலாம். உண்மைதான். ஆனால், மென்பொருள் பொறியியலிலும் கரைகண்டவர்களுக்குக்கூடத் தெரியாத இணையத் தகிடுதிட்டங்கள் நிறைய. அவை, அவ்வப்போது வெளிச்சத்திற்கு வருவதுண்டு. அப்படி ஒரு சர்ச்சையான தியரிதான் இந்த 'உளவாளி ஃபேஸ்புக் ஆப்' கூற்றும்.



இதுவும் மேலே கூறிய மாஜிக்கைப் போலத்தான். யூடியூப் பயனாளி நெவில் என்பவருக்கு ஒரு சந்தேகம். தனது ஸ்மார்ட்போனில் ஒரு பரிசோதனையை மேற்கொள்ள... அவருக்கு மிகப்பெரிய ஷொக். அப்படியே அதை யூடியூபில் வீடியோவாகப் போட, செம வைரல் ஹிட். நெட்டிசன்கள் அனைவரும் வெலவெலத்துப்போய் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நபரின் அப்சர்வேஷன் இதுதான்.

நம் ஸ்மார்ட்போன்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஃபேஸ்புக்கின் அதிகாரபூர்வ ஆப் ஒரு இரகசிய உளவாளி. அந்த ஆப்பை நாம் இன்ஸ்டோல் செய்யும்போதே ஒரு சில விடயங்களைத் தன்னிச்சையாகச் செய்துகொள்ள அது அனுமதிகேட்கிறது. அதில் மிக முக்கியமான ஒன்று, நம் போனின் மைக்ரோபோனைப் பயன்படுத்துவது. நாம்தான் 'டேர்ம்ஸ் அண்டு கண்டிஷன்ஸ்' என்பதைப் பார்த்தவுடனேயே 'நெக்ஸ்ட்' பட்டனை ஐந்து முறை அழுத்தும் ஆட்கள் ஆயிற்றே?

"இன்ஸ்டோல் செய்தவுடன் நம் போனின் மைக்கில் நாம் பேசும் ஒவ்வொரு விடயத்தையும் ஃபேஸ்புக் ஆப் உள்வாங்கிக் கொள்கிறது. அதாவது, நாம் பேசும் ஒவ்வொரு தொலைபேசி அழைப்பையும் அது கண்காணிக்கிறது. அதிலிருந்து முக்கியமான கீ-வேர்ட்ஸ் எனப்படும் தரவுச் சொற்களை இனம் கண்டறிந்து பதிவு செய்துகொள்கிறது. இப்படிப் பதிவு செய்த சொற்களுக்கு ஏற்ற அல்லது இணையான விளம்பரங்களை இணையம் முழுவதும் நீங்கள் பார்க்கும் வெப்சைட்களில், மேற்கூறிய வழியில் வெளியிடுகிறது" என்று கிலியூட்டுகிறார் நெவில்.

அவர் செய்த அந்தப் பரிசோதனையில், தன் மனைவியின் போனில், கட் ஃபுட் (Cat Food) என்ற வார்த்தையை ஒரு தொலைபேசி அழைப்பில் பேசும்போது அடிக்கடி பயன்படுத்துகிறார். பின்னர், ஃபேஸ்புக் சென்றபோது கட்ஃபுட் குறித்த விளம்பரங்கள் தட்டுப்பட்டதாகக் காட்டியுள்ளார். அவ்வகை விளம்பரங்கள் இரண்டு நாட்களுக்குப் பின்னர் தோன்றியதாகவும், ஏதேச்சையாகவே இருந்தாலும், சம்பந்தமே இல்லாமல் கட் ஃபுட் குறித்த விளம்பரங்கள் மட்டும் தனக்கு ஏன் வர வேண்டும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். "ஃபேஸ்புக் ஆப் இன்ஸ்டோல் செய்யும் போது அது கேட்கும் அனுமதி நம் போனின் மைக்ரோபோனைப் பயன்படுத்துவதற்காகத்தான். ஆனால், அது நீங்கள் நினைப்பது போல் எப்போதும் ஒட்டுக்கேட்பதற்கு இல்லை. ஃபேஸ்புக் ஆப் மூலம், நீங்கள் ஒரு வீடியோ எடுக்கிறீர்கள் என்றால், அப்போது அந்த ஆப் மைக்கைப் பயன்படுத் தித்தானே ஆக வேண்டும்." என்பது இணையப் பயன்பாட்டாளர்கள் பலரும் எழுப்பியிருக்கும் வாதம்.


### என்ன சொல்கிறது ஃபேஸ்புக்?

"ஃபேஸ்புக் ஆப் ஒட்டுக்கேட்கிறது" என்று சொல்வதெல்லாம் அபத்தம் என்கிறார் அதன் விளம்பரப் பிரிவுத் தலைவர் ராப் கோல்ட்மேன். அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், "நாங்கள் ஒருபோதும், மைக்ரோபோன் கொண்டு யார் பேசுவதையும் கேட்டதில்லை" என்று டுவீட் செய்துள்ளார்.

உண்மையிலேயே ஃபேஸ்புக் ஒட்டுக் கேட்பதில்லை என்றால் அதற்கு இதுபோல் ஒற்றை வரி பதில் இல்லாமல் முழுமையான விளக்கம் கொடுக்கவேண்டும் என்கிறார்கள் இணைய ஆர்வலர்கள்.

இலவசமாகச் சேவைகள் வழங்கும் அனைத்து இணையச் சேவைகளும் விளம்பரங்கள் மூலம்தான் பணம் பார்க்க முடியும். அதற்கு அவர்களுக்குத் தேவை, நம்மைப் பற்றிய தகவல்கள். அதை எடுக்க என்ன வேண்டுமென்றாலும் செய்வார்கள். அதை யாரும் மறுக்கமுடியாது என்பதே இணையம் சொல்லும் உண்மை!

# கப்டன், லீடர், லெஜெண்ட்... தாதா கங்குலி! கிரிக்கெட்டுக்கு குட்பை சொன்ன தினம்



அந்த சகாப்தம் முடிவுக்கு வந்து 10 வருடம் ஆகிவிட்டது. ஆனால், இன்னும் இந்தியாவின் கிழக்குப் பகுதி இவரைத்தான் தன் அடையாளமாகக் கொக்கரித்துக் கொண்டிருக்கிறது.

வங்கத்தின் கிரிக்கெட் இன்னும்இவரை மையமாகக்கொண்டு தான் செயற்பட்டு வருகிறது. பி.சி.சி.ஐ தலைவர் முதல் சி.எஸ்.கே டீம் வரை அனைவரின் கண்ணிலும் விரலைவிட்டு ஆட்டிய டோனி காலத்திலும் கூட இவர் பெயரைத் தான் பரிந்துரை செய்துகொண்டே இருக்கிறது.

ஹோலியின் பட்டிங்கில் சச்சினைக் கண்டு சிலாகித்தவர்கள், அவரது கப்டன்சியில் இவரைக் கண்டு கர்வம் கொள்கின்றனர்.

அன்று இவரது ரசிகராக இருந்தவர்கள், இன்றும் என்றும் அவரது வெறியர்களாகவே வலம் வந்து கொண்டிருக்கின்றனர். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்று இன்றோடு 10 ஆண்டுகள் முடிந்துவிட்டன.

ஆனால், ஒருநாள் கூட இந்திய கிரிக்கெட் அவரிடமிருந்து விலகவில்லை. காரணம், இந்திய கிரிக்கெட் பாதாளம் நோக்கிப் பயணித்தபோது, அதன் எதிர்காலத்தை மீட்டெடுத்தவர் அவர். இனியும்கூட அவரால் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியும். அவர் ... சௌரவ் கங்குலி - கப்டன்... லீடர்... லெஜண்ட்!

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடந்த, இந்தியா - அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடரின்போது, 'ஸ்லெட்ஜிங்' அடுத்த கட்டத்தை அடைந்திருந்தது.

வார்த்தைச் சண்டைக்குப் பெயர்போன ஆஸி வீரர்களையே தங்கள் ஆக்ரோஷ குணத்தால் ஷாக் கொடுத்தது ஹோலி அண்ட் கோ. இந்த இளம் அணியின் அந்த ஆக்ரோஷ அப்ரோச்சை பலரும் வரவேற்கின்றனர்.

ஆனால், இந்த விதையை விதைத்தவர் "தாதா". இந்திய கிரிக்கெட்டின் மீதான பார்வையை மாற்றிய முதல் ஆள் கங்குலிதான். இன்று இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் பெரிய வித்தியாசமில்லை" என்று ஒருமுறை கூறினார் ஆஸி முன்னாள் கப்டன் ஸ்டீவ் வாஹ். கங்குலிதான் என் ஃபேவரைட் கப்டன்.

அவுஸ்திரேலிய மண்ணில், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணியை கங்குலி வழிநடத்திய விதம் பிரம்மிப்பாக இருந்தது" என்றார் ரிக்கி பாண்டிங். இப்படி உலகம் போற்றிய கப்டன்களே வியக்கும் வகையில் அணியை வழிநடத்தியவர் அவர்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களில் பெட்டிப்பாம்பாக அடங்கிக் கிடந்த அணியை "ஆங்ரி" மோடுக்கு மாற்றியவர். ஸ்டீவ் வாஹை டாஸ்க்குக் காத்திருக்க வைத்ததிலிருந்து, லார்ட்ஸில் சட்டையைக் கழட்டிச் சுற்றியது வரை, அவர் செய்ததெல்லாம் மாஸ். ஆனால், அந்தச் செயல்களில் தனி மனிதக் கோபத்தை வெளிக்காட்டியதில்லை. இந்தியா சர்வதேச கிரிக்கெட் அரங்கில், ஒரு மாபெரும் சக்தியாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கான அறைகூவல் அது! "நீ என்ன வேண்டுமானாலும் பேசு. நாங்கள் பட்டால் பேசுவோம்", என்று இந்திய வீரர்களின் டெம்பரமென்டை உடைத்தெறிந்தார். அடிச்சா திருப்பி அடிக்கணும் என்று தன் அணியைச் சீண்டியவர்களுக்கு களத்திலேயே பதில் தந்தார், வார்த்தையிலும், பட்டிலும்..

2002 சம்பியன்ஸ் டிராஃபி இறுதியில், இலங்கை வீரர் அர்னால்டுடன் பிரச்சினை ஏற்பட, கங்குலி மைதானத்தில் சீறியதெல்லாம் வேற லெவல். இந்திய வீரர்களிலிருந்து ஆனானப்பட்ட அம்பயர் டேவிட் ஷெப்பர்டு வரை எல்லோரும் அந்த வங்கப்புலியின் ஆக்ரோஷத்தை அடக்க முடியாமல் தவித்தனர்.

தன் போராட்ட குணத்தை வீரர்களுக்கும் விதைத்தார். அவர்களுக்குள்ளிருந்த போராளிகளை எழுப்பினார். ஹர்பஜன் சைமண்ட்ஸிடம் சீறியது, கம்பீர், வாட்சனுடன் வாக்குவாதம் செய்தது போன்ற விடயங்கள் கூட இந்த மனிதன் இல்லாவிடில் நடந்திருக்க வாய்ப்பில்லை. அவற்றின் விளைவு, இன்று கோலி கொதித்தெழ, அவுஸ்திரேலியா அமைதியாகிறது.

ஆனால், ஒரு கப்டனாக இவர் ஆக்ரோஷம் மட்டும் காட்டிக் கொண்டிருக்கவில்லை. தேர்வுக் குழு எடுக்கும் முடிவுகளுக்குத் தலையாட்டி விடவில்லை. அப்படித் தலையாட்டியிருந்தால், சேவாக், ஹர்பஜன், ஜாஹிர், யுவராஜ் எல்லோரும் ரஞ்சிக் கோப்பை வீரர்களாகவே ஓய்வு பெற்றிருப்பர்.

உதாரணமாக, 2001-ம் ஆண்டு. ஹர்பஜனுக்கு வாய்ப்பு வழங்காமல், சரந்தீப் சிங் போன்ற பெயர்கள் பரிசீலனையில் இருக்கின்றன. ஹர்பஜன் தான் வேண்டும் என்றார் கங்குலி. மறுக்கிறது தேர்வுக்குழு. பிடிவாதம் பிடிக்கிறார் கப்டன். வேறு வழியின்றி அந்தத் தொடருக்கு ஹர்பஜனின் பெயர் டிக் அடிக்கப்படுகிறது.

3 போட்டிகளில், 32 விக்கெட்டுகள், ஹாட்ரிக், சரித்திர வெற்றிக்கு அழைத்துச் செல்கிறார் பாஜி. அவுஸ்திரேலியாவின் வெற்றிப் பயணத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறார் கங்குலி, அதுவும் தேர்வாளர்கள் விரும்பாத ஹர்பஜனை வைத்து. இது தான் கங்குலி... தாதா!

நான் தடுமாறியபோது கங்குலி எனக்குப் பக்கபலமாக இருந்தார். அவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். என் நன்றியை வார்த்தைகளால் தெரிவித்துவிட முடியாது" என்று உருகினார் வீரேந்திர சேவாக். இன்று அவரும் ரிட்டையர்டு பிளேயர். ஆனால், இன்றுவரை கங்குலி தனக்கு உதவியதை நினைத்துக்கொண்டிருக்கிறார். மிடில் ஆர்டரில் தவித்தவருக்கு, தன் ஓப்பனிங் ஸ்லாட்டை விட்டுக்கொடுத்து கங்குலிமட்டும் சேவாக்கை ஓப்பனர் ஆக்காமலிருந்தால், சுல்தான் ஆஃப் முல்தானாக ஓய்வு பெற்றவர் டெல்லி ரஞ்சி வீரராக என்றோ காணாமல் போயிருப்பார்.

யுவி, ஜாஹிர் என எல்லோரும் கங்குலி தேர்வுக்குழுவிடம் காட்டிய பிடிவாதத்தினால் கிடைத்த ஜாம்பவான்கள். கங்குலி போன்ற கப்டனுக்காக நான் உயிரைக்கூட விடுவேன் என்று எமோஷனல் ஆனவர் யுவி!

இன்று பலரும் டோனிக்கு எதிராக குரல் கொடுக்க, அவருக்குப் பக்கபலமாக கப்டன் விராட் நிற்கிறார். இப்படி வீரர்கள் தேர்விலும், அக்ரெஸிவ் கப்டன்ஷியிலும் விராட்டைப் பார்த்து கொஞ்சம் கொஞ்சம் சமாதானம் ஆகிக் கொண்டிருந்தாலும், தாதா வெறியர்கள் கங்குலி எனும் உலகத்தர பட்ஸ்மேனை மிஸ்செய்துகொண்டு தான் இருக்கின்றனர்.


கங்குலியால் பௌண்டரி எல்லையை மட்டுமல்ல, மைதானத்தையே க்ளியர் செய்யும் சிக்ஸர்கள் அடிக்க முடியும்" என்று கூறினார் வி.வி.எஸ் லட்சுமண். கங்குலியின் ஆஃப் சைட் ஷாட்கள் பற்றி டிராவிட் கூறிய அந்த வாசகம் அல்ட்டிமேட்! "on the offside, first there is God and there is Ganguly". அப்படிப் பட்ட அந்த பட்ஸ்மேனை இன்று யாருடைய ரூபத்திலும் காண்பது கடினம்.

இரண்டு ஸ்டெப் இறங்கி வந்து லாங் ஆஃப் பவுண்டரியை அவர் க்ளியர் செய்யும் அந்த ஷாட்... மூன்று ஸ்லிப் ஃபீல்டர்கள், கல்லி, பேக்வேர்ட் பாய்ண்ட், பாய்ண்ட் என ஃபீல்டர்கள் ஆஃப் சைடில் சூழ்ந்திருக்க, எட்ஜில் விக்கெட் வீழ்த்துவதற்காகவே வீசப்படும் அந்த அவுட் ஸ்விங் பாலை, ஃபீல்டர்கள் சுதாரிப்பதற்குள் அவர்களைக் கடந்து பௌண்டரி எல்லைக்கு "லான்ச்" செய்யும் அந்த "கட் ஷாட்"... லெக் ஸ்பின் பௌலராக இருந்தால், அது உலகையே கலங்கடிக்கும் வார்னேவாக இருந்தாலும் கூட, ஃப்ரண்ட் ஃபுட் எடுத்து வைத்து மிட் விக்கெட் திசையில், மைதானத்தையே தாண்டுமளவு அடிக்கும் அந்த "ஸ்லாக் ஸ்வீப்"... இன்று யாரிடம் பார்த்து ரசிக்க முடியும்? இன்னும் சிக்ஸரின் மீற்றர்களை அளந்துகொண்டிருக்கிறார்கள். மைதானத்துக்கு வெளியே அவர் அடித்த சிக்ஸர்களையெல்லாம் எதைக்கொண்டு அளக்க?

தாதாவின் கப்டன்ஷிப் பெருமை பேசி, கங்குலி எனும் பட்ஸ்மேனைக் கொண்டாட மறந்துவிட்டோம். அதிவேகமாக 9,000 ரன்களை ஹோலி கடந்த போது, அவர் உடைத்தது 8 மாதங்களாக நின்றிருந்த ஏ.பி. டிவில்லியர்ஸின் சாதனையை. பெப்ரவரி மாதம் அந்தச் சாதனையை டிவில்லியர்ஸ் படைத்த போது, அவர் உடைத்தது 13 ஆண்டுகள் முறியடிக்கப்படாமல் இருந்த கங்குலி எனும் தலைசிறந்த இடதுகை பட்ஸ்மேனின் சாதனையை.

கப்டனாக அல்லாமல், பட்ஸ்மேனாகவும் போட்டிகளை வென்று தந்தவர். ஒருநாள் போட்டிகளில் 10,000 ரன், 100 விக்கெட், 100 கேட்ச் என்ற மைல்கல்லை எட்டிய நான்கு வீரர்களுள் ஒருவர். ஒருநாள் போட்டி வீரர் என்று முத்திரை குத்தப்பட, பிரிஸ்பேனில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அவர் அடித்த 144 ரன்கள் போதும் அவர் சிறந்த டெஸ்ட் பட்ஸ்மேன் என்பதை உணர்த்த...

எதிரணியினரைத் துவம்சம் செய்ய, அந்த வங்கச் சிங்கத்தின் வால் எப்போதும் நிமிர்ந்தே இருந்தது என்றார் நவ்ஜோத் சிங் சித்து. இவரோடு மைதானத்தின் நடுவில் நின்று டாஸ் போட்ட, எந்த எதிரணி கப்டனும் ஒத்துக் கொள்வார்கள் இந்திய கிரிக்கெட்டுக்கு அடையாளம் தந்தவர் கங்குலிதான் என்று. கங்குலியின் தலைமையில் இந்திய அணி ஆடுகிறதென்றால், அது யாருக்கும் மிகப்பெரிய சவால். அவரை நீங்கள் நேசிக்கவோ, வெறுக்கவோ வேண்டாம். ஆனால் அவருக்கு மரியாதை செலுத்தியே ஆகவேண்டும்" என்றார் ஸ்டீவ் வாஹ். இதுதான் தன் 16 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையில் கங்குலி சம்பாதித்தது. (க)



## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : நான் பெற்ற செல்வம்
இசை : ஜி.இராமநாதன்
பாடல் வரிகள் : கா.மு.ஷெரீப்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



நான் பெற்ற செல்வம் நான் பெற்ற செல்வம்
நலமான செல்வம் தேன்மொழி பேசும்
சிங்காரச் செல்வம் சிங்காரச் செல்வம்
நான் பெற்ற செல்வம் நலமான செல்வம்
தேன்மொழி பேசும் சிங்காரச் செல்வம்
நான் பெற்ற செல்வம் நலமான செல்வம்
தேன்மொழி பேசும் சிங்காரச் செல்வம்
(நான் பெற்ற செல்வம்)

தொட்டால் மணக்கும் சவ்வாது
சுவைத்தால் இனிக்கும் தேன் பாகு
தொட்டால் மணக்கும் சவ்வாது
சுவைத்தால் இனிக்கும் தேன் பாகு
எட்ட இருந்தே நினைத்தாலும்
எட்ட இருந்தே நினைத்தாலும்
இனிக்கும் மணக்கும் உன் உருவம்
இனிக்கும் மணக்கும் உன் உருவம் நீ
நான் பெற்ற செல்வம்)

அன்பே இல்லா மானிடரால்
அன்னையை இழந்தாய் இளம் வயதில்
அன்பே இல்லா மானிடரால்
அன்னையை இழந்தாய் இளம் வயதில்
பண்பே அறியாப் பாவியர்கள்
பண்பே அறியாப் பாவியர்கள்
வாழுகின்ற பூமியிது நீ அறிவாய் கண்ணே

நான் பெற்ற செல்வம் நலமான செல்வம்
தேன்மொழி பேசும் சிங்காரச் செல்வம்
நான் பெற்ற செல்வம்

# உங்கள் மாதப்பலன் எப்படி?

## ஒகஸ்ட் 21-செப்டெம்பர் 20ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

(கடந்தவார தொடர்ச்சி)

**தொழிலில் ஆர்வம்**

ஒரே நிலையான உழைப்பினால் மட்டுமே இவர்கள் பெரும் வெற்றியை அடைந்து வருவார்கள்.

இவர்கள் தங்கள் சொந்த எண்ணங்களிலும் சொந்த நலன்களிலும் மட்டுமே எப்போதும் நேரத்தைக் கழிப்பார்கள். இவர்கள் எண்ணியவற்றை அடைவதற்காகச் சற்றுச் சுயநலமாக நடந்து கொள்ளவும் தயங்க மாட்டார்கள்.

எப்போதும் இவர்கள் தன்னம்பிக்கையும் பண வசதியும் கொண்டவர்களாக இருப்பார்கள்.

நல்லதையோ தீயதையோ செய்ய முடிவைக் கட்டி விட்டால் கடைசி வரையில் ஒருகை பார்த்துவிடுவார்கள். பணத்தில் ஆசை பிறந்து விட்டால் எதற்கும் தயங்க மாட்டார்கள். மற்றவர்களைப் பற்றி இவர்கள் துன்பம் கொள்ளாமல் தாம் எண்ணியபடி பணத்தை எப்படியாவது அடைய வேண்டும் என்று எண்ணுவார்கள்.

வாழ்க்கையில் எப்படிப் பட்ட பாதையையும் இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியும்.

இவர்களுடைய அன்பைப் பொறுத்தவரையில் இவர்களை எளிதில் புரிந்து கொள்ளவே முடியாது. ஆண்களிலும் சரி பெண்களிலும் சரி அன்பு காட்டுவதில் சிறந்தவர்களாகவும் இருப்பார்கள். மிக மோசமானவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் கற்புள்ளவர்களாகவும் தூய்மையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

ஆனால் இவர்கள் பிறகு மாறினால் முற்றிலும் மாறி ஏதோ ஒரு வஞ்சத்துடன் தூய்மையை இழக்க யோசிக்க மாட்டார்கள். ஆனால் தமது புத்திசாலித்தனத்தாலும் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும் என்ற எண்ணத்தாலும் இவர்கள் தங்களுடைய குறைகளை மற்றவர்கள் அறியாவண்ணம் மறைத்து விடுவார்கள். ஆண்கள் மது அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள அதிக வாய்ப்புண்டு.

**உடல்நிலை**

ஏனைய மாதங்களில் பிறந்தவர்களைவிட இந்த மாதத்தில் பிறந்தவர்கள் கூடிய வரையில் நோயின்றியே வாழ்வார்கள். ஆனால் இவர்கள் பத்திரிகைகளிலோ புத்தகங்களிலோ ஏதாவது ஒரு நோயைப் பற்றிப் படித்து விட்டால் உடனே அந்த நோய் தமக்கு வந்து விட்டதாகக் கற்பனை செய்து கொள்ளுவார்கள்.

உணவு வகைகள் மிக ருசியுடன் இருக்க வேண்டும். சுவையுடனும் பார்ப்பதற்கு அழகுடனும் இருந்தால் தான் இவர்கள் உணவு உண்பார்கள். அதனால் நல்ல உடல் நலம் காப்பவர்கள் இவர்கள் எனலாம்.

சுற்றுப்புறத்தில் இவர்கள் மிகுந்த கவனம் செலுத்துவார்கள். சிறிய கேடுகளும் இவர்களுடைய நரம்புகளைப் பாதித்து ஜீரண உறுப்புகளைப் பாதிக்கும்.

குடல் பாதிக்கப்பட்டு அடிக்கடி மலச்சிக்கல், சீதபேதி போன்ற நோய்களால் துன்பம் கொள்ளுவார்கள்.

உப்புசங்கள், தோள்பட்டைகள் இவற்றைப் பாதிக்கும் நோய்கள் இவர்களுக்கு வரவாய்ப்பு உண்டு.

இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு மிகுந்த அளவில் சூரிய வெளிச்சம் மிகத் தேவை. நல்ல காற்றும் தேவை.

சுற்றுப்புறம் அமைதியுடன் இருந்தால்தான் இவர்களால் அமைதியுடன் வாழ முடியும். உடல் துன்பத்தை இவர்களால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

உடல் எப்போதாவது பாதிக்கப்பட்டால் திறந்த வெளிகளிலோ கிராமங்களிலோ சில நாட்கள் தங்கினால் நல்லது.

எப்போதும் இவர்கள் இளமை மாறாமல் வயதில் ஏற்றத்தை வெளிப்படுத்தாமல் தோற்றமளிப்பார்கள்.

மண வாழ்க்கையில் தோல்வியுற்றால் அதைத் தொடர்ந்து நோய்கள் இவர்களைப் பாதிக்கும்.

**வண்ணங்கள்**

மிக மங்கிய வண்ணங்கள் எதுவும் இவர்களுக்குப் பிடிக்கும். வெள்ளியைப் போன்ற நிறமும் பிடிக்கும்.

இந்த மாதத்தில் பிறந்த சிலர்

எலிசபெத் மகாராணி, சிரீடா கார்போ (நடிகை), அறிஞர் அண்ணா).

(தொடரும்)

# சிந்தனை செய் மனமே!

ஆலயம் செல்லும் போது அடிப்படை ஆடையோடு செல்வது நன்று. ஏனென்றால் உள்ளே, வெளியே என்ன இருக்கும் என்று கடவுளுக்குத் தெரியும். ஆகவே ஆடை அணிகலன் ஆடம்பரமும் ஆண்டவன் விரும்புவதில்லை என்பது போல் உணர்வு பூர்வ பக்தியோடு வணங்குவதற்கு சாதாரண ஆடை மட்டும் போதும்.

ஆடை ஆபரணங்களால் தேகத்தை மூடி மறைப்பதை விட உள்ளத்தை திறந்து உயிர்களை மதித்து, உணர்வளித்து, உபசரித்து பிச்சை என்று கேட்போருக்கு உதவி, புண்ணியத்தைத் தேடி சந்ததியை வாழ வைப்போம்.

சிவனின் உடலில் புலித் தோலாடையும் முருகனின் உடலில் வெறும் கோவணமும் ஏனை தெய்வங்கள் வெறும் நாலுமுழ வேட்டியும் அணிந்துதான் அனைத்து உயிர்களையும் காக்கின்றனர். நம்மைப் படைத்த கடவுளே சாதாரண ஆடையுடன் இருக்கும்போது நாம் மட்டும் ஏன் ஆடம்பரம் காட்ட வேண்டும். ஆலயம் சென்று வரம் கேட்பவர்களில் ஏழைகளே அதிகம் காணப்படுவர். நம்மவர்களில் சிலர் வசதியிருக்கென்று ஆணவம், அகம்பாவம் கொண்டிருப்பார்கள். ஆலயத்தில் ஒன்றுக்கும் வழி இல்லாமல் சில ஏழைகள் கடவுளை கையேந்தி உள்ளார். அப்படியிருக்கும் போது நகைகளை அள்ளி அடுக்கிப் போட்டுக்கொண்டு புதுப்புடைவை கட்டி அலங்கரிப்பது நியாயமா? கடவுளுக்கு அடுக்குமா?

பாடசாலையிலே அனைத்து மாணவர்களும் ஒரே நிற ஆடை அணிகிறார்கள். நகைகள் போட அனுமதியும் கிடையாது. ஏழை மாணவர்களின் மனம் வேதனைபடக் கூடாதென்றுதான் பாடசாலையிலும் இது போன்ற சட்டங்கள் விதித்துள்ளனர். அதுபோல் தான் ஆலயம் செல்லும் போதும் சாதாரணமாக சென்று உணர்வுபூர்வமாக கடவுளை வழிபட வேண்டும். அதைத்தான் கடவுளும் விரும்புவார். உலகிலே பணக்காரன் அதிகமா? அல்லது ஏழைகள் அதிகமா? என்று கேட்டால் ஏழைகள் தான் அதிகம். அந்த ஏழைகள் தங்கள் கஷ்டங்களைக் கொட்டித் தீர்ப்பதற்கு கோயிலுக்கு செல்வார்கள். கடன் வாங்கியாவது பொங்கல் படையல் வைப்பார்கள். அப்போது கடவுள் நம் கஷ்டங்களை தீர்க்காதா? என்று அப்படியொரு சூழலில் ஏழைகளின் உணர்வுகளை மதித்து அவர்களின் மனம் புண்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும். நம்மிடம் பண மிருக்கென்று, நகைகள் இருக்கென்று காதைச் சுற்றி, கழுத்தைச் சுற்றி நகைகளை அணிய வேண்டாம். எதுவும் இல்லாதவர்கள் இதுபோன்று எங்களுக்கு நகைகள் கிடைக்காதா? என்று ஏங்குவார்கள். ஆகவே ஏழைகளின் வாழ்வு மலர வேண்டும். அதற்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்வோம். ஆலயங்களில் அநாதைகளாக வாழும் பெரியோர்களை உபசரித்து உணவழிப்போம். உடுக்க உடை கொடுப்போம். எங்களை விட்டு இறைபதம் அடைந்த உறவுகளை நினைத்த கோயில்களில் அன்னதானம் கொடுப்போம். மறைந்த உயிர்களை மகிழ வைப்போம். மோச்சமடையச் செய்வோம். எம்மால் நன்மைகளைச் செய்து கடவுள் தருவதை சந்தோசமாக ஏற்று மன நிறைவோடு வாழ்வோம்.

நம் முன்னோர்கள் பேணிக் காத்து வந்த எங்கள் இனிய இந்து மதத்தை சீரழிந்து போகாமல் காத்து நின்று நல் பிள்ளைகளுக்கும் வருங்கால சந்ததியினருக்கும் சொல்லிக் கொடுத்து ஆதி அந்தம் இல்லா இந்து மதத்தை கண்போல் காத்து நிற்போம். அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள். அன்று அது பழைய பழமொழி. ஆனால் இன்று அப்படியல்ல. அநியாயங்களையும் அக்கிரமங்களையும் பார்த்துப் பொறுக்க முடியாமல் உடனுக்குடன் தண்டிக்கப் புறப்பட்டு விட்டார் கடவுள்.

நாம் யாருக்கு வேணுமென்றாலும் இந்த மண்ணில் கட்டுப்படாமல் வாழலாம். ஆனால் நம்மைப் படைத்த கடவுளுக்கு கட்டுப்பட்டே தீர வேண்டும். அலையின்றி ஓர் அணுவும் அசையாது. அவர்களை சீண்டினால் என்னவாகும் என்று அண்மையில் நடந்த ஆழிப் பேரலை சாட்சி. புல்லாப் பூடாய் புழுவாய் பறவையாய் மிருகமாய் நம்மைப் படைக்கும் மனிதராய் பிறந்ததிற்கு நாம் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆகவே நாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும். இனிவரும் காலங்களில் தீயென எண்ணாமல் பொறாமை கொள்ளாமல் அனைவரும் ஒன்றெனக் கலந்து கூன், குருடு, செவிடு யாவருக்கும் உதவி நின்று உறவுகளால் கைவிடப்பட்ட முதியோருக்குதவி நம் கிராமங்களில் பின்தங்கிய பாடசாலைகளை மேன்மையடையச் செய்து நம் வருங்கால சந்ததியினருக்கு கடவுள் பக்தியை உணர்த்துவோம்.

ஆர்.மணிமாறன்
மயிலங்காடு.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 109

## இலகுவாக உடல் நிறையை குறைத்துகொள்வதற்கான படிமுறைகள் - 4

நிறைகுறைப்பதற்கான ஊக்கத்தை வளர்த்தெடுத்து உணவுப்பொருட்களின் சக்திப் பெறுமானங்கள் பற்றிய அடிப்படை அறிவை வளர்த்துக் கொள்வது நிறைகுறைப்பின் ஒரு முக்கிய பநிலையாகும்.

விரும்பிய உணவுவகைகளை உண்ணமுடியாத ஒரு வாழ்க்கையின் அர்த்தம் என்ன? ஒரு நல்ல காரியத்திற்கு போனால் கூட அவர்கள்தருவதை உண்ண முடியாதா? வடை, பற்றீஸ், ஐஸ்கிறீம், பாயாசம், றோல்ஸ் என பல உணவுவகைகளை ஒறுத்து ஒரு சந்நியாச வாழ்க்கை வாழ்ந்து தான் நிறையை கட்டுப்படுத்த வேண்டுமா? இப்படி ஒரு நிறைக் குறைப்பு தேவை தான் என்று எல்லாம் மனம் சலித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

மேற்குறிப்பிட்ட உணவுவகைகளை உண்டும் நாம் அளவான நிறையைப் பேணமுடியும். துறவறம் பூண்டவர்கள் போல் இவை அனைத்தையும் ஒறுத்து வாழ வேண்டிய அவசியமில்லை. இந்த உணவுகளின் சக்திப் பெறுமானமும் (கலோரி) உணவிலே அவற்றை எவ்வாறு சமனிலைப் படுத்துவது என்ற அறிவும் இருந்தால் உங்கள் உணவிலே பொரியல், பாயாசம், ஐஸ்கிறீம், பற்றீஸ், வடை, லட்டு, ரோல்ஸ் போன்றவற்றை சேர்த்துக்கொள்வதில் பிரச்சினை இருக்காது. கல்யாண வீடுகளுக்குச்செல்லும் பொழுது கூட நாம்வடை பாயாசம்உண்ண முடியும்.

இந்த உணவுகளை உண்ணும் சந்தர்ப்பத்தில் உணவின் சக்திப்பெறுமானத்தை அல்லது கலோரிப் பெறுமானத்தை எவ்வாறு சமநிலைப்படுத்துவது? இவற்றால் ஏற்படும் நிறை அதிகரிப்பை எவ்வாறு தடுப்பது என்பது பற்றி நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

உதாரணமாக ஒருவர் வடை, ரோல்ஸ், ஐஸ் கிறீம் என்பவற்றை மேலதிகமாக உண்ண வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவற்றை மனச்சந்தோசமாக சுவைத்து உண்ட பின் அவரின் அடுத்த பிரதான உணவை பால், பழமாக மாற்றிக்கொண்டால் அது அவரின் சுகாதார நிலையிலோ நிறையிலோ பெரிய மாற்றத்தை ஏற்படுத்தமாட்டாது.

ஒரு உணவை நாம் உண்ணும் பொழுது அது எவ்வளவு சக்தியை எமக்கு வழங்குகின்றதோ அது அந்த உணவின் சக்திப் பெறுமானம் என்று சொல்லப்படும். இது கிலோ கலோரியிலே அளக்கப்படும். நாம் உண்ணும் உணவின் மொத்த சக்திப் பெறுமானம் எமது உடற் தேவைக்கு மேலதிகமாக இருப்பின் அது உடல் நிறையை அதிகரிக்கும். எமது உடலின் அன்றாட தேவைக்கு மேலதிகமாக உண்பதே உடல்நிறை அதிகரிப்பிற்கு காரணமாக அமைகிறது.

**ஒவ்வொரு உடலுக்கும் தேவைப்படும் கலோரியின் அளவு மாறுபடும். சராசரியாக ஒரு பெண்ணிற்கு தினம் தோறும் தேவைப்படும் சக்தியின் அளவு 1900 கிலோ கலோரி ஆகும். அதே போல ஒரு சாதாரண நிறை உயரம் உடைய நடுத்தர வயதுடைய ஆணுக்கு தினம்தோறும் தேவைப்படும் சக்தியின் அல்லது கலோரியின் அளவு 2500 கிலோகலோரி ஆகும்.**

உடலுக்கு தேவைப்படும் சக்தியின் அளவு அவரின் உயரம், வயது, நிறை, அவரின் தொழிற்பாடு வீதம் போன்றவற்றில் தங்கியிருக்கின்றது. நிறை குறைக்க விரும்பும் ஒவ்வொருவரும் தனது உடல்பராமரிப்புக்குத்தேவைப்படும் கலோரிப் பெறுமானத்திலும் பார்க்க குறைந்த கலோரிப் பெறுமானமுள்ள உணவை உண்டு வருவார்களாக இருந்தால் அவர்களது நிறைகுறைய ஆரம்பிக்கும்.

மனித உடம்பு ஒரு வினைத்திறன் கூடிய வாகனத்தை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து இதனை வடிவமைத்த இறைவன் எவ்வளவு ஒரு அற்புதமான கலைஞன் என்பது புலனாகின்றது.

ஒருவர் ஒரு சாதாரண தேநீர் அருந்தினால் அதில் உள்ள சக்தியில் அவரால் 3 கிலோ மீற்றர் ஓடமுடியும். ஒருவர் உடற்பயிற்சிக்காக தினமும் 3km தூரம் ஓடிவிட்டு அந்தக் களைப்பை போக்குவதற்கு மேலதிகமாக ஒரு தேநீர் அருந்தினால் அவரிலே எந்தவித சக்தி இழப்பும் ஏற்படமாட்டாது. எனவே இதன் காரணமாக எந்தவித நிறைகுறைவும் ஏற்படமாட்டாது.

**ஒவ்வொருவரும் தான் சேமித்து வைத்திருக்கும் சக்தியில் 6500 கிலோகலோரியை இழக்கும் பொழுது அவரின் நிறை 1kg இனால் குறைவடைகின்றது. அதாவது ஒருவர் உடற்பயிற்சி மூலமோ அல்லது உணவுக் கட்டுப்பாட்டு மூலமோ 6500 கிலோ கலோரி சக்தியை இழந்தால் அவரின் நிறை 1kg இனால் குறைவடையும்.**

ஒருவர்தனது உடற்தேவைக்கு மேலதிகமாக 50g சீனி சேர்க்கப்பட்ட தேநீரை அருந்துபவராக இருந்தால் அவரின் உடல்நிறை 30 நாட்களில் 1kg இனால் அதிகரிக்கும். அதேபோல அவர் 26 ரோல்ஸ்களை மேலதிகமாக உண்ணுவாராக இருந்தால் அவரின் நிறை 1kg இனால் அதிகரிக்கும். தினம் தோறும் ஒருவர் தனது உடற்தேவைக்கு மேலதிகமாக ஒரு தேநீரையும், ஒரு ரோல்ஸ் ஐயும் உண்டு வந்தால் 17 நாட்களில் அவரின் நிறை 1kg இனால் அதிகரிக்கும். அதாவது நாம் இடைநேரங்களில் உண்ணும் உணவுகளும் எமது நிறை அதிகரிப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன.

**ஒருவர் தான் வழமையாக நடக்கும் தூரத்திற்கு மேலதிகமாக 150km தூரத்தை நடந்தால் அவரின் நிறை 1 kg இனால் குறைவடையும். ஒருவர் உணவுக்கட்டுப்பாடு இன்றி உடற்பயிற்சி மட்டும் செய்து நிறையை குறைத்துக்கொள்வது கடினமாகும். எனவே நிறை குறைப்பு முயற்சிக்கு உடற்பயிற்சியும், உணவுக் கட்டுப்பாடும் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது.**

நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் ஒவ்வொன்றினதும் கலோரிப்பெறுமானம் என்ன என்பதை அறிந்து வைத்திருப்போமாக இருந்தால் எமது உடற்தேவைக்கு வேண்டிய உணவின் அளவை நாமே தீர்மானிக்க முடியும். நாம் உண்ணும் உணவின் அளவை மாற்றி நிறை குறைப்பையும் செய்து கொள்ள முடியும். நாம் உடலால் பருத்து அதனால் உண்மையில் பல வீனப்பட்டு பல நோய்களுக்கு ஆட்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருப்பதன் காரணம் என்ன?

விளை நிலங்கள் எல்லாம் தரவையாய் கிடக்க எமது உடம்பு மட்டும் விளைந்து போய் வாங்கிய உடற்பயிற்சி மிசின்கள் கூட சும்மா கிடக்க நாம் சும்மா இருப்பதே சுகம் என்று நினைக்கத் தொடங்கியதன் காரணம் என்ன?

நல்ல உடற்பயிற்சிகளாக அமையும் நடனம், நாட்டுக்கூத்து, மாவிடிப்பு, அம்மி அரைப்பு, சைக்கிள்சவாரி, உதை பந்து, கிட்டி, பொடிநடை, காவடி என எமது கலாசார மரபுகள் அருகிப் போய் எம்மை எதிர்நோக்கி நிற்கும் அபாயங்களை எல்லாம் மறந்து மகிழ்ந்திருக்கும் மன நிலை எப்படி வந்தது?

TV நாடகம் படம் பார்க்க, பேப்பர் படிக்க, வெட்டிப்பேச்சுக்கள் பேச, சும்மா இருக்க, தூங்க, சாப்பிட, கொம்பியூட்டர் பார்க்க, கைத்தொலைபேசி பேச என எல்லாவற்றிற்கும் நேரமிருக்கும் எமக்கு உடற்பயிற்சி செய்ய மட்டும் நேரமில்லாமல் போனது ஏன்?

சத்துமா பேணிகளில் தான் சத்து என்று சத்தியமும் செய்து கொண்டு நம் ஊர்க்கோழி முட்டைகளையும், உடன் பாலையும் ஆபத்தான உணவுகள் என அறிவித்துவிட்டு ஊதிப்போன உடம்பை குனிந்து பார்க்கவோ நிறுத்துப்பார்க்கவோ நேரமில்லாமல் அலைந்து திரியும் எம்மை தடுத்தாட்கொள்ளப் போவது யார்?

முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் பெயர்போனவர்கள் தியாகத்திற்கு சிகரம் வைத்தவர்கள் சேமிப்பிற்கும் கொடைக்கும் இலக்கணம் வகுத்தவர்கள், கல்வியில் கரை கண்டவர்கள் நினைத்த இலக்கை அடையும் வரை உழைக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் உடல் பருத்து உயிர்விடுவதா?

**நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம். அற்றான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற்பரிமாணங்களைப் பேணும் கலையை கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் எடுப்போம். இதைவான வழிமுறை மூலம் ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும் இந்த இலக்கை நோக்கி முன்னேறுவோம். மற்றவர்களையும் இந்த வழியில் செல்ல ஊக்குவிப்போம்.**

**உடற்பரிமாணங்களைப் பேணிவருபவர்களை பாராட்டி அவர்களின் வழிமுறைகளை நாமும் கற்றுக்கொள்வோம். வளர்ந்து வரும் சிறார்களின் மனதிலும் உடல்நிறை பராமரிப்பு சம்பந்தமான ஆர்வத்தைப் பதிக்க முயலுவோம்.**

**நிறை கூடிய எமது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஆலோசனை வழங்கி அவர்களையும் ஆரோக்கிய வாழ்விற்கு மீட்டெடுப்போம்.**



தற்பொழுது எம்மை ஆட்டிப் படைத்து வரும் நோய்களான உயர்குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்ரோல், புற்றுநோய், மாரடைப்பு, பாரிசவாதம், மூட்டு நோய்கள் போன்றவற்றிற்கெல்லாம் அடிப்படைக்காரணமாக இருக்கும் உடல்நிறை அதிகரிப்பு என்ற மாபெரும் விருட்சத்தின் வேரறுக்க நாம் அனைவரும் கைகோர்ப்போம்.

எமது உடல்நிறையை நாமே குறைத்துக்கொள்வதும் மற்றவர்களையும் அவ்வாறு செய்வதற்கு ஊக்குவிப்பதும் ஒரு உன்னதமான சமூக சேவையாகும். இது சமூகத்திலே பல துயரமான சம்பவங்களை தவிர்ப்பதற்கு உறுதுணையாக அமையும்.

**Dr. சி. சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்.**


**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

# சர்வதேச விசாரணை சாத்தியமில்லை!

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கைப் படையினர் பாதுகாக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதி மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாக்குறுதியின் மூலம் சர்வதேச விசாரணை சாத்தியமில்லை என்பதை இலங்கை அரசு உலகிற்கு அறிவித்துள்ளது.

"நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் வரை போர்க்குற்ற நீதிமன்றில் படையினரை நிறுத்த அனுமதிக்கமாட்டேன்" என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.



## நிதியைப் பெறுபவர்கள் நீதியைப் பெறுவதில் தவறில்லை

கொழும்பிலுள்ள இலங்கை இராணுவ வைத்தியசாலை அரங்கில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இலங்கை இராணுவக் கட்டளை அதிகாரிகள், மற்றும் சார்ஜன்ட், மேஜர் தர அதிகாரிகள் 350 பேரை ஜனாதிபதி மைத்திரி சந்தித்த போதே இவ்வாறு வாக்குறுதி வழங்கினார்.

பாதுகாப்புப் படையினரை பாதுகாப்பேன் என்று ஜனாதிபதி இதற்கு முன்னரும் பலமுறை வாக்குறுதியளித்திருந்தார்.

அரச படையினரை அரச தலைவர் என்ற ரீதியில் பாதுகாப்பேன் என்று மைத்திரி கூறுவதில் குற்றம் கண்டுவிட முடியாது.

படையினர் உட்பட அனைத்துப் பிரஜைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. அதில் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படையினரையும் பாதுகாப்பேன் என்ற தொனியில் வாக்குறுதி வழங்குவதைத் தான் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அதேவேளை இலங்கை நீதித்துறை மீது நம்பிக்கை இழப்பதற்கும் வெளிநாட்டு நீதிமன்றங்களை தமிழ் மக்கள் நாடுவதற்கும் அரச தரப்பினரே காரணம்.

அது மட்டுமின்றி குற்றம் சாட்டப்பட்ட தரப்பே விசாரணையை முன்னெடுப்பது இயற்கை நீதிக்குப் புறம்பானது.

பச்சிளம் குழந்தைகள் முதல் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் வரை வகை தொகையின்றி கொன்று குவித்த அரச படையினர் மீது இலங்கையில் விசாரணை நடத்தப்பட்டால் சாட்சிகள் அச்சுறுத்தப்படுவர். அழிக்கப்படவும் வாய்ப்புள்ளது.

காணாமற் போனவர்களைக் கண்டறியும் நோக்குடன் அமைக்கப்பட்ட ஜனாதிபதி (பரணகம) ஆணைக்குழுவிலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சாட்சியப் பதிவின் போதும் அரச படையினர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ள அதேவேளை சாட்சிகள் உயிரச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் நிலையும் உருவானது.

போரிலே உறவுகளைக் காவுகொடுத்துவிட்டு எஞ்சியவர்களைப் படையினரிடம் கையளித்துவிட்டு அவர்கள் எங்கே என்று ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு அரச தலைவர்கள் உரிய பதிலை வழங்கவில்லை.

ஆனால், போர்க்குற்றங்களில் ஈடுபட்ட படையினர் பாதுகாக்கப்படுவார்கள் என்று மாதம் ஒரு தடவை வாக்குறுதி வழங்கப்படுகிறது.

முப்பது ஆண்டுகள் நீடித்த தமிழின அழிப்புப் போரிலே பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணீர் விடும் நிலைநீடிக்க போர்க்குற்றங்களில் ஈடுபட்ட படையினரை நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை பாதுகாப்பேன் என்று மைத்திரி கூறுவது வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சும் வேலை.

நல்லிணக்கம், நீடித்த சமாதானம் என்று மேடைகளில் பேசுவதன் மூலம் இனங்களுக்கு இடையே அவற்றை ஏற்படுத்திவிட முடியாது. செயலில் காண்பிக்க வேண்டும்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட அரச படையினர் மீதே விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அனைத்து அரச படையினர் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரவில்லை.

அதேவேளை உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் நம்பிக்கையிழக்க சிங்களத் தலைவர்களே காரணம்.

இதனை சிங்களத் தலைவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

உள்நாட்டு நீதிபதிகள் மூலம் விசாரணை நடத்தப்பட்டால் தேவையற்ற மோதல்கள் ஏற்படும்.

சிங்கள நீதிபதிகள் தலைமையில் விசாரணை நடத்தப்படுவதை தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள்.

அதேவேளை தமிழ் நீதிபதிகள் தலைமையிலான விசாரணையை சிங்களவர்கள் ஏற்கமாட்டார்கள்.

சிங்கள மக்கள் ஏற்றாலும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் பாரிய வன்முறைகளைத் தோற்றுவிப்பர்.

அதுமட்டுமின்றி சிங்களப் படையினரை தூக்கிலிடப் போகின்றனர் என்று பௌத்த பிக்குகளையும் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களைக் கொண்டு விசாரணையைத் தடுத்து நிறுத்த முற்படுவர்.

எனவே, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, நோர்வே, இந்தியா போன்ற சர்வதேச ரீதியில் தற்போது ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் நட்பு நாடாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் இலங்கை, அந்நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளை விசாரணைக்கு நியமிக்கலாம்.

சர்வதேச நாடுகளிடம் நிதி யுதவி பெற்றுக்கொள்ள தயக்கம் காட்டாத இலங்கை அரசு நீதியைப் பெற்றுக் கொள்ள ஏன் தயக்கம் காட்ட வேண்டும்.

இலங்கைக்கு தற்போது நிதியைவிட நீதிதான் தேவைப்படுகிறது.

நீதி மறுக்கப்பட்டதால் தான் மூன்று தசாப்த கால உள்நாட்டு யுத்தம் இலங்கையில் நீடித்தது.

இதன் தாக்கம் இன்னும் ஓயவில்லை. வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இதனை உணரமுடியும்.

போர் ஓய்ந்து 8 ஆண்டுகள் கடந்துவிட்டது உண்மையே. ஆனால், போர் தந்த பாதிப்பு இன்னும் மறையவில்லை.

மறைவதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படவில்லை.

இனிவரும் காலங்களில் ஏற்படுத்தப்பட்டால் தமிழ் மக்கள் அதற்குத் தடையாக இருக்கமாட்டார்கள்.

எனவே, சர்வதேச நாடுகளிடம் பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துவதில் காட்டும் அக்கறையில் ஒரு வீதத்தையேனும் போரால் பாதிக்கப்பட்ட; இன அழிப்புக்கு உள்ளான தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் காண்பிக்க வேண்டும்.

அதைவிடுத்து போர்க் குற்றங்களில் ஈடுபட்டாலும் படையினரைப் பாதுகாப்பேன் என்று ஆயுதங்களுடன் உள்ளவர்களிடம் அரச தலைவர்களே வாக்குறுதி வழங்குவது வன்முறைக்கே வித்திடும்.

எஸ். ஆர். கரன்

# facebook மனிதம்



விஸ்வா அந்த மனிதனின் முதுகில் தட்டி எழுப்பப் பார்த்தான். அவன் அசையவில்லை. ஒரு வேளை இறந்து விட்டானோ என நான் நினைத்தேன். விஸ்வா அந்த மனிதனின் முதுகில் திரும்பவும் தட்டி ஆங்கிலத்தில் ஹாய்! நீ கெதியிலை எழும்பு நீ இப்படி குளிரில் படுத்தால் செத்துப்போவாய் என்றான் விஸ்வா.

விஸ்வாவின் உரத்த குரல் கேட்டு அந்த மனிதன் மெதுவாக தன் முகத்தில் மூடியிருந்த போர்வையை நீக்கி எங்களைப் பார்த்தான்

ஹலோ உனக்குப்படுக்க வேறு இடமில்லையா?. ஏன் இங்கை இந்த குளிரில் படுத்திருக்கிறாய். பொலிஸ் கண்டால் உன்னை ஸ்டேசனுக்கு கூட்டிப்போய் விடும். நீ வா எங்களோடு. உன்னை வீடு இல்லாதவர்கள் இருக்கும் இடத்துக்கு கூட்டிச் செல்கிறோம். நீ இப்படி இருந்தால் செத்துப் போவாய்." என்றேன் நான்.

அவன் பதில் சொல்லவில்லை. அவன் மெதுவாக நடுங்கிய படி எழும்பினான். நாங்கள் இருவரும் அவன் கைகளைப் பிடித்து என் காருக்கு அழைத்துச் சென்றோம். அவன் நடக்கக் கஷ்டப்பட்டான். அவன் உடல் குளிரில் நடுங்கியது அவனுக்கு எழுபது வயது இருக்கும். தாடி வளர்ந்து இருந்தது. அவன் உடலில் ஒரு கிழிந்த கம்பளித் துணி அது அவனை குளிரில் இருந்து பாது காத்தது. கைக்கு குளிர் தாங்க கைஉரை இல்லை. காலில் ஒரு கிழிந்த சப்பாத்து. தலையில் ஒரு பழைய கம்பளித் தொப்பி. எந்த புண்ணியவான் கொடுத்ததோ தெரியாது ஹிப்பியை போல் நீண்ட முடி. அவனிடம் இருந்து சிகரெட் வாசனை வீசியது..

வாகனத்தில் போன யாரும் நிறுத்தி அந்த மனிதனுக்கு உதவ முன் வரவில்லை. எல்லோருக்கும் ஏதோ அவசரம்.

போகும் வழியில் நாங்கள் எங்கள் காரை நிறுத்தி டிம் ஹார்டன்ஸ் உணவகத்தில் பேகேல் மற்றும் காப்பி வாங்கி கொண்டு மனிதனை வீடற்றவர்கள் இருக்கும் லொட்ஜுக்கு கூட்டிச் சென்றோம்

நான்லொட்ஜுக்கு மேற்பார்வையாளரைச் சந்தித்து அந்த மனிதனின் நிலைமையை விபரமாகச் சொன்னேன். அவர் அந்த மனிதனின் நிலை அறிந்து லொட்ஜுயில் சேர்க்க சம்மதித்தார் ஒரு உயிரை காப்பாற்றியதுக்கு எங்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

நான் கொடுத்த காப்பியை குடித்து. பேகலை உண்ட பின் அவர் முகத்தில் ஒரு சிரிப்பு வந்தது.. படுக்கையில்இருந்தபடி அவர் பேசத் தொடங்கினார் .

தங்கியூ சேர் என்றான் அந்த மனிதன் நீ யார். உன் பெயர் என்ன? என்று கேட்டேன். அவன் திரும்பவும் சிரித்தபடி என் பெயர் ஒஜிமா என்றான் அதன் அர்த்தம் என்ன விஸ்வா கேட்டான் .மன்னன் என்பது அர்த்தம் அவன் பதில் சொன்னான் யாருக்கு மன்னன்? விஸ்வா சிரித்தபடி அவனைக் கேட்டான்

கிரெடிட் ரிவர் பகுதிக்கு மிசிசாகாவில் உள்ள கிரெடிட் ரிவரா? ம் ம் அப்ப நீ மிசிசாக பழங்குடியினத்தவனா? நான் கேட்டேன்

ம்ம்.. என்று அவனிடம்இருந்து வாய் பேசாமல் பதில் வந்தது நான் விஸ்வாவை பார்த்தேன்.

இருக்கலாம் தாத்தா , அவன் தோற்றம் மிசிசாகாவின் பழங்குடியினத்தவன் போல் இருக்குது. இந்த இனத்துக்கென்ற பாரம்பரியம் இருக்கிறது எங்கள் ஈழத் தமிழர்களின் பாரம்பரியத்தை போல்.

நீங்கள் இருவரும் இலங்கை தமிழர்களா? ஒஜிமா எங்களைக் கேட்டான்ஏன் கேட்கிறாய் ஒஜிமா? நான் அவனிடம் கேட்டேன்.

எனக்கு உங்கள் இனத்தின் வரலாறு ஓரளவுக்கு தெரியும்" எப்படித் தெரியும். நீ பல ஆயிரம் மைல்களுக்கு இப்பால் இருக்கிறாயே?

என்னோடு செக்யூரிட்டி கார்டாக வேலை செய்த பாலன் என்பவன் சொன்னான்.

யார் பாலன்? அவன் உங்கள் இனத்தின்உரிமைக்காக போராடிய ஒரு போராளி. போர் முடிந்தும் உயிர் தப்பி கனடா வந்தவன். நல்லவன். உண்மையே பேசுவான். அவன் ஈழத் தமிழர் வரலாறு பற்றியும் போரைப் பற்றியும் உங்கள் தலைவர் பற்றியும் கதை கதையாய் சொல்லுவான் உங்கள் இனத்தின் உரிமைகளையும் பாரம்பரித்தையும் பாதுகாக்க பல ஆண்டுகளாக போராடி வருகிறது உங்கள் இனம். எங்கள் மிசிசாகா இனத்தை போன்றது.

கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. ஓஜிமா. சரி சுருக்கமாக உன் மிசிசாகா பழங்குடி இனத்தைப் பற்றி சொல்லு கேட்பம்.

ஏன் கேட்கிறீர்கள் சேர்? காரணம்இல்லாமல் கேட்பேனா?. நான் ஒரு இரு மொழி எழுத்தாளன். உனது கதையைக் கேட்டு எமது கதையோடு ஒப்பிட்டு ஒரு புதுமையான நாவல் ஒன்றை உருவாக்க நினைகிறேன்"

'அப்படியா? அது நல்லது என்றபடியால் சொல்லுகிறேன் கேளுங்கள். விஸ்வா என்னைப் பார்த்து தாத்தா : நீங்கள் போக இருந்த நிகழ்ச்சிக்கு உங்களால்வர முடியாது என்றுபோன்செய்து சொல்லுங்கோ.

**(அடுத்தவாரம் தொடரும்)**


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1247

Search for people, places and things | Nagendram Home

### சரவணபவன் சாம்பவன்




### தீபன்




### வின்சன்




### மாணிக்கவாசகர் கஜிந்




### இராஜேஸ் கரன்




### ராகுலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இப்படை வெல்லும்





**திரைவிமர்சனம்**

இப்படை வெல்லும் என சற்று திரும்பி பார்க்கும் வகையில் உதயநிதி, மஞ்சிமா நடிப்பில் வெளியாகியிருக்கும் இப்படம் திகைப்பை கூட்டுமா. போட்டி படங்களை வெல்லுமா? திரை விமர்சனம் இதோ.

உதயநிதி ஹீரோவாக நடிக்கும் இக்கதையில் அம்மா ராதிகா பஸ் ஓட்டுநர். மகன், இரு மகள்களை காப்பாற்றி வருகிறார்.



உதயநிதி சாப்ட்வேர் கம்பெனியில் நல்ல சம்பளத்தில் இருக்கிறார்.

நன்றாக லைஃப் போய்க் கொண்டிருக்கும் இவருக்கு திடீரென வேலையை இழக்கும் சூழ்நிலை உண்டாகிவிட்டது.

தன் தோழியான மஞ்சிமாவுடன் காதல் ஒரு பக்கம். இவர்களின் காதல் போலிஸ் அதிகாரியாக இருக்கும் மஞ்சிமாவின் அண்ணன் ஆர்.கே.சுரேஷ்க்கு தெரியவர கதை சூடுபிடிக்கிறது. கல்யாணம் செய்துகொள்ள முடிவெடுக்கும் இவர்கள் வாழ்க்கை குழப்பத்திற்கு நடுவே செல்ல, உதயநிதி ஒருநாள் இரவில் காரில் செல்லும்போது திடீரென விபத்து ஏற்படுகிறது.

பொலிஸாருக்கு பெரும் சவாலாக இருக்கும் சோட்டாவுக்கு உதவி செய்யப்போய் உதயநிதி பொலிஸ் வலையில் சிக்குகிறார். இதே போல தான் சூரிக்கும்.

இருவரையும் பொலிஸ் விரட்டுகிறது. இதோடு இவர்களை கொல்ல வேறொரு சதியும் பொலிஸ் வட்டாரத்திற்குள் நடக்கிறது.

நடப்பது எதுவும் தெரியாமல் பதிவாளர் அலுவலக வாசலில் காத்திருக்கிறார் மஞ்சிமா. கடைசியில் திருமணம் நடந்ததா, உதயநிதி, சூரி பொலிஸிடமிருந்து தப்பித்தார்களா, சோட்டா பொலிஸில் சிக்கினாரா என்பது தான் கதை.

உதயநிதி அடுத்தடுத்து படங்களை தயாரித்தும் நடித்தும் வருகிறார். சரவணன் இருக்க பயமேன் படத்திற்கு பிறகு இப்படத்தில் மீண்டும் ஒரு சாஃப்ட் ஆன ஹீரோ. நடிப்பெல்லாம் ஓகே தான்.

ஆனால் அவர் இன்னும் முயற்சி எடுத்தால் வேறு கதாபாத்திரங்களில் ஜொலிக்கலாம். அவரின் வழக்கமான படங்கள் போல அதிகமான டூயட் எல்லாம் இப்படத்தில் இல்லை.

மஞ்சிமா தன் அண்ணன் எதிர்த்தாலும் காதலில் ஜெயிக்க வேண்டும் என காட்டும் சீரியஸ்னஸ் சில இடங்களில் சற்று தொய்வு அடைந்துவிட்டதோ என தோன்றுகிறது. ஆனால் கடைசியில் உதயநிதிக்கு ஆதரவாக இவர் செய்யும் வேலைகள் கொஞ்சம் இம்ப்பிரஷ் செய்கிறது.

உதயநிதி, சூரி காமெடி செண்டிமெண்ட் இப்படத்திலும் தொடர்ந்துள்ளது. சூரி ஆஸ்பத்திரியில் செய்யும் அலம்பல் தியேட்டரில் உட்கார்ந்திருக்கும் அனைவரையும் சிரிக்க வைத்தது.

படம் முழுக்க இவரும் ட்ராவல் ஆகிறார். இருவரும் சேர்ந்து வேறு எதையோ மனதில் வைத்து பேச பொலிஸ் அதை சீரியஸாக எடுத்துக்கொண்டு செய்யும் விதம் காமெடி காட்சிகள் ஒர்க்கவுட் ஆனது.

டேனியல் பாலாஜி ஒரு தனி ட்ராக். தன் அடுத்தடுத்த பிளானால் கொஞ்சம் பதட்டம் கூட்டுகிறார். ஜெயிலில் இருந்தவர் எப்படி வெளியே வந்தார், தலைமறைவாக இருந்தவர் எப்படி பொலிஸால் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டார் என கதை கொஞ்சம் பாஸ்ட் மூவிங் தான்.



காட்சிகளை படமாக்கிய விதம், கோர்வை செய்தது எல்லாம் ஓகே. படத்தின் ஆரம்பத்தில் ஏதோ அறிஞர்கள், வரலாற்றில் இடம் பிடித்தவர்கள் பலரை காட்டி கதைக்குள் எதையும் வைக்கவில்லையோ என தோன்றுகிறது.

இப்படத்திற்கு இமான் தான் இசையமைத்தாரா என கேட்கவைக்கிறது. அவரும் கதைக்கு பின்னால் ஒளிந்து கொண்டாரோ?. இப்படத்தில் அவர் ஏதாவது ஒரு பாடலை ஹிட் லிஸ்டில் இடம்பெற செய்வாரா என்றால் கேள்விக்குறி தான்.

நடிப்பில் அனைவரும் அவரவர் கொடுத்த ரோலை செய்திருக்கின்றனர். மெயினான ஒரு டெக்னாலஜி விசயம் - அது தான் துப்பு. அதை வைத்து சஸ்பென்ஸ் மெயிண்டெயின் பண்ணியிருக்கிறார்கள்.

போர் அடிக்கும் ஃபீலிங் இல்லை. சூரி, எம்.எஸ்.பாஸ்கர் இருவரும் காமெடியில் ஸ்கோர் அள்ளுகிறார்கள்.

ராதிகா பிள்ளைகள் மீது பெற்றவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என ஹைலைட் செய்கிறார்.

உதயநிதி போதும் இப்படியே ட்ராவல் ஆவோம் என ஸ்டராட்டெர்ஜி வைத்துள்ளாரோ என கேள்வி எழுகிறது.

வில்லன் சோட்டாவின் பின்னணி என கடைசியில் சொல்லாமலே விட்டுவிட்டார்கள். லிங்க் கட்டாகிவிட்டது.

சீரியஸாக கொண்டு போய் கடைசியில் சிம்பிளாக முடித்துவிட்டார்கள். மொத்தத்தில் இப்படை வெல்லும் நல்ல பொழுது போக்கு. விலை கொடுத்து டிக்கெட் வாங்கலாம்.

